www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

பக்கம் 20
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பெப்.13-19,1994 ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 38




## அரசியல் சதுரங்கத்தில் ஆயர்கள்!
-அரசியல் அலசல்-





## உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் உயிர்பெற்றுவரும் குறுகிய வாதங்களும்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

லேடீஸ் ஸ்பெசல் சிறுகதைகள்

எவரும் வாய் திறக்கக்கூடாது!
தமிழ்பேசும் மக்களின்
பொது வேட்பாளர் நாங்களே!!



கொலை விழும் நேரம்
புதிய இளமைத்தொடர் ஆரம்பம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## மற்றவர்களை குற்றவாளியாக்கும் நீ

**"நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப் படாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" மத் 7:1**

நாம் என்ன செய்கிறோம் என்பதனைவிட மற்றவன் என்ன செய்கிறான் என்பதை கவனிப்பதே இன்று எம்மவரின் கைவந்த கலையாகிவிட்டது. மற்றவனின் பிழைகளை சுட்டிக்காட்டும் எம் கண்களுக்கு நாம் செய்யும் குற்றங்கள் மறைக்கப்படுகின்றன.

"உன் கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல் சகோதரன் கண்ணிலுள்ள உத்திரத்தை பார்ப்பதென்ன" என்று நமதாண்டவராகிய இயேசு கூறியுள்ளார்.

இதன் முடிவு என்ன? குற்றவாளியாக தீர்க்கப்படுகிறவன் தன் குற்றத்தை உணர்ந்து தன்னை திருத்தி மேன்மையடைகிறான். குற்றப்படுத்துகிறவன் திருத்தப்படாத குற்றவாளியாகவே இருக்கிறான்.

"அவனவன் தன் தன் சுயகிரியையை சோதித்துப் பார்க்கக்கடவன். அப்பொழுது மற்றவனைப் பார்க்கும் போதல்ல, தன்னையே பார்க்கும் போது மேன்மைபாராட்ட இடமுண்டாகும்." என கலாத்தியர் 6:3ல் கூறப்பட்டுள்ளது.

நாமும் மற்றவனைப் பற்றி தேடி ஆராய்ந்து விமர்சிப்பதைவிட எமது கிரியைகளை சோதித்து பார்த்து அறிந்து கொண்டால் வாழ்வில் பெரும்பாலான பிரச்சனைகளுக்கு தீர்வினை கண்டுவிடலாம். நாம் மற்றவனை குற்றவாளியாக தீர்ப்பது எம் இரு கண்களால்; மற்றவர்கள் எம்மை பார்ப்பது பல கண்களால் என்பதையும் மனதில் கொண்டு, எம்மை நாமே சோதித்தறிந்து மேன்மையடைவோம்.

-ஜே.புளோரன்ஸ்-
கெங்கல்ல.

# ஆன்மீகம்

## புறம் பேசாதீர்கள்!

**"உங்களுள் உள்ள விரோதத்தால் உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசிக்கொள்ளாதீர்கள். (ஏனெனில்) மரணித்துக் கிடக்கின்ற உங்கள் சகோதரனின் இறைச்சியை உங்களில் யாரும் (பிய்த்துத்) தின்பதற்கு விரும்புவீர்களா..? (நீங்கள் புறம் பேசுவதும் இதுபோன்றதேயாகும்)**

**-அல்குர்ஆன்-**

புறம் பேசுவதென்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா? என நாயகம் (ஸல்) ஸஹாபாக்களிடம் கேட்டார்கள். அல்லாஹ்வும் றஸுலுமே மிகவும் அறிந்தவர்கள் என்று ஸஹாபாக்கள் விடையளித்தார்கள். உங்களில் ஒருவர் தன் சகோதரர் வருந்தும்படியான ஒன்றைக் கூறுவதுதான் புறம் பேசுதல் எனப்படும் என நபியவர்கள் நவின்றார்கள். அப்போது அங்கிருந்த ஒருவர் "நான் கூறும் குறை என் சகோதரரிடம் உண்மையிலேயே காணப்படுமாயின் அதுபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்" என்று கேட்டார். நீர் கூறியது நிச்சயமாக அவரிடம் இருக்கும் பட்சத்தில் நீர் அவரைப்பற்றிப் புறம் பேசியவராவீர். அன்றி நீர் கூறியது அவரிடம் காணப்படவில்லையானால் நீர் அவர்மீது அவதூறு கூறியவராவீர் என்று நபி(ஸல்) நவின்றார்கள்.

ஒரு சமயம் அபூபக்கர் சித்தீக்(றழி) அவர்களும், உமர் (றழி) அவர்களும் ஒருவரைப்பற்றி "இன்னார் அளவுக்கதிகமாகத் தூங்குகின்றார்." என்று கூறிக்கொண்டே நடந்து சென்று கொண்டிருந்தார்கள். பின் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் வந்து உணவிற்காக வேண்டிக் கொஞ்சம் கறிவேண்டும் என்றார்கள். அதற்கு நபியவர்கள் நீங்கள்தான் சற்று நேரத்திற்கு முன்னால் கறி சாப்பிட்டீர்களே! என்றார்கள். "நாயகமே! நாங்கள் எங்கே கறி சாப்பிட்டோம். தற்போது அப்படி ஒன்றும் சாப்பிடவில்லையே" என்று வியந்து பதிலளித்தார்கள். "இல்லை இல்லை நீங்கள் உங்கள் சகோதரனின் கறியைச் சாப்பிட்டீர்கள். (அதாவது உங்கள் சகோதரனைப் பற்றிப் புறம் பேசினீர்கள்) புறம் பேசுபவரும் அதனைக் கேட்பவரும் இக்குற்றத்திலே சமமானவர்களே! என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். அப்போதுதான் அவ்விருவருக்கும் தாம் பேசிக்கொண்டிருந்த விடயம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே வருத்தப்பட்டு பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னிலையில் வெட்கித்துத் தலை குனிந்தார்கள்.

புறம் பேசுதல் என்பது நாவினால் மட்டும் உண்டாவதில்லை. அது கண்ணாலும், காதாலும், கையாலும், சைகையாலும், மனதாலும், எழுத்தாலும் கூட ஏற்படும். இப்படி உண்டாகும் இவையாவுமே ஹராமாகும்.

தொகுப்பு: செல்வன் மசூத் அஹமத்
காத்தான்குடி-03.



# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வடக்கு-கிழக்கில்
உள்ளூராட்சி சபைத் தேர்தல்
பிரச்சாரங்கள்
மெல்ல-மெல்ல சூடுபிடித்து வருகின்றன.

ஒற்றனின் நகர ரவுண்டப்பில்
ஒரு வேட்பாளரின் தகுதி
தோலுரித்துக் காட்டப்பட்டிருந்தது.

உடனே நமது திருமலை நிருபரும்
வேறு பல நண்பர்களும்
ஒற்றனை பாராட்டிவிட்டு
இன்னொரு உண்மை சொன்னார்கள்.
"அநேகமாக நமது வேட்பாளர்கள் பலர்
ஒற்றன் குறிப்பிட்ட நபர் போலவே
தரம் தாழ்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்."
உண்மைதான்- நியாயம்தான்.
நேற்றுவரை நீயாரோ நான் யாரோ
இன்று முதல் நாம் வேறோ நீ வேறோ
என்று பாடாத குறைதான் பாக்கி.
பட்டியலை நிரப்ப-முன்னர்
எந்தப் பக்கம் நின்றவர்கள் என்று பாராமல்
இழுத்துவந்து நிறுத்திவிட்டு
பொது வேட்பாளர்கள் என்றும்
நல்லவர்கள்-வல்லவர்கள் என்றும்
நற்சான்றுப் பத்திரமும் தரப்படுகிறது.

தேர்தலில் வெற்றி பெறுவதோ
தோல்வி பெறுவதோ
பெரிய விசயமல்ல.

ஜனநாயகத்தில்
வெற்றி-தோல்வியை ஏற்று
செயற்படுவதே முறை.

ஆனால்-
தேர்தலில் ஏன் போட்டியிடுகிறோம்?
தமிழ் பேசும் மக்களது
அரசியல் அபிலாசைகளை-இதுவரை
சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம்
வெளிப்படுத்தப்பட்ட நியாயங்களை
சேதப்படுத்திவிடாமல்-
மக்களது உணர்வுகளை வெளிப்படுத்தும்
ஜனநாயக அரங்காக
தேர்தலை பயன்படுத்த
தமிழ் கட்சிகள் தவறிவிட்டன.

ஒற்றுமையின்மையும்-
எனக்கா-உனக்கா என்ற போட்டியும்
உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை
அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து
அவற்றுக்கு
மக்கள் அங்கீகாரத்தை பெற்று
அரசுக்கும்-வெளியுலகுக்கும்
மக்கள் உணர்வினை வெளிப்படுத்தும்
வழிமுறை காணாமல் தடுத்துவிட்டன.

ஒற்றுமையின்மையும், புரிந்துணர்வின்மையும்
அரசியலை மட்டுமல்ல
தமிழ் பேசும் மக்களது
தலைவிதியையும்
விளையாட்டாக்கிவிட்டன.

■

ஆன்மீகம் பகுதியில்
இந்துமத சிந்தனை நிறுத்தப்பட்டது ஏன்?
என்று சில மடல்கள் விசாரித்துள்ளன.

மகாபாரதத் தொடர் இடம்பெறுவதால்
இந்து சமயத்தவர்கள்
புரிந்துகொள்ளுவார்கள்
என்ற நம்பிக்கை உண்டு.
மகாபாரதம் சகல மதத்தவராலும்
மகிழ்வுடன் நோக்கப்படுவது
என்றாலும் கூட
அது இந்து சமய இதிகாசம்தானே!

முரசு மதப் பத்திரிகையல்ல..
ஆனால்-
மத உணர்வுகளை மதிக்கத்தெரிந்த
பத்திரிகை.
எந்த மதத்தையும்
உயர்த்துவதோ-தாழ்த்துவதோ
முரசுக்கு சம்மதமில்லாதது.

பௌத்த மத சிந்தனைக்கும்
முரசு இடம் தரும்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-35

### வந்து குவிந்த கவிதைகளில் வெற்றிபெற்றதுவும்—வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**துப்பாக்கி விசாரிப்பில்
பொட்டிழந்த பாவையரின்
கண்ணீரைச் சேமித்தால்
நம் தீவில்
மின்சார வெட்டெதற்கு?**

எஸ். புஸ்பானந்தன்
மண்டூர்.

### வியக்கப்பட்ட கவிதைகள்

**கண்ணீரிலே தாமரைப்பூ**
ஆத்மாவின் முகாரி-அவள்
கண்களில் பிறக்கிறது
அழிக்கப்பட்ட
அவள் உலகில் கண்ணீரே
வேதனைத் தீயை வளர்க்கிறது.
-ஷர்மி, கண்டி-

கொடிது கொடிது-இளமையில்
கணவனை இழப்பது கொடிது!
எப்.இனாமுல்லாஹ்-அக்குறணை.

**நிரந்தரம்**
அமைதியில்லா நாட்டில்
அவலங்கள் நிரந்தரமே!
ச.மகாலிங்கம்
வெளிமடை.

**மரணம்**
காலமகள் செய்த
கொடுமைகளை நினைத்து..
காரிகையிவள்...
கண்ணீர் வடிக்கிறாளோ?
பஜ்ரியா மர்ஸுக்-தர்ஹா நகர்.

தேசம் ரத்தத்தால்
இன்னுமொரு
பொட்டிட்டுக் கொண்டதனால்..
இதோ-
இன்னுமொரு
பொட்டிழந்த நிலா!
செல்வி.விஜிதானந்தி-மண்டூர்.

**தவிப்பு**
தாய்க்குலம்
தவிக்குது!
சேய்க்குலம்
கொதிக்குது!
அதிகாரம்
பறிக்குது!
அமைதிதான்
வெறுக்குது!
ஏ.எம்.அப்துல் றகுமான்
சிறாஜ் நகர்.

பாசம்
மறக்கப்பட்ட
தேசத்தின்
சோகம்.
தெரிகிறதே
உங்களின்
முகத்திலே!
ச.தஜானி
ஆரையம்பதி-03.

**நவீன மோனாலிசா**
கல்லறையைத் தட்டி
ஓவியம் கேட்டபோது
லியனார்டோ தந்த
நவீன மோனாலிசா!
எம்.இம்தியாஸ்
வெலம்பொட.

**விதி**
மனிதாபிமானம்
மறைந்து விட்ட
மானுடச் சந்தையிலே
மலிவாகிவிட்ட உயிர்கள்
விலைபோவது கண்டு
அழுதென்ன லாபம்?
பூபா.புவன்-திருமலை.

**புதுமைப் பெண்**
பாரதி பாடிய
புதுமைப் பெண்
ஆம்-
நாங்கள்
அழுதுகொண்டிருப்பதும்
"புதுமை"தானே.
அப்துல் பாஸிர்
காத்தான்குடி-03.

**மாறாத கொடுமை**
பேயும் இரங்கியது;
பாரில் மகளீர்க்காய்
ஒயும் பணம் பதவி
ஒன்றுக்காய் இன்றுலகில்
மாயுதன்னாய்; பல்லுயிர்கள்
மாறாதோ இக்கொடுமை?
ச.மோட்சநாதன்
துறைநீலாவணை.

**இழப்பு**
நம் இதயக் குமுறலின்
அழுகைக் காட்சி!
நம்மில் ஏற்பட்ட
இழப்புக்கு சாட்சி!!
திருமதி.பூமா பாயிஸ்
கோட்டே.



வெள்ளம் தந்த கண்ணீரா இது?
இல்லை,
வன்முறையால் வந்த கண்ணீரா?
வெள்ள நீரும், இரத்த ஆறும்,
உன் கண்ணீரில் அல்லவா தோற்றுப்
போகிறது!
மொஹொமெட் றஸான்-அக்குறணை.

**புலம்பிடவோ?**
பாரினிலே,
பத்துமாதம் சுமந்து பெற்றேன்
பாலகரை;
போரினிலே பறிகொடுத்துப்
புலம்பிடவோ?
சு.அருணா-வேலணை-06.

## கவிதைப் போட்டி இல-38



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 19.2.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 38
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

# வாசகர் சாலை

தித்திக்கும் சுவையுடன் திக்கெட்டும் வலம் வரும் தினமுரசு வாரமலரே, ரசிகன், ராஜதந்திரி, நாரதர், அய்யாத்துரை என்று உனக்குள் அடக்கி வைத்துள்ளாயே. உண்மையில் நீயோர் நிறைகுடம். வளர்க உன் தொண்டு. வாழ்க நீ பல்லாண்டு.

**யூலெல்.செய்னுடீன்-அக்கரைப்பற்று-06.**

•

கண்ணுக்கு மை அழகு!
விண்ணுக்கு நிலவு அழகு!
பல்சுவை அம்சங்களைத் தருவது
தினமுரசுக்கு அழகு!
எம் நெஞ்சில் நிறைந்த முரசே,
நீ வாழிய பல நூறாண்டு.
ஆழியும் மலையும் போல;
உன் புகழ் வாழ வாழ்த்துகிறோம்.

**யமீனா, சோபியா-கற்பிட்டி.**

•

வீரமொருமுறை வாசகர் நெஞ்சங்களை இன்பத்தி லாழ்த்தும்-எம் இனிய முரசே! பெரியோர் சிறியோர் பேதமின்றி முரசத்தின் முகங்கள் முறுவலித்து நிற்பதால் நித்தம் அதில் எம்மை நிலைத்து நிற்க வைக்கிறது. முரசே, உன் முரசம் முழங்க வேண்டும் நாள்தோறும். அதில் நாமென்றும் ஆழ்ந்திருக்க வேண்டும்!

**நஜிதா-காத்தான்குடி.**

•

குறுகிய காலத்தில் நீ குதிரை வேகம் அல்லவா காட்டி விட்டாய். வாராவாரம் நீ தரும் வண்ண இதழ்கள். அப்பப்பா பிரமாதம். அதிலும் ரசிகனின் இலக்கிய நயம் வெகு ஜோர். சமையல் குறிப்பு முதல் சரித்திரக் கதைவரை எத்தனை வெகுளிப்பு உனக்கு! வாராவாரம் நீ வண்ணச் சுமைகளோடு உலா வர என் வாழ்த்துக்கள் உனக்கு!

**ஐ. றஸீன்-நீராவிப்பிட்டி.**

•

அன்பின் மலரே!
உன்னை வாழ்த்தாமல் என்னால் இருக்க முடியவில்லை. வாரத்தில் ஒருமுறை மலரும் மலரே. நீ மலரல்ல. நான் குடிக்கும் தேன். நீ பல்லாண்டு காலம் மணம் வீச எனது பலகோடி வாழ்த்துக்கள்.

**என்.தர்ஷனா-வாழைச்சேனை.**

•

என் இனிய முரசே, உன்னை காணாமல் நானேது? உன்னை எண்ணாத நாளேது? முரசாரே, நீர் சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் எல்லோர் சிந்தனைக்கும் வித்தாகும். அறிவுக் களஞ்சியமே, இளம் சமுதாயத்தினரை வளரவைக்கும் உன் நற்பணி தொடரட்டும். வாழ்க நீ. வளரட்டும் உன் புகழ்.

**கதிரேசன் பிரகாஷ்-கம்பளை.**

•

அன்பின் முரசே!
புதிய புதிய அம்சங்களையும், திகைப்பூட்டும் செய்திகளையும் நேயர்களுக்கு தந்திடுவதில் உனக்கு நிகர் இங்கு நீயேதான். தமிழ்பேசும் நேயர்களுக்காக நீ தந்திடும் மகாபாரதத்தொடரைக் கண்டு நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உனது அத்தனை முயற்சிக்கும், வளர்ச்சிக்கும் எனது பாராட்டுக்கள். என்றும் வாழ்க வளர்க உன் பணியும், புகழும்!

**ரா.பவானி-கோட்லோஜ் எஸ்டேட்.**

•

முத்தான தினமுரசே,
வாரம் தோறும் அள்ளித்தரும் அருமையான கதைகளும், சுவையான அம்சங்களும் எங்கள் நெஞ்சங்களை கொள்ளை கொண்டுவிட்டன.



விசேடமாக, அழகு தமிழில் வரும் மகாபாரதம்கதையை வாசித்து இன்புறும் எமக்கு எம்.ரி.வி ஒளிபரப்பில் பார்க்க முடியவில்லையே என்ற ஏமாற்றமே, ஏன் இந்த பாராமுகம் எம்போன்ற மாணவரும் பார்த்துப் பயன்பெற வழி செய்ய மாட்டாயா?

**கே.பார்வதி,அ.சுதர்சினி-களுதாவளை.**

•

ரசிகனின் இலக்கிய நயம் காண வழிமேல் விழி வைத்திருந்த என்னிதயம் மகிழ இனிமையான விளக்கம் தந்த ரசிகனுக்கு பாராட்டுக்கள்.

ரசிகனின் சொல்நயம், கவிநயம் இவற்றை ரசித்து, ருசித்து என்னுள்ளம் வேறெதையும் புசிக்க மறுக்குதன்றோ...புத்தாண்டிலாவது ரசிகன் தன்னை யாரென கூறுவாரா?

**ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.**

•

அன்புக்கினிய பல அம்சங்களை தரும் முரசே, நீ தரும் அறிவுக் களஞ்சியங்களும் அத்தோடு தேன் கிண்ணம், மகாபாரதம், சினி விசிட், இலக்கிய நயம் மிகவும் சுவையாக என்னை கவர்ந்துவிட்டது.

**சொ.ஜெயின்-மூதூர்.**

•

அன்பின் தினமுரசே,
முரசின் வாசகி நான். சமீபத்தில் நீ எனது கைக்குக் கிடைத்தாய். உன்னைப் பார்த்ததுமே என்னை மிகவும் கவர்ந்துவிட்டாய். நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களுமே வெகு ஜோர். நீ வாழ்க வளர்க.

**சரளா-இறக்குவானை.**

•

சினிவிசிட் பகுதியில் எம்மை வியக்க வைக்கும் வர்ணப்புகைப்படத்துடன் கதைகளை பிரசுரிப்பதில் மிக மிக சந்தோசமடைகிறோம். எனவே சினிவிசிட் பகுதிக்கு எங்கள் வாழ்த்துக்கள் பல.

**எஸ்.எல்.இல்யாஸ்-கொத்தான்தீவு.**

•

அன்பின் தினமுரசே,
எங்கள் இதயங்களைக் கொள்ளை கொண்டுள்ள வாராந்த கதைகளையும் மற்றும் பலபல செய்திகளையும் தந்து எங்கள் அனைவரையும் மகிழ்வித்து அறிவுக்கு விருந்தாக தரும் தினமுரசுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள். உன் சேவை என்றும் வளரட்டும்.

**ஏ.எம்.ஷாபிக்-நாவலப்பிட்டி.**

•

அன்பின் முரசே....
வாரம் தோறும் வலம்வரும் முரசே,
இளைஞர்களின் இதயங்களை கொள்ளை கொள்ளும் முரசே,
கண்ணே மதுமிதா எழுதும் ரசிகனை அறிமுகம் செய்வாயா முரசே? வண்ணக்கலரில் வலம் வந்துகொண்டிருக்கும் சினிவிசிட்டில் குஷ்புவின் படங்களை அள்ளித்தருவாயா முரசே?

**ரிஸ்மிலா அஸீஸ்-அக்குறணை.**

# திருச்சபை மூலமாக யுத்த நிறுத்தம் கோருவோம்!

## அங்கிலிக்கன் ஆயர் வடக்கே நின்று பேட்டி!!

வடபகுதிக்குச் சென்றுள்ள அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான தூதுக்குழுவினர் இராணுவ மற்றும், விமானப்படை தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

குண்டுவீச்சுக்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பற்றி தெற்கே உள்ள சிங்கள மக்களுக்கு தாம் எடுத்துக்கூறப் போவதாக ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தாக்குதலால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலையை பார்வையிட்ட தூதுக்குழுவினர் வைத்தியசாலை அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினார்கள்.

கிளிநொச்சியில் வைத்து புலிகள் அமைப்பினரின் வானொலியான 'புலிகளின் குர'லுக்கு அங்கிலிக்கன்ஆயர் கென்னத் பெர்னாண்டோ பேட்டியளித்தார்.

"சிங்கள மக்களில் பெரும்பான்மையோர் தமிழ் மக்களது உரிமைகள் வழங்கப்பட்டு இனப்பிரச்சனை தீர்க்கப்படவேண்டு மென்பதையே வற்புறுத்துகின்றனர்.

"ஜனாதிபதி இனப்பிரச்சனையல்ல பயங்கரவாதப் பிரச்சனையே இருக்கிறது என்று கூறிவருகிறார். சிங்கள மக்களில் ஒரு சிலரைத் திருப்திப்படுத்தவே ஜனாதிபதி அவ்வாறு கூறுகிறார். ஆனால் வடக்கு-கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சனையே. இதனால்தான் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள் என்பதே எமது நிலைப்பாடாகும்" என்று தனது பேட்டியில் குறிப்பிட்ட ஆயர் கென்னத் பெர்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:

"திருச்சபையூடாக அரசாங்கத்திடம் யுத்த நிறுத்தம் ஒன்றை கோரப்போகிறோம்.

"சிங்கள-பௌத்த அமைப்புக்கள் சில இனவாதத்தை தூண்டும் அறிக்கைகள் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. ஏனென்றால் பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய கருத்துக்களே மேலோங்கி நிற்கின்றன.

"கடந்த ஆண்டு நான் யாழ் வந்தபோது இரு கைதிகளை புலிகள் விடுவித்தார்கள். சிங்கள மக்கள் மத்தியில் புலிகள் பற்றியும், பிரபாகரன் பற்றியும் நல்லெண்ணத்தை அது ஏற்படுத்தியது" இவ்வாறு அங்கிலிக்கன் ஆயர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை 11ம் திகதி யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளோடு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான தூதுக்குழுவினர் பேச்சு நடத்துகின்றனர்.

## யுத்தத்தை நிறுத்துமாறு சிங்கள மக்கள் அழுத்தம்

### யாழ்ப்பாணத்தில் சர்வோதயத் தலைவர் பேச்சு

சர்வோதய அமைப்பின் தலைவர் ஆரியரத்ன யாழ் சென்று புலிகள் இயக்கப் பிரமுகர் கரிகாலனைச் சந்தித்து மூன்று மணிநேரம் பேச்சு நடத்தினார்.

சர்வோதய அமைப்பு, வடக்கு-கிழக்கு மக்களுக்காக வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை சிங்கள மக்களிடம் வழங்குவதாக புலிகள் முன்னர் குற்றம் சாட்டினார்கள். யாழ்ப்பாணத்தில் சர்வோதய அமைப்பினர் மூலமாக அதன் தலைவர் ஆரியரத்னாவுக்கு எதிராக உண்ணாவிரதம் ஒன்றும் முன்னர் நடைபெற்றது.

தற்போது ஆரியரத்னா யாழ் சென்று புலிகள் அமைப்பினரோடு பேச்சு நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில் யுத்தத்தை நிறுத்துமாறு சிங்கள மக்கள் அரசை வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

"படை அதிகாரிகள், பௌத்த மதகுருமார்கள், கிராமப்புற மக்கள் எல்லோரும் யுத்த நிறுத்தத்தை விரும்புகின்றனர். இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் நேரம் வந்துவிட்டது. சிங்கள- தமிழ் மக்கள் ஒன்றிணைந்து யுத்தத்துக்கு எதிராக எழவேண்டும்" என்று தனது பேட்டியில் அவர் கூறியுள்ளார்.


இனப்பிரச்சனையின் இன்றைய நிலைக்கு அரசியல்வாதிகளே காரணம் என்றும் திரு. ஆரியரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

## தேர்தல் திரு விழாவை முன்னிட்டு

## திரு வாளர் பொதுஜனத்தின் பார்வைக்கு!




"சென்ற தேர்தலில் சுயேச்சையாக நின்றபோது எனக்குக் கிடைத்த வாக்குகள்6... இப்போது 18 வாக்குகள் பெற்றிருக்கிறேன்.. புள்ளி விபரப்படி மக்கள் மதிப்பில் நான் மும்மடங்கு உயர்ந்திருக்கிறேன் என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது..!"



"நம்முடைய தேர்தல் மேடை மற்றவர்களைவிடக் கொஞ்சம் புதுமையாகவும், கவனத்தைக் கவரும் வகையிலும் இருக்கவேண்டும் என்று நான் தோழர்களிடம் கூறியது உண்மைதான்!"

இவற்றை நம்மோடு பொருத்திப் பார்த்து யாராவது கோபித்துக்கொண்டால் தங்கள் கோபங்களை தெரிவிக்கலாம். முன்பக்கத்தில் வெளியிடப்படும்.



"அதோ தலைவர் அவர்கள் வந்துவிட்டார்கள்... தயவுசெய்து கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்கள் அவர் மேடைக்கு வர வழிவிடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்...!" நன்றி-மதன் ஜோக்ஸ்

## நிர்வாகம் ஒன்று- நடைமுறை வேறு!

## விடுமுறை நாட்களில் முழுக் கட்டணம்!!

திருமலை நிருபர்

தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணம் அறவிடுவதில் கல்முனைப் பகுதி தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் வித்தியாசமான நடைமுறைகளைக் கைக்கொள்வது ஏன்? இதனால் அன்றாடம் பலநூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வருவது அதிகாரிகளுக்குத் தெரியாமற் போனது ஏனோ?

தைப்பொங்கல் தினத்துக்கு மறுநாள் திருகோணமலைக்குத் தொலைபேசி அழைப்புப் பெறுவதற்காக களுவாஞ்சிக் குடித் தபால் நிலையம் சென்ற தினமுரசு நிருபருக்கு நேரடியாகவே இந்த அநுபவம் கிடைத்தது.

மூன்று நிமிட அழைப்புக்கு கருமப்பீட உத்தியோகத்தரால் ரூபா 10 சதம் 34 அறவிடப்பட்டபோது "சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் அரைக்கட்டணமாக ரூ 6.74 மட்டுமே இலங்கையில் ஏனைய பகுதிகளில் அறவிடப்படுகிறது. அதுவுமல்லாமல் தினமும் மாலை ஆறுமணிக்குப் பின்னர் அதிகாலை எட்டு மணிவரை எடுக்கப்படும் இரவுநேர அழைப்புக்களுக்கும் அரைக் கட்டணமே அறவிடப்படுகிறது. நிலைமை இவ்வாறிருக்க நீங்கள் செய்வது பிழையானது" எனச் சுட்டிக்காட்டியபோது இத்தகைய நடைமுறையொன்று இருந்து வருவதை அறிந்திராத அந்த உத்தியோகத்தர் உடனடியாகத் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்புகொண்டு இதுபற்றி வினவியபோது, ஞாயிறு தினங்களில் மாத்திரமே அரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதுபற்றிய மேலதிக விபரங்களை நிருபர் அறிய முயன்றபோது கல்முனை பரிவர்த்தனை நிலையத்தூடாக அழைப்புப் பெறும் சகல தபால் நிலையங்களிலும் இத்தகைய நடைமுறையே கடைப்பிடிக்கப் படுவது தெரிய வந்தது.

சுற்று நிருபங்களை விளக்கி அதற்கேற்ப நிருவாகத்தை மேற்கொள்ள முடியாத அதிகாரிகளின் தவறுகளினால் அந்தப் பகுதி மக்களின் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பிழையான வழியில், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்துக்குச் செல்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று மக்கள் கோருகின்றார்கள்.

## பேச்சுக்கு முன்னர் சுமுகமான சூழல் வேண்டும்!

## மெதடிஸ்த தூதுக்குழுவிடம் புலிகள் தெரிவிப்பு!!

மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு நெவில் பெர்னாண்டோ தலைமையிலான மெதடிஸ்த தூதுக்குழுவினர் யாழ் சென்று புலிகள் அமைப்பினரோடு பேச்சு நடத்தினார்கள்.

கடந்த 5ம் திகதி (5.1.94) மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் புலிகளை சந்தித்த எட்டுப்பேர் கொண்ட மெதடிஸ்த தூதுக்குழுவினர் பேச்சுவார்த்தைகள் குறித்த புலிகளின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்தனர்.

புலிகள் அமைப்பின் சார்பில் அன்ரன் பாலசிங்கம், கரிகாலன், இளங்குமரன், பாலகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் சுமுகமான சூழல் ஒன்று அவசியம். அரசுடன் பேசுவதானால் அதற்கு முன்னர் போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் அவசியம் என்று புலிகளின் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு நெவில் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தார்.

பொது இடங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு அரசு ஏதோ காரணங்கள் கூறி நியாயப்படுத்தப் பார்க்கிறது. நாங்கள் யாழ் வருவதற்கு முன்னர் சகல மதத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினோம். நல்லெண்ணச் சூழல் உருவாகும் பட்சத்தில் ஏனைய மதத்தலைவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களது ஆதரவினையும் பெறுவோம். அதன் மூலமாக சமாதான முயற்சிகளை இலகுவாக மேற்கொள்ள முடியும். இதன் மூலம் அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்க முடியும், என்று தனது பேட்டியில் அருட்திரு நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது அகதி முகாம்களையும் மெதடிஸ்த குழுவினர் பார்வையிட்டனர்.

"யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்களை இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள மனித உரிமை அமைப்புகளுக்கும், சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் அறிவிப்போம். குடாநாட்டு மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை தொடர்வதோடு, சமாதானத்துக்கான முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொள்வோம்" என்றும் மெதடிஸ்த திருச்சபை குழுவினர் யாழ்ப் பாணத்தில் தெரிவித்தனர்.

யாழ் விஜயத்தை முடித்துக்கொண்ட மெதடிஸ்த குழுவினர் கொழும்பு திரும்பிவிட்டனர். தமது யாழ் விஜயம் பற்றி ஏனைய மதத்தலைவர்களை சந்தித்து அவர்கள் எடுத்துக்கூறுவர் என்று தெரிகிறது.

## மாற்றுக் கருத்தை முளையிலே கிள்ளும் முயற்சி!

## மாத்தையா விவகாரம் பற்றி 'தினமணிக் கதிர்' விமர்சனம்!!



அன்றைய இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்சித்துடன் பிரபாவோடு மாத்தையா. யாழ்ப்பாணத்தில் பேச்சு நடத்தியபோது.

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் 'தினமணிக்கதிர்' புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள பிரபாகரன், மாத்தையா பிரச்சனை பற்றித் தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

வை.கோபால்சாமிக்கு ஆதரவாக தி.மு.க தலைவரைக் கொல்ல சதி நடந்தது என்ற புகாரின் அடிப்படையில் தமிழகத்தில் பரபரப்பு.

இந்திய அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு என்னைக் கொல்லச் சதி என்று விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உப தலைவரான மாத்தையா மீது தலைவர் பிரபாகரனே புகார் கூறுகிறார்.

முரண்பட்ட அரசியல் கருத்துக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் எப்படி எதிர்கொண்டு வந்துள்ளது..?

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களின் உயிர்கள் சென்னையில் பறிக்கப்பட்டதே இந்த விளைவுக்குத் தகுந்த பதிலாகும். உலக அரங்கிலும் தெற்கு ஆசியச் சூழலிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் இலங்கை அரங்கிலும் மாறுதல்களை உருவாக்கியுள்ளது.

நவீன இராணுவ தளபாடங்களை புதிதாகப் பெற்றுள்ள இலங்கை இராணுவத்தின் தாக்குதல் திறனும் வளர்ந்துள்ளது.

இந்தப் பின்னணியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போக்கில் மாறுதல் வேண்டும் என்ற சிந்தனையைக் கூட முளையிலேயே கிள்ளும் முயற்சியாகவே மாத்தையா கைது, விசாரணை ஆகியவை அமைந்துள்ளன என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. சட்டப்படியான நடவடிக்கை என்ற பிரிட்டிஷ் தந்திரமும், அதற்கு வலுவூட்ட வேற்று நாட்டு இரகசியப் பொலிசுடன் கூட்டுச் சதி என்ற தந்திரமும் இன்னும் பல காலம் அரசியல் இயக்கங்களின் தந்திரமாக அமையக்கூடும்.

இவ்வாறு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக் குழுமத்தின் வெளியீடான 'தினமணிக்கதிர்' கருத்து வெளியிட்டுள்ளது.

புலிகள் தம்மைக் கொலைசெய்யத் திட்டமிட்டுவருவதாக கலைஞர் கருணாநிதி தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
072-26088, 078-61933

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

### நரைமயிர் கறுப்பாகிறது புதுமை ஆனால் உண்மை

வட இந்தியாவில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவரால் 10 வருடகாலமாக பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்டது.

மெடிக்கல் ஒயில் விலை ரூபா 280/=

நீங்கள் விரும்பிய எண்ணெயுடன் கலந்து பாவிக்கலாம்.

***கிடைக்குமிடங்கள்:***

UVA MEDICALS , UDAPUSSELLAWA.
CITY DRUGS, NO. 93, OLCOTT MAWATHA, (OPPOSITE RAILWAY STATION) PETTAH
SISIRA MEDICAL- KANDY ROAD, KIRIBATHGODA.
PRAME MEDICAL, 46- PERADENIYA ROAD, KANDY.
LANKA MEDICALS, MAIN STREET, RATNAPURA.
GOMES PHARMACY, BALANGODA
ARAVINDA TRADING CO., 47, STATION ROAD, GAMPOLA
ROYAL TRADE CENTRE, NUWARAELIYA.
UVA PHARMACY, BANDARAWELA.
RENUZA, WELIMADA
LANKA CHEMIST, EDIRIWEERA STORES, STATION ROAD, BADULLA.
HAPUTALE PHARMACY, HAPUTALE.
SERENDIB PHARMACY, 400, MAIN STREET, PANADURA.
METROY PHARMACY, 66, MAIN STREET, PELMADULLA.
WIJEMANNA GROCERIES, NO.43, PANADURA ROAD, HORANA.
SHIHAB ENTERPRISES, 69, TALAWAKELLE.
CENTRAL MEDICAL STORES, 74, MAIN STREET, HATTON.
LOYED PHARMACY, MEDAGODA, MATARA.
SILVA DRUGS, HAVELOCK ROAD, GALLE.
THE NEW PHARMACY, PERAKUMBA ST, KURUNAGALA.
SUHADA PHARMACY, COLOMBO RD, CHILAW.

*காலவர்ண ஒயில் அன்ட் கேஷாலேப்ப (UP ஃபோமியுலா)*


## நீரிலே மிதக்கிறார்கள் வட பகுதி அகதிகள்!!

(மன்னார் நிருபர்)

அண்மைக்காலமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்ட பெருமழை பெரு வெள்ளம் காரணமாக சுமார் ஆயிரக் கணக்கான மக்கள் அகதிகளாயினர்.

இதில் ஏற்கனவே வன் செயல்களால் பாதிக்கப்பட்ட வடபகுதி முஸ்லிம் அகதிகளும் அடங்குவர். தற்போது புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளிப் பகுதியில் இன்னும் நிலம் ஈரலிப்பாக காணப்படுகிறது. நீர் கசிந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலைமையிலே, அகதி முகாம்களில் உள்ள முஸ்லிம் அகதிகள் ஈரமான நிலத்தில் வாழ்ந்து வருகின்றனர். பச்சிளம் குழந்தைகள், வயது போன முதியோர்கள் ஆகியோரின் நிலை மிகவும் பரிதாபகரமாகவுள்ளது.

நுளம்புகள் பெருமளவில் பெருகியுள்ளன. தொற்று நோய்களும் பரவி வருகிறது.

குறிப்பாக விருதோடைப் பகுதியிலேயே அதிகமான மக்கள் இவ்வாறு பாதிக்கப் பட்டுள்ளனர்.

விருதோடை பகுதியிலும், மற்றும் புழுதிவயல், சமீரக கொத்தான் தீவு போன்ற பகுதிகளில் பெருமளவில் அகதிகள் உள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் மன்னார்-தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

தாராபும் கிராமம் தற்போது படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இங்கு 40 குடும்பங்கள்வரை மீள் குடியேறியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பொதுச் சந்தைப் பகுதியில் பொதுச் சுகாதாரம் பாழ்!

(நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர் பொதுச் சந்தைப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பேணுதல்கள் சீராக நடைபெறுவதில்லையென்று பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பொதுச் சந்தைக்கு முன்னால் குப்பை, கூழங்கள் கொட்டப்பட்டு பெரும் சுகாதாரக் கேடான நிலையிலிருக்கும் காட்சியையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

ஆடு, மாடுகளுக்கும், நாய்களுக்கும் உறைவிடமாகவும் இந்தக் குப்பை மேடு அமைந்துள்ளது. பொதுச் சந்தைக் கழிவுகளை சந்தைக்கு முன்னாலுள்ள இந்தக் குப்பை மேட்டிலேயே கொட்டிவிடுகின்றனர். இறைச்சி விற்பனை முடிந்ததும் கழிவான மாட்டு எலும்புகள்,கூட இந்தக் குப்பை மேட்டிலேயே கொட்டப்படுவதாகவும் கூறப் படுகின்றது.



இதனால் தினமும் பொதுமக்கள் கூடும்பொதுச் சந்தைப்பகுதியின் பொதுச் சுகாதாரம் பாழடைவதுடன், சந்தைக்கு அருகிலுள்ள வீடுகளில் குடியிருப்போர் எந்நேரமும் துர்நாற்ற வாடையால் பாதிக்கப்பட்ட வண்ணமுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக இருந்து வரும் இந்த சுகாதாரச் சீர்கேட்டு நிலையை சம்பந்தப்பட்டோர் உடன் நீக்க ஆவன செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

பொதுச் சுகாதாரத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் இதுவிடயத்தில் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்வார்களா? என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## புகார் பெட்டி

### வீதிகள் புனரமைக்கப்படுமா?

செல்வநகரில் இருந்து சேருவிலைப் பிரதேசம்வரை பிரயாணஞ் செய்யும் பிரதான வீதியானது மேடுபள்ளமாக மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. பேரூந்து, மோட்டார்வண்டி, துவிச்சக்கரவண்டி முதலிய வாகனங்களில் சென்று பொது மக்களும் அரசாங்க ஊழியர்களும் தங்களுடைய தேவைகளையும், சேவைகளையும் உரிய நேரத்தில் செய்துகொள்ள முடியாமையால் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். எனவே பொதுமக்களினதும் அரசாங்க ஊழியர்களினதும் இன்னல்களைப் போக்குவதற்கு வீதிகளை புனரமைக்க உரிய அரசாங்க அதிகாரிகள் முன்வரமாட்டார்களா?

எம்.எம். நஸீர்--தோப்பூர்.

## நகராட்சிமன்ற செயலரின் மறுப்புக்கு பதில் சொல்கிறார் எமது நிருபர்

எடுத்துச் சொல்லியும் செவியில் ஏறவில்லை. வாங்குவதில் வேகம். சேவையில் மந்தம் என்னும் தலைப்பில் 26.12.93 தினமுரசு இதழில் வெளிவந்த செய்திக்கு 23.01.94 இதழில் திருகோணமலை நகராட்சி மன்றச் செயலாளரினால் விடுக்கப்பட்ட மறுப்புத் தொடர்பாக, மேற்படி செய்திக்குப் பொறுப்பான நிருபர் என்ற வகையில் பின்வரும் விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்:

மேற்படி பாதை நகரசபைக்குச் சொந்தமில்லாதபடியால் நகரசபைப் பணத்திலிருந்து செலவு செய்ய முடியாது என மறுப்பில் செயலாளர் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஆனால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நகராட்சி மன்ற நிருவாகத்தில் தில்லைநகர் வீதி தொடர்ச்சியாக செப்பனிடப்பட்டும் பரிபாலனம் செய்யப்பட்டும் வந்தமைக்கு மக்கள் நினைவாற்றலும், நகராட்சி மன்றப் பதிவேடுகளும் சாட்சி பகரும்.

மேற்படி வீதியில் மின்கம்பங்கள் நடப்பட்டுத் தெரு விளக்குகள் போடப்பட்டு இன்றைய நகராட்சி மன்றத்தாலும் பரிபாலனம் செய்யப்படுகிறது. தங்களுக்குச் சொந்தமில்லாத பாதையில் எவ்வாறு மின் கம்பங்கள் நிறுத்தி தெருவிளக்குகள் போடமுடியும்?

நகரசபை விடுதி வளவிலுள்ள நீருக்குப் பாதை அமைத்து (செயலாளர் குறிப்பிட்டபடி) தமக்குச் சொந்தமில்லாத காணியில் பாய விடுவது எவ்விதத்தில் பொருத்தமானது? நீருக்குப் பாதை கொடுப்பவர்கள் மக்களுக்குப் பாதை கொடுக்கக்கூடாதா?

அந்தப் பகுதி மக்களிடம் ஒழுங்காக வரி அறவிடும் நகராட்சி மன்றம் அடிப்படைத் தேவையான பாதை செப்பனிடும் வேலையையே செய்ய மறுக்கின்றபோது, வேறு எந்தக் கடமையை அவர்களுக்குச் செய்யக் காத்திருக்கிறது?

இவற்றுக்கு மேலாக 03.06.93 கிராமோதய மதியுரைக் குழுக்கூட்டறிக்கையில் (பக்கம் 4 விடய இல.18) இவ்வாறு கூறப்பட்டுள்ளது: தில்லை நகர் கிராமோதய சபைத் தலைவர் தம் பகுதியில் உள்ள வடிகால் அமைப்புச் சம்பந்தமாகக் கேட்டபோது செய்ய வேண்டிய வேலைகள் 3 கட்டமாகப் பிரிக்கப்பட்டுச் செய்யப் படுகின்றன எனவும்; இப்போது 2ம் கட்ட வேலைகள் நடைபெறுவதால் 3ம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படும்போது தில்லைநகர் மகாமாயபுர, அரசடிப் பகுதிகளில் உள்ள அத்தியாவசிய வேலைகள் செய்ய உள்ளதாகவும் செயலாளர் கூறினார். இதன் கருத்து என்ன?

(திருகோணமலை நிருபர்)

## பயணிக்க முடியாத பாதைகள்

கடையாமோட்டையிலிருந்து உடப்பு செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. சைக்கிளிலும் செல்ல முடியாத நிலையில் பாதை பள்ளமும் குழியுமாக காட்சியளிக்கிறது. மழை காலங்களில் அறவே பயணம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. இப்பிரதேசத்தில், குறிப்பாக சமீரகம, பெருக்குவட்டான் கிராம மக்கள் போக்குவரத்து சேவை இல்லாததால் சைக்கிள் பயணத்தையே தொடர்கின்றனர். இந்நிலையில் இக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க வேலைகள் துரித கெதியில் நடைபெற்று வருகின்றன. எனவே மின்சாரம் வழங்க கவனமெடுத்த அமைச்சு அதிகாரிகள் இப்பாதை விடயத்திலும் அக்கறை கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு இணைந்து இப்பாதையை சீர் திருத்தி மக்களின் பயணத் துயர் நீக்குவார்களா?

ஏ.சீ.ஜிப்ரி
சமீரகம.

புகார் பெட்டிக்கு உங்கள் சொந்த முகவரியோடு எழுத வேண்டும். புனைப் பெயர்கள் வேண்டாம்.

## இங்கே பெயர்ப்பலகை எங்கே? வீதி தேடி அலைகிறார்கள் வெளியூரவர்கள்!

கல்முனைக் குடியில் உள்ள அனேக வீதிகளுக்கு வீதிப் பெயர்ப் பலகை இல்லாதிருப்பது பலவித இடையூறுகளை ஏற்படுத்துகிறது.

இங்குள்ள எல்லா வீதிகளுக்கும் முன்பு பெயர்ப் பலகை பொருத்தப்பட்டு இருந்தது. ஆனால் காலக்கிரமத்தில் அவை காணாமல் போய்விட்டன. ஒரு சில வீதிகளிலேயே இப்போது இப் பெயர்ப் பலகைகள் காணப்படுகின்றன.

வீதிப் பெயர்ப்பலகை இல்லாத காரணத்தினால் வெளியிடங்களில் இருந்து தமது நண்பர்களை காணவருவோர் படும் பாடு - அப்பப்பா சொல்லவும் வேண்டுமா?

அண்மையில் அமைச்சர் மன்சூரை அவரது வாசஸ்தலத்தில் சந்திக்க வந்த நபர் ஒருவர் வீதி தெரியாது நடு வீதியில் நின்று கொண்டிருந்தார். அவரை அணுகிய போதுதான் வீதிப் பெயர்ப் பலகை இல்லாதவிடயமே புரிந்தது.

இப்பகுதிக்கு புதிதாக வரும் தபால்காறர்களுக்கும், தந்தி கொண்டுவருவோருக்கும் இதே நிலைதான்.

எனவே திக்குத் தெரியாது திணறுகின்றவர்களுக்கு வீதிப் பெயர்ப்பலகை வேண்டும் இங்கு.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## தம்குறை தீர்க்க தம் கையே உதவி!

(திருகோணமலை நிருபர்)



பாழடைந்துபோன தில்லைநகர் வீதியை அந்தப் பகுதி மக்களே தங்கள் செலவில் திருத்தியமைப்பதையே மேலேயுள்ள படம் காட்டுகிறது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து ஒவ்வொரு வீட்டிலும் சிறு தொகை அறவிட்டு வாங்கி, கிறவல் என்பவற்றைப் பெற்று சிரமதான முறையில் திருத்தியுள்ளனர். இப்பாதையைத் தம்மால் திருத்தித்தர முடியாது என நகரசபையினர் கை விரித்துவிட்டனர். தங்கள் கஷ்ட நிலைமையை படத்துடன் வெளிப்படுத்திய தினமுரசுக்கு சிரமதானப் பணித் தலைவர் தில்லைநகர் மக்கள் சார்பில் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டார்.

## தகைமையற்ற பரீட்சகர்களால் தவறான மதிப்பீடுகள்

க.பொ.த.(சா.தரப்) பரீட்சையில் நுண்கலைகளுள் ஒன்றான சித்திரப்பாட விடைத்தாள் மதிப்பீட்டுக்கு, சித்திர பாடத்தை ஆசிரியர் கலாசாலையில் கற்காதவர்களும், பாடசாலைகளில் கற்பிக்காதவர்களுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். சங்கீதம், நடனம் போன்ற நுண்கலைகளுக்கு அப்பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறாத மதிப்பீட்டாளர்கள் நியமிக்கப்படுவதில்லை. சித்திர பாடமும் அவ்வாறான ஒரு பாடமாக இருந்தும் இவ்வாறான நியமனம் நடைபெறுகிறது. இதனால் தகைமைவாய்ந்த மாணவர்கள் பரீட்சையில் உரிய அடைவினைப் பெறாமலும் தகைமையற்ற மாணவர் திறமைக்கு மேலதிகமான பெறுபேற்றினைப் பெற்றும் முடிவுகள் வெளியானதை இட்டு மாணவர்கள் சித்திரப் பாடத்தை தேர்ந்தெடுப்பதில் அசிரத்தையும் அலட்சிய மனப்பான்மையும் கொண்டுள்ளனர்.

இப்பாடத்தில் தகைமைவாய்ந்த மதிப்பீட்டாளர்கள் குறைவாக இருந்தாலும் அவர்களைக்கொண்டு - தாமதித்தாயினும் - சரியான மதிப்பீட்டினைச் செய்யாமல் தகைமையற்றவர்களைக்கொண்டு தவறான மதிப்பீடுகளை விரைவாக வெளியிடுவதனால்இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும், பயிலும் மாணவர்களும், பெற்றோரும் மற்றோரும் பெறுபேற்றில் அவநம்பிக்கை அடையவேண்டியுள்ளது.

இம்முறை ஏனைய பாடங்களுக்குரிய பரீட்சகர்களைத் தெரிவு செய்யும்போது மேற்கொள்ளப்பட்ட அடிப்படைத் தகுதிகள்கூட சித்திர பாடத்துக்கு கவனிக்கப்படாமல் விடைத்தாள் மதிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை அறிந்த மாணவரும் பெற்றோரும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். ஏனைய பாடங்களைப் போன்று புள்ளி இடும் திட்டத்தை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு சித்திர பாடத்தை மதிப்பீடு செய்யமுடியாது என்பதை கருத்தில் கொண்டமையினால் ஏற்பட்ட பயமே இதுவாகும். "குரங்கின் கைப்பூமாலை"யாக அகப்பட்ட தங்கள் விடைத்தாள்களுக்கு என்ன நடக்குமோவென்று மாணவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு இத்தவறினை நிவர்த்திசெய்ய மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரினதும் பொறுப்பாகும்.

பெற்றார் சார்பில்- எஸ்.வேணுகோபால்,மட்டக்களப்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

நாரதர்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும் உயிர்பெற்றுவரும் குறுகிய வாதங்களும்!

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான பிரச்சாரங்களும், அந்த பிரச்சாரங்களின் ஒரு அங்கமான பிரசுரங்களும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வழக்கமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் குறுகிய வாதங்கள் ஓடிவந்து முகம் காட்டுவதுண்டு.

ஊர்வாதம், சாதிவாதம், பிரதேச வாதம், மதவாதம், இன்னும் இருக்கக் கூடிய சகல வாதங்களும் கிளறி எடுக்கப் பட்டு வேட்பாளர்கள் சிலரால் கொண்டு திரியப்படுவதுண்டு.


நான் இந்த ஊரவன். இந்த மண்ணில் பிறந்து, இந்த மண்ணில் பிரதேச வாதங்கள் ஒழிய வேண்டும் என்ற உளப்பூர்வமான அக்கறையை மறுக்க முடியாது.

உடுப்பிட்டித் தொகுதியில் இராசலிங்கத்தின் வெற்றிக்காக எங்கோ இருந்த உடுவில் தொகுதியில் இருந்தும் இளைஞர்கள் சென்று உற்சாகமாய் உழைத்தார்களே அந்த உணர்வுகள் தான் இன ஒற்றுமைக்கு அவசியம்.

கூட்டணித்தலைவர்களில் எத்தனைபேர் தாம் சொன்ன கருத்துக்களுக்காக உளப்பூர்வமாக நடந்தார்கள் என்பது வேண்டுமானால் வாதத்துக்கு உரியதாக இருக்கலாம்.

ஆனால், கூட்டணியின் மேடைகளும், பிரச்சாரங்களும் ஒரு புதிய உத்வேகத்தை தட்டி எழுப்பியதை மறுக்க முடியாது.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களது



குமார் பொன்னம்பலம்

வேட்பாளர்களாக நிறுத்தியிருக்கிறார்கள்.

இவர்கள் நாளை எந்தப் பக்கம் போவார்கள் என்பது மதில் மேல் பூனை கதைதான்.

எதிர்தரப்பில் நின்று கேட்டால் குற்றம் சாட்ட நிறைய தவறுகள் உள்ளவர்கூட தமது அணியில் சேர்ந்துவிட்டால் ஊருக்கு உழைக்கும் உத்தமராக சொல்லப்படுவதுதான் விந்தையிலும் விந்தை. பொதுவாகவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குறுகிய வாதங்களே முன்னால் வந்து நிற்கின்றன.

இதற்கு முக்கிய காரணம், தெளிவான அரசியல் கோசத்தை முன்வைத்து எந்தவொரு தமிழ் அமைப்பும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவில்லை என்பதே. கொள்கை இல்லாத போதுதான் குறுகிய வாதங்களின்

'சுதந்திரமான- ஜனநாயக தேர்தல் ஒன்றை நடத்தியிருப்பதன் மூலம் அரசாங்கம் தனது ஆளுமையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.'

இவ்வாறான அரசியல் காரணங் களை வெகு சுலபமாக வெளிப்படுத்த அரசாங்கம் வழி தேடியுள்ளது.

மிக முக்கியமான அரசியல் நோக்கத்தோடு அரசாங்கம் தேர்தலை நடத்துகிறது. மறுபுறம் தேர்தலில் நாங்களும் ஆஜர் என்று கூறிக்கொள்ளும் அமைப்புக்கள் வெறும் கையோடு களத்தில் நிற்கின்றன.

தங்களுக்குள் ஒருவரை ஒருவ குற்றம் சாட்டியும் கொள்கின்றன.

தவழ்ந்து உருண்டவன். ஆகவே எனக்கே வாக்களிக்கவேண்டும் என்ற ரீதியில் வேட்பாளர்கள் சிலர் ஊர்ப்பாசம் நிரம்பி வழிய பேசுவதுண்டு.

எனினும் ஈழக்கோரிக்கையை முன்வைத்து, தமிழ் பேசும்மக்களினது ஒற்றுமையை வலியுறுத்தி தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தல்களை எதிர்கொள்ளத் தொடங்கிய 1977ம் ஆண்டின் பின்னர் வடக்கு-கிழக்கில் உளுத்துப்போன வாதங்கள் ஒளித்துக் கொண்டன.

உதயசூரியன் சின்னம் மட்டுமே கவனிக்கப்பட்டது. ஆட்களைப் பார்க்காமல் அவர்கள் சார்ந்துள்ள அணி எதுவென்றே நோக்கப்பட்டது.

வந்தான் வரத்தான், வேறு பிரதேசக்காரன் என்ற வாதங்கள் எழுப்புவோரை மக்கள் ஒற்றுமையின் விரோதிகளாகவே பார்த்தனர்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டணியினர் செய்த குழப்பத்தால் கிழக்கில் காசி ஆனந்தன் தோல்விகண்டார். காசி ஆனந்தன் மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்தவர்.

ஆனால் அதே காசி ஆனந்தன் யாழ்ப்பாணத்தில் 77 பொதுத் தேர்தலில் நிறுத்தப்பட்டிருந்தால் மாபெரும் வெற்றியை பெற்றிருக்க முடிந்திருக்கும்.

அந்தளவுக்கு குறுகிய வாதங்கள் ஓரம்கட்டப்பட்டு ஒற்றுமையின் அவசியம் உணரப்பட்ட காலம் அது.

77 பொதுத் தேர்தலுக்கு பின்னர் வந்த உள்ளூராட்சி சபை, மாவட்டசபை தேர்தல்களிலும் அவ்வாறான ஒற்றுமை உணர்வுகளே பிரதிபலித்தன.

அன்று-சாதிவாதங்களை ஒழித்துக்கட்ட கூட்டணியினர் சலூன்களுக்கு சென்று தாமும் சவரம் செய்யும் வேலை செய்தனர். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மலம் சுமக்கும் வண்டி தள்ளினார். சம பந்திப் போசனங்கள் நடத்தினார்கள்.

ஆன்றால்-அன்று அவை கேலி செய்யப் பட்டன. அவ்வாறான நடவடிக்கைகளால் சாதியை ஒழிக்க முடியுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

77 பொதுத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் திரு.இராசலிங்கத்தை நிறுத்தியது கூட்டணி. சாதி வெறிக்கு சாட்டையடியாக அவரை தெரிவுசெய்து ஒற்றுமையை உலகுக்கு உணர்த்துங்கள் என்று சொன்னது கூட்டணி. உணர்த்தினார்கள் மக்கள். திரு.இராசலிங்கம் அமோக வெற்றியீட்டினார்.

கூட்டணித்தலைவர்களை விட தொண்டர்கள், இளைஞர்கள் திரு. இராச லிங்கத்தின் வெற்றிக்காக உழைத்த உழைப்பு இன்றும் கண்முன்னால் நிற்கிறது.

ஒரு இராசலிங்கம் தேர்தலில் வெற்றி யீட்டியது மூலமாக சாதியை ஒழிக்கமுடியுமா? சாதி ஒழிந்ததா? என்ற கேள்விகள் ஒரு புறம் இருக்கட்டும்.

அந்த நேரத்தில் இளைஞர்கள் மத்தியில் இருந்த உயர்ந்த உணர்வுகள், சாதி, மத, வாக்குகளை கவரமட்டுமே கூட்டணித்தலைவர்கள் அவ்வாறு செய்தனர் என்று முன்வைக்கப்படும் வாதத்தில் பெருமளவான உண்மை இருக்க முடியாது.

ஏன்- இதனை இன்று சுட்டிக்காட்டவேண்டி இருக்கிறதென்றால், இப்போது குறுகிய வாதங்களை தமிழினத்துக்காகப் போராடுவதாக சொல்லும் இயக்கங்கள் சிலவும் ஒத்துக்கொள்ளத் தொடங்கி விட்டன.

அந்த வாதங்களை எதிர்க்கத் தொடங்கினால் எதிர்ப்பு வந்துவிடுமோ என்று பயந்து சூழலுக்கு பணிந்து போகும் துணிச்சல் அற்ற தன்மை வெளிப்படுகிறது.

உறுப்பினர்களும் அதற் கேற்பவே உருவாக்கப் படுகிறார்கள்.

முன்னர் கூட்டணியினர் வேட்பாளர்களை தெரிவு செய்ய நீண்டநாள் கூடி ஆராய்ந்து பரிசீலித்து முடிவு செய்தார்கள். அவ்வாறு முடிவு செய்த போதும் ஒரு சிலர் போராட்டத்தோடு இணைந்து வளர்ந்தவர்களாக இல்லாமல் போனமை உறுப்பினர்க ளிடையே அதிருப்திகளை தோற்றுவித்ததுண்டு.

ஒருவரது பெயரின் பின்னால் உள்ள பட்டங்களைப் பார்க்காமல் போராட்டத்தில் பட்ட வடுக்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்லப் பட்டது.


அப்படியிருந்தபோதும் கூட்டணித்தலைவர்கள் சிலர் சட்டத்தரணி தொழில் பார்த்துக்கொண்டு அரசியலை ஒரு பொழுதுபோக்காக, மாலை ஓய்வு முயற்சியாக கருதுகிறார்கள். அவர்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியாது என்று கூறப்பட்டது. அப்படிக் கூறித்தான் இனத்திற்காக முழுநேரமும் போராடும் தலைமைகள் என்று சொல்லிக்கொண்டுதான் இயக்கங்கள் முன்னால் வந்தன.

ஆனால் இன்று- அதே இயக்கங்களில் சில தங்களில் நம்பிக்கையிழந்து, தங்கள் உறுப்பினர்கள் நல்ல தலைவர்களாக உருவாக முடியாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் பெயருக்குப் பின்னால் பட்டம் உள்ளவர்களை தேடிப்போய் கதவுகளை தட்டுகின்றன.

வேட்பாளர்கள் தெரிவு என்ற விடயமே கிடையாது. போட்டியிட ஆட்கள் கிடைப்பதே அரிது என்ற நிலையில் தெரிவு என்ன வேண்டியிருக்கிறது. ஊர்வாதங்கள், பிரதேச வாதங்கள் எவையென்றாலும் சரிதான். தமது அமைப்பின் வெற்றியே முக்கியமாகப்படுகிறது.

இன ஒற்றுமை உணர்வுக்கு பதிலாக ஒவ்வொரு இயக்கமும் தனது முத்திரையை பாதுகாக்க முயல்வதே தெரிகிறது.

எனவே மீண்டும் குறுகிய வாதங்கள் உயிர்பெறத் தொடங்கிவிட்டன. பிரச்சாரங்களில் உளுத்துப்போன வாதங்களின் நாற்றம் மூக்கைத் துளைத்து முகம் சுளிக்க வைக்கிறது.



"மேடையிலே ஏறி
நாலு வார்த்தை பேசிவிட்டால்
தாமும் தலைவர்கள் என்று
சிலர்
நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்."
-அமரர் அமிர்தலிங்கம்-

வேட்பாளர்களது தகுதிகளை ஆராய்ந்து பார்த்தால் தமிழ்நாட்டில் அமரர் எம்.ஜி.ஆர். ஐசரிவேலன் என்றொரு நடிகரை தேர்தலில் நிறுத்தி வெற்றிபெற வைத்ததை நினைத்து கேலி செய்த நம்மவர்கள் தலைகுனிய வேண்டும். ஐசரிவேலன் எம்.ஜி.ஆருக்கு என்றாலும் விசுவாசமாக இருந்தார்.

இங்கே இன்னொரு முக்கிய விடயமும் கவனிக்கத்தக்கது.

தமிழ் இயக்கங்கள் ஒன்றுபட்டு தேர்தலில் நிற்கவில்லையே தவிர அங்கிருந்து வந்தவர் இங்கே, இங்கிருந்து போனவர் அங்கே என்ற ரீதியில் பாய்ச்சல் மன்னர்கள் சிலரை துணை தேவைப்படுகிறது.

தெருவிளக்கும், வீதி போடுவதும் முக்கியம் தான். ஆனால் தமிழ் மக்களின்அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் முழுமையான போராட்டத்தில்அவை ஒரு சிறு பகுதிமட்டுமே. முழுமைக்கு உட்பட்டதே பகுதி. முழுமையின் நலனுக்கு பகுதிப் பிரச்சனைகளின் நலன்கள் பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் தற்போது கிழக்கிலும், வவுனியாவிலும் நடத்தப்படுவது ஒரு முக்கியமான அரசியல் விவகாரம்.

தமிழ் பேசும் மக்களது பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணாமல் அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துகிறது.

வடக்கு-கிழக்கு பிரிப்பு விடயத்திலும் ஜனாதிபதி பிரித்தேயாக வேண்டும் என்கின்ற உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் சில பேச்சுக்கள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகின்றன.

குமார் பொன்னம்பலம் மட்டும்தான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

யார் இந்த குமார் பொன்னம்பலம்?

தமிழ்பேசும் மக்களது போராட்டத்திற்கு இவர் செய்த பங்களிப்பு என்னவென்றெல்லாம் கேட்கப்பட்டு பல தேர்தல்களில் அவரை தோல்விபெற வைத்தார்கள்.

இப்போது அப்படிக் கேட்க முடியாது. ஏன் என்றால், அவரோடு ஒப்பிடமுடியாதவர்கள் எல்லாம் தமிழர்களது வேட்பாளர்களாக தரமுயர்த்தப்படுகிறார்கள். ஆக பொன்னம்பலம் ஜூனியர் பரவாயில்லை.

ஜி.ஜி. பொன்னம்பலத்தின் மகன் என்பதற்காக தேர்தலில் ரிக்கற் கொடுக்க முடியுமா என்று அன்று கேட்டார்கள். இப்போது நினைத்தால் சிரிப்பு வருகிறது.

நேற்றுவரை பிறிதொரு அமைப்பில் இருந்துவிட்டு இன்று மாலை தம்மோடு சேர்ந்தவர்களை நாளை காலை கையொப்பம் வாங்கி வேட்பாளர்களாக அறிவிக்கும் காலம் இது.

தமிழர்களது அரசியலின் தரம் தாழ்ந்து வழிகாட்டல் இழந்து மீளமுடியுமோ என்றும் சந்தேகத்துக்குரிய சகதியில் விழுந்துவிட்டதற்கு வேறு உதாரணங்கள் ஏன்?

ஆக மொத்தத்தில் அரசாங்கம் ஒரு அரசியல் நோக்கத்தோடு நடத்துகின்ற தேர்தலை தமிழ் அரசியல் கட்சிகள் அரசியல் நோக்கமோ அல்லது, அரசியல் ரீதியில் அதனை பயன்படுத்தும் தெளிவான திட்டமோ இன்றி எதிர்நோக்கியுள்ளன.

'இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வென்பது வேண்டாத பேச்சு.'

கிழக்கிலும்,வவுனியாவிலும் உள்ள தமிழ் மக்கள் அரசாங்கத்தின் பக்கமே உள்ளனர்.

'கிழக்கிலே பிரிப்பு ஆதரவு இருக்கிறது.'

'கிழக்கிலும் வவுனியாவிலும் புலிகள் விரட்டப்பட்டதால், இன்னும் சொல்லப்போனால் பயங்கரவாதிகள் விரட்டப்பட்டதால் ஜனநாயக நடைமுறைகள் வந்துவிட்டன.'

'ஆக, புலிகள்தான் பிரச்சனை. வேறு பிரச்சனைகள் கிடையாது.'

ஆனால் எந்தவகையில் வேறுபடுகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

தேர்தல் பிரச்சாரத்தில் கூட ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி மிகுந்த தீவிரத்தை காட்டுகிறது. பிரதமர் முதல் கட்சிப் பொதுச் செயலாளர்வரை களத்தில் இறங்கியிருக்கிறார்கள். தமிழ் அரசியல் கட்சிகள் பலவீனமான தொனிகளில் பேசுகின்றன.

அரசியல் கொள்கைகளோ, அரசியல் தலைமைத்துவ வழிகாட்டலோ இல்லாத தேர்தல் என்பதால் பொதுமக்கள் தங்களால் முடியுமான வரை ஒரு தெரிவு செய்யும் வழியை தீர்மானிக்கப் போகிறார்கள்.

தேர்தலில் நிற்பவர்களில் ஓரளவு சிறந்தவர் யார்? நாளை வீடு தேடிப்போய் தெரு விளக்கு விசயம் பற்றிப் பேசினால் சட்டைப் பையை பார்க்காமல் காரியத்தை முடித்துத்தரக்கூடியவர் யார்? நேற்றுவரை வேறு ஒரு அமைப்பில் இருந்து செய்வதையெல்லாம் செய்துவிட்டு, அனுபவிக்க வேண்டியதையெல்லாம் அனுபவித்துவிட்டு இப்போது பக்கம் மாறிவந்து நல்ல பிள்ளைக்கு நடிப்பது யார்? என்றெல்லாம் தாமே சீர்தூக்கி ஆராய்வார்கள்.

ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டும் பிரச்சாரங்களை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமைதான் இம்முறை பொதுவான ஒரு முன்னேற்றம்.

தமிழ் பேசும் மக்களது இரத்தம் சொரிந்த போராட்டத்தில் இருந்து மட்டுமல்ல, இன்று அவர்களை வேட்பாளர்களாக அறிமுகப்படுத்தி யுள்ள அமைப்புக்களிலிருந்தும் தூரவிலகி நின்றவர்கள் யார் என்பது மக்களுக்கு தெரியும்.

என்னால் இத்தனை வாக்கு திரட்டமுடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் தனிநபர்களை சில அமைப்புக்கள் நம்பிக்கொண்டிருக்கின்றன. வாக்குகளை திரட்டித் தரமுடியும் என்றால் உன் வரலாறு எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்ற ரீதியில் அமைப்புக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டபின்னர் மக்களை குறை சொல்ல முடியாது.

ஊர்வாதங்களும், வந்தான் வரத்தான்கள் எல்லாம் தேர்தலில் வந்து நிற்பதா? சாதி என்ன மதம் என்ன என்ற கேள்விகளும் உயிர்பெறுவது தவிர்க்க முடியாதது.

மக்களை வழிநடத்த வலுவான, துணிச்சலான தலைமைத்துவம் இல்லாதபோது வெற்று மைதானமாகிவிட்ட அரசியல்தளத்தில் யார் வேண்டுமானாலும் விளையாடலாம்.

விபரம் தெரிகிறதோ- இல்லையோ நாற்ற மடிக்கும் வாதங்களை தூக்கிவந்து இத்தனைகால இரத்தம் சிந்தல்களுக்கும் அர்த்தமில்லாமல் செய்யலாம்.

ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வது என்பது குப்பைகளையும், கழிவு களையும் கொண்டுவந்து கரையில் போட்டு முகம் சுளிக்கவைப்பது என்று அர்த்தமல்ல. அப்படி அமையுமானால் நீரோட்டத்தில் காணாமல் போகும் நிலைதான் ஏற்படும் என்பதை தமிழ் அரசியல் அமைப்புக்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

---

## அதிரடி அய்யாத்துரை

அந்தக்கால சாப்பாடோ என்னவோ தெரியாது. உடம்பும் ஆரோக்கியம். உள்ளமும் ஆரோக்கியம். அதாலை இந்த அரசியல் இருக்குது பாருங்கோ அதுவும் ஆரோக்கியமா இருந்தது. அந்தக் காலத்திலை ஒரு மேயர், நகரசபைத் தலைவர் எண்டா மரியாதையே தனிதான். இப்ப பாருங்கோ அந்தக் காலத்திலை நகரசபை உறுப்பினரா இருந்தவைமின்ரை தகுதியே இல்லாதவைகூட தங்களை சபைகளுக்கு தலைவராக்க சொல்லிக்கேட்கினம். வயிறு பற்றி எரியுது.

கிழக்கிலை ஒரு வேட்பாளர் அறிக்கை விட்டிருக்கிறார். "ஏதோ தெரியாத்தனமா என்ரை பேரைக்கெடுத்துப் போட்டன். இப்ப வாபஸ் வாங்க ஏலாமல் கிடக்குது. என்னை நீங்கள் தெரிவு செய்தாலும் சத்தியமாய் ராஜினாமாச் செய்வன்." உவர் மாதிரி ஆட்களுக்கெல்லாம் ஆசை வருவானேன்? பிறகு அவதிப்பட்டு அறிக்கை விடுவானேன்?

கொழும்பிலை "இதுதாண்டா இயக்கம்" எண்டு புறப்பட்டு சுடப்பட்டவர் கொழும்புக்கு வந்த கையோடை கோழிப்பண்ணை நடத்த இயக்கம் ஒண்டின் ஆலோசனை கேட்டவராம். பிறகு என்ன நினைச்சாரோ தெரியாது. கோழி வளர்க்கிறதைவிட இயக்கம் நடத்துறது 'பெட்டர்' எண்டு இறங்கிப் போட்டார். அவர் தமிழ்நாட்டிலை இருக்கேக்கை வாய் நீளமான மனுசன் எண்டு சொல்லுறவையாம். அங்கை இருந்தே புழுகிக் கொண்டு இருந்திருக்கலாம்.

வழக்கம் மாதிரி தேர்தல் பிரச்சாரத்திற்கு பாரதியார்-பாரதிதாசன் வசனமெல்லாம் கொண்டுவந்து தூய தமிழில்



பற்றை சிலர் காட்டுகினம். 'கூட்டத்தில் கூடி நின்றுகூவி பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே' எண்டு சொன்னவர் பாரதியார். "பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு" என்றார் பாரதிதாசன். இஞ்சை தமிழுக்கு மட்டுமல்ல, தமிழருக்கே இன்னல் வந்தபோதும் வீட்டிலை சோறு பொங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆட்களை தலைவர்கள் ஆக்கினா சங்கு எப்படி முழங்கும்? பாரதியாரையும்-பாரதிதாசனையும் ஏன் இழுக்கவேணும்?

கொழும்பில் பிரபல கிரிக்கெட் குழுவொன்று ஜாலியாய் பேசிக்கொண்டிருந்த நேரத்திலை இலங்கை அணிக்கு இன்னும் நல்ல கோச் தேவை எண்டு ஒருத்தர் சொல்ல, பக்கத்திலை இருந்தவர் உடனை சொன்ன பதில், "மிஸ்டர் யோகியை கூப்பிடலாம்." அவர் யாழ்ப்பாணத்திலை கிரிக்கெட் விளையாடும் விசயம் அவ்வளவு பிரபலம். 'விலகியிரும், யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியே போக நினைக்காதையும்' எண்டு மேலிடம் ஓடர். அவர் எப்படி வாறது?

உள்ளூராட்சித் தேர்தலிலை சாதி-மத-பிரதேச பேத பேய்கள் எல்லாம் தலைகாட்டுதாம். தமிழ் உணர்ச்சியை பரப்பி வாக்குத் தேடவும் சிலர் முயற்சி பண்ணுகினம். பாரதிதாசன் அந்தக் காலத்திலையே சொல்லியிருக்கிறார்.

*"தமிழ் அழிப்பார் எனினும் அவர்*
*தமிழ் வளர்ப்போம் என்றுரைத்துத்*
*தமை வியப்பார்."*

இதுமட்டுமோ இன்னும் சொல்லுறார் கேளுங்கோ.

*"தணியாத சமயமொடு*
*சாதியெனும் தீயில் நெய்யைச்*
*சாய்த்துச் செல்வார்.*
*..............................*
*கலகத்தைச் சமயத்தை*
*கழறுவதைக் காதாலும்*
*கேட்க வேண்டாம்."*

கேட்காமலும் இருக்கவேணும். வாக்குகளை அப்படியானவைக்குப் போடாமலும் இருக்க வேணும்.



# கொலம்பியாவில் கொலை வெறி

## அங்கும் இயக்க மோதல்கள்!

உலக ரவுண்ட்ப்

அரசியல் பீடத்தை யார் அலங்கரிப்பது என்ற போட்டிக்கு சனநாயக முறையே சிறந்ததெனக் கொள்ளப்பட்டாலும், வாக்குச் சீட்டைவிட துப்பாக்கி வேட்டே தகுந்ததென்ற வாதம் இப்பொழுது உலகனைத்தும் பரவிவருகிறது. தென் அமெரிக்காவில், பசுபிக் பெருங்கடலின் அரவணைப்பில், ஈக்குவேடர், பனாமா மற்றும் வெனிசூலா நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ள கொலம்பியா குடியரசும் இதற்கு விதி விலக்கல்ல.

இக்குடியரசின் தேசிய சபைக்கான பொதுத் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது. மே மாதம் குடியரசுத் தலைவர் தேர்தலும் அக்டோபரில் உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுக்கான தேர்தலும் நடை பெறவுள்ளன. இந்த அறிவிப்புகள் வெளியானதைத் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் பரவலாக வெடித்துள்ளன. திடீர் திடீரென ஆயுத பாணிகளாகப் புகும் முகமூடி அணிந்த குழுக்கள் வகை தொகையின்றி மக்களைக் கொன்று குவித்துவிட்டுத் தலைமறைவாகிவிடுகின்றன. வன்முறை எந்த இடத்தில், எந்த நேரத்தில் வெடிக்கும் என்று தெரியாதமையினால் அப்பாவிப் பொதுமக்கள் எந்த நேரமும் பயப் பிராந்தியுடன் தான் நடமாட வேண்டியுள்ளது.

சுமார் மூன்றேகால் கோடி மக்கள் தொகையினைக் கொண்ட கொலம்பியாவில் அரசியல் கட்சிகள் ஆயுதப்படைகளையும் தம் வசம் வைத்துக்கொண்டுள்ளனவோ என்று தான் கருத வேண்டியுள்ளது. அதிகார பீடமேறும் நோக்குடன் பல இயக்கங்கள் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு போரிட்டு வந்தன. சில இயக்கங்கள் 'அயுதங்களால் பலனில்லை' என்று உணர்ந்து மனம் மாறி தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொண்டன. அதே வேளை, 'ஆயுத பலத்தால் மட்டுமே ஆதிக்கம் பெறலாம்' என்ற நம்பிக்கையுடன் செயற்படும் இயக்கங்கள், ஆயுதங்களைக் களைந்து சனநாயகத்தில் நம்பிக்கை வைத்த குழுவினரை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையில் இறங்கிவிட்டன.

குடியரசுத் தலைவருக்கான தேர்தல் 1990ல் நடைபெற்று சீசர் கவீரியா தெரிவானார். ஆனால், மூன்று வேட்பாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இத்தகைய பயங்கரவாத நடவடிக்கையில் எவர் ஈடுபடுகிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. எந்த இயக்கமும் கொலைகளுக்கு உரிமை கோருவதில்லை என்பதனால் சகல இயக்கங்கள் மீதும் சந்தேகம் எழுகின்றது. அரசாங்கத்தின் படைப் பிரிவுடன் இணைந்து இயங்கும் ஆயுதக் கும்பல் ஒன்றே இத்தகைய கொலைகளுக்கு காரணம் என்று, 'பழி ஓரிடம் பாபம் ஓரிடம்' என்ற ரீதியிலும் முற்றுப்புள்ளியிடப்படுவதுமுண்டு.

ஜனவரிமாத இறுதியில் ஒரு சனிக்கிழமை இரவு ஐந்து பிள்ளைகளின் தாய்-கணவனை இழந்தவள்- பிள்ளைகளின் படிப்புக்கு நிதி சேகரிக்க- அந்த நாட்டுப் பாணியில்- ஒருவிருந்து வைத்தாள். 500 பேர்வரை அங்கு கூடினர். ஆடிப்பாடி மகிழ்ச்சியாக விருந்துண்டு மகிழ்ந்தனர். நடுநிசி கடந்து ஞாயிறு அதிகாலையானது.

திடீரென்று எங்கிருந்தோ ஆயுத பாணிகளாக 20 பேர் புகுந்தனர். அத்தனை பேரும் தங்கள் அடையாளங்களை மறைக்க முகமூடி அணிந்திருந்தனர். தங்கள் ஆயுதங்களை நீட்டி மளமளவென்று சுட்டனர். வந்ததுபோல் ஓடி மறைந்தனர்.

35 பேர் மாண்டனர். பலர் படுகாய மடைந்தனர். இதுதான் கொலம்பியக் குடியரசின் நாடு நகர்ப்புறங்களில் அன்றாடம் நிகழும் சம்பவங்கள். இன்று நேற்றல்ல- கடந்த அரை நூற்றாண்டாக இதேபோன்ற சம்பவங்கள் தான் தொடர்கின்றன.

## பாகிஸ்தானில் பெண் பொலிஸ் சேவை



பாகிஸ்தானில் பெண் பொலிஸ் சேவை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. முற்றுமுழுதாக பெண் பொலிசாரைக் கொண்டு ராவல்பிண்டி நகரில் ஒரு பொலிஸ் நிலையத்தை பிரதமர் பெனாஸீர் பூட்டோ தொடக்கி வைத்தார்.

பெண் குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களிலோ, ஆண்களாலேயே கண்காணிக்கப்படும் சிறைக் கூடங்களிலோ தடுத்து வைக்கப்பட்டால், அவர்கள் கடுமையான சித்திரவதைக்குட்படுத்தப்படுவதுடன் கற்பழிக்கப்படுவதும் சகஜமாகிவிட்டதென மனித உரிமைக் கழகங்கள் பலமுறை சுட்டிக்காட்டி வந்துள்ளன.

இதனால்தானோ என்னவோ, இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, பெண் பொலிஸ் நிலையங்களை நிறுவும் யோசனை ஏற்பட்டிருக்கலாம்.

பெண் பொலிசாரிடம் பிடிபட 'நீ முந்தி நான் முந்தி' என்று பல குற்றவாளிகள் கூட்டம் ஓடோடி வந்து சிக்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்கிறார் ஒரு கனவான்.

## நடிகை தொடுத்த வழக்கு! நம்ப மறுத்தது நீதிமன்றம்!!



லண்டனிலிருந்து வெளியாகும் 'சண்' என்ற ஆங்கிலத் தினசரி மீது 'சோப் ஒப்பறா' நடிகையான கில்லியான் ரெயில்ஃபோத் மான நட்ட வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்.

பொது மக்கள் கூடும் பூங்கா ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த தனது மோட்டார் வண்டியில் ஓர் ஆணுடன் நடிகை தகாத உறவு கொண்டிருந்ததை பொலிசார் கண்டு பிடித்து கண்டித்தனர் என்ற செய்திதான் 'சண்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

வழக்கு விசாரணைக்கு வந்தது. குறுக்கு விசாரணையின்போது ஜுரிமாரை தனது வியாக்கியானங்களால் திருப்திப்படுத்த ரெயில்ஃபோத் தவறிவிட்டார். தன்னுடன் வண்டியிலிருந்த தனது காதலன் சுகயீனமுற்றிருந்தமையினால் அவர் ஆடைகளைத் தளர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டதாக ரெயில்ஃபோத் கூறிய காரணத்தை ஜுரிமார் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் வழக்குச் செலவு மற்றும் வழக்கறிஞர்களுக்கான செலவினங்களுக்காக ரெயில்ஃபோத் 750,000 டொலர்வரை அபராதம் செலுத்த வேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. தீர்ப்பினைக் கேட்ட ரெயில்ஃபோத் அதிர்ச்சியடைந்து மயங்கி விழுந்து விட்டார்.



## அன்று நடந்த வதைக்கு இன்று கேட்கின்றனர் நஷ்டஈடு!

இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற காலத்தில் இந்தோனேஷியாவை ஜப்பானியப் படைகள் கைப்பற்றியிருந்தன. அக்கால கட்டங்களில் அங்குள்ள சிறைகளில் ஏராள மான டச் நாட்டவர்களை ஜப்பானியர் அடைத்து வைத்திருந்தனர். இவ்வாறு கைதிகளாக இருந்தவர்களில் 8 பேர் இப்பொழுது ஜப்பானிடம் நட்டஈடு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணைகள் இப்பொழுது தொடங்கியுள்ளன.

சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, மனம் பேதலித்தமையினால் உளக் கோளாறுகள் தங்களுக்கு ஏற்பட்டிருப்பதாக அவர்கள் தங்கள் வாதத்தில் கூறியுள்ளனர். பலாத் காரமான முறையில் கடுமையாக வேலை வாங்கப்பட்டதாகவும் பாலியல் குற்றங்களுக் குட்படுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.

## காரிலே குளிக்கலாம்

மோட்டார் காரினை குளிக்கும் தொட்டியாகவும் பயன் படுத்தப்படலாம். 1950ம் ஆண்டுகளில் விற்பனைக்கு வந்த 'ஸ்போட்ஸ் மொடல்' போன்ற அமைப்பினைக் கொண்ட இவ்வண்டியினை குளிக்கும் தொட்டியாக மாற்றியுள்ளனர். வேண்டிய இடங்களுக்கு இதனைக் கொண்டு செல்லவும் முடியும். குளிக்கும் நீரினை சூடாகவோ ஐஸ் குளிரர்கவோ மாற்றும் சாதனங்களும் இவ்வண்டியில் பொருத்தப்பட்டுள்ளன. இதன் விலை 22,000 டொலர்தான். நம்நாட்டுப் பெறுமதிப்படி

## பழையன மறந்து உறவுகொள்ளும் நேரம்

வட வியட்நாம்- தென் வியட்நாம் போர் நடைபெற்றபோது, அமெரிக்கா தென் வியட்நாமை ஆதரித்து போரில் குதித்தது. ஈடுகொடுக்க முடியாமல் அமெரிக்கா பின்வாங்கியதெனினும் வியட்நாமுடன் வர்த்தகம் முதலான தொடர்புகளை கடந்த 19 வருடங்களாக தவிர்த்து வந்தது.

இத்தனை வருடங்களின் பின்னர் அந்நாட்டுடனான பொருளாதார-வர்த்தக உறவுகளை மீண்டும் தொடர அமெரிக்க செனட் அனுமதி வழங்கியிருக்கிறது. வெகுவிரைவில் தொடர்புகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மாத்தையா

விடுதலைப் புலிகள் அமைப்பின் உள் பிரச்சனைகள் இன்று படு பிரபலமாகிவிட்டன. இதுவரை புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வே. பிரபாகரன் தனது முன்னாள் நண்பனுக்கு என்ன நடந்தது என்று எதுவும் சொல்லவில்லை. அதனால் ஊகங்கள், வதந்திகள், தகவல்கள் என்று பலவடிவங்களில் வெளியுலக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. ஜன.21–பெப்.5 'இந்தியா டுடே' சஞ்சிகை வெளியிட்டுள்ள விமர்சனம் இது:



பிரபாகரன்

# இயக்கத்தில் துரோகம்

## மாத்தையா விவகாரம் பிளவை அம்பலப்படுத்தும்


நாட்டின் இரகசியங்களை எதிரிக்குத் தெரிவிக்கிற எந்தவொரு துரோகியும் பிடிபட்டால் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை என்பது விதி. புலிகள் இயக்கத்தின் முன்னாள் துணை கமாண்டர் கோபால்சாமி மகேந்திர ராஜா இந்திய, இலங்கை பாதுகாப்பு அமைப்பு களுக்கு தகவல் தந்து கட்டுப்பாட்டை மீறிவிட்டார் என்று அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவருக்கு மரண தண்டனை விதித்திருக்கிறார். பதவி ஆசையும் செல்வாக்கும் கொண்ட இவரை அப்புறப்படுத்த புலிகள் தலைவர் ஆடும் நாடகமாக இது இருக்கலாம். ஆனால் கட்டுக்கோப்பானது என்று பெருமைப் பட்டுக்கொள்ளும் புலிகள் இயக்கத்திற்கு மகேந்திரராஜாவின் இந்த "துரோகம்" பெரிய அடி என்றுதான் சொல்ல வேண்டும்.

மாத்தையா என்றழைக்கப்படும் மகேந்திர ராஜாவை விசாரணை செய்வது புலிகளுக்கு அவ்வளவு சுலபமாயில்லை. இந்தியாவின் 'ரோ' மற்றும் இலங்கைப் புலனாய்வு அமைப்பின் ஏஜெண்டாக அவர் செயற்பட்டார் என்பது ஓர் அசாதாரணமான குற்றச்சாட்டு. விசாரணை ஏற்படுத்தக் கூடிய தர்மசங்கடத்திலிருந்து தப்பிக்க ஓர் எழுச்சியான தருணத்திற்கு பிரபாகரன் காத்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன்பு வெலிஓயாவி லிருந்து ஜனக்புரா இராணுவ முகாமைத் தாக்கி 50 இலங்கை வீரர்களைக் கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றி இராணுவத்தை தோற்றோடச் செய்த அடுத்த நாளே இயக்கத்தின் மூன்று சீனியர் தலைவர்கள் மாத்தையாவை வட இலங்கை புதுக்குடி யிருப்பில் பிடித்தார்கள்.

விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவனும் மாத்தையாவுக்குப் போட்டி யாளனுமான கிட்டுவைப் பற்றி மாத்தையா இந்தியாவிற்கு தகவல் தெரிவித்தார் என்று (தான் இருந்த கப்பலை இந்திய கடற்படை சூழ்ந்ததும் கிட்டு தற்கொலை செய்து கொண்டார்) பிரபாகரன் குற்றம் சாட்டுகிறார்.

தொண்டர்களிடையே மாத்தையாவின் உறுதி, செல்வாக்கு அதிகரித்து வருவதை பிரபாகரன் தன் அசைக்க முடியாத தலைமைக்கு விடும் சவாலாக கருதினார்



கிட்டு

என்றும், வெலிஓயாவில் கிடைத்த வெற்றியை அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஒரு வாய்ப்பாக பயன்படுத்தினார் என்றும் முன்னாள் தமிழ் தீவிரவாதிகள் தெரிவிக்கிறார்கள். ஆனால் மாத்தையாவின் கைது சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டு விடாமலிருக்க புலிகள் அவர் மீது ஏற் கனவே துஷ்பிரச்சாரத்தை யாழ்ப்பாணத்தில் துவக்கி விட்டார்கள். "மாத்தையாவின் மரண தண்டனை நிறைவேற்றத்திற்கு முன்பு பூநகரியில் நடத்திய மாதிரி இலங்கை பாதுகாப்பு படைமீது ஒன்றிரண்டு பெரிய தாக்குதல்களை நடத்த பிரபாகரன் காத்திருப்பார். இதுதான் மக்களுக்கு அவர் தரும் அபின். இதனால் எதிர்ப்பு இருக்காது." என்கிறது புலிகளின் முந்தைய கூட்டாளியான ஈரோஸ் வட்டாரம்.

கனடா, லண்டனிலிருந்து வெளியாகும் தமிழப் பத்திரிகைகளில் எழுதப்படும் கட்டுரைகளை ஆதாரமாக வைத்து விரைவில் தண்டனை நிறைவேற்றப்படும் என்று இலங்கைப் பத்திரிகைகள் எழுதின. கிட்டுவின் முதல் நினைவு தினமான ஜனவரி 16 என்று ஒரு தேதி குறிப்பிடப் பட்டது. ஆனால், மாத்தையா கொல்லப் பட்டு விட்டார் என்று பலர் நம்புகிறார்கள்.


மாத்தையாவின் 200 ஆதரவாளர்கள் ஏற்கனவே புலிகளால் கைது செய்யப்பட்டு அனைவரும் கொல்லப்பட்டக்கூடும் என்று சொல்லப்பட்டாலும் இயக்கத்தில் பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவரான ரஞ்சித் அப்பா உள்ளிட்ட இன்னும் பல சக்திமிக்க ஆதரவாளர்கள் அவருக்கு இருக்கிறார்கள் என்கின்றன தமிழ் வட்டாரங்கள். இதனால் அவருக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு கடுமையான நடவடிக்கையும் சிக்கலை வரவழைக்கலாம் என்கிறார் தமிழர்கள் போராட்டத்தை நன்கு அறிந்த ஒரு இந்திய தூதரக அதிகாரி.

ராஜீவ் காந்தியையும், பிறகு பிரேம தாசாவையும் படுகொலை செய்வது என்ற புலிகளின் முடிவு விவேகமற்றது என்று மாத்தையா கேள்வி எழுப்பியபோது கருத்து வேறுபாடுகள் சிதறி வெடித்ததில் ஆச்சரிய மில்லை. இந்தப் பூசலைக் கண்டு இலங்கை இராணுவத்துக்குத்தான் சந்தோஷம். இம்மாதிரி மோதல்கள் முடிவில் புலிகள் இயக்கத்தையே அழித்துவிடும் என்பதால் மேலும் கோஷ்டி மோதல்களை அது எதிர்பார்த்திருக்கிறது. பிரபாகரனின் ஆட்கள் மாத்தையாவின் ஆட்களைத் தேடி வேட்டை நடத்துகிறார்கள் என்ற புலனாய்வு அறிக்கைக்குப் பிறகு யாழ்ப்பாண நகர் மீதான விமான தாக்குதலை ஒத்தி வைத்தோம் என்று ஒரு இராணுவ அதிகாரி தெரிவித்தது அதன் இரத்தினச் சுருக்கம்.

நன்றி-இந்தியா டுடே

www.padippakam.com

# அலசுவது – இராஜதந்திரி



# அரசியல் சதுரங்கத்தில் ஆயர்கள்!

## கெடுபிடிகளற்ற விடிவுக்காக ஏங்கித்தவிக்கும் வடக்கு-கிழக்கு மக்கள்!

சதுரங்க ஆட்டம் (Chess) உலகப் பிரசித்திபெற்றது.

படைவீரர்களுடன் ராஜா, ராணி, குதிரைவீரர்கள், உட்பட மதப் பிரமுகர்களான ஆயர்மாரும் (Bishop) இடம்பெறுவதாகவே, சதுரங்க ஆட்டக் காய்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சதுரங்க ஆட்டத்தில் பங்குபற்றுவோர் நகர்த்தும் காய்களில் மதகுருவைக் குறிக்கும் பிஷப் (Bishop) என்ற ஆட்டக்காயும் மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கையின் அரசியல் சதுரங்கத்திலும் வடக்கு-கிழக்கு நிலவரத்தைப் பொறுத்தவரையில், கிறிஸ்தவ ஆயர்மார் காட்டும் கரிசனை மிகவும் குறிப்பிடத் தக்கதாகவே இருக்கின்றது.

கத்தோலிக்க, கிறிஸ்தவ பேராயர்களின் வடபகுதிக்கான பயணங்கள், வடக்கு- கிழக்குப் பிரச்னைக்கு மனிதாபிமான ரீதியிலான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்தியம்புவதாக இருக்கின்றன.

அரசியல் மேடைகளிலும், கருத்தரங்குகள், மகாநாட்டு மண்டபங்கள், மற்றும் சர்வதேச அரங்குகளில் தோன்றும் போதெல்லாம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். பேச்சுவார்த்தைகள் மூலமான சமரச முயற்சிகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றெல்லாம் அரசியல் பிரமுகர்கள் சத்தமிடுகின்றனர்.

ஆனால் செயல்ரீதியாக எதுவித அரசியல் அணுகுமுறைகளையும் முன்னெடுக்காதவர்களாகவே அரசியலாளர்கள் காணப்படுகின்றனர்.

பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் தயாராக இருப்பதாகவும், சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை என்றும் வடக்கே தம்மைச் சந்திக்கவரும் தென்னிலங்கையின் நல்லெண்ணத் தூதுக்குழுக்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி கடந்தவாரங்களில் இரு தடவைகள் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த இரு அழைப்புக்களும் பொதுக்கூட்ட மேடையில் வைத்தும், பத்திரிகைவாயிலாகவும் விடுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றனவே தவிர



மட்டக்களப்பு பேராயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

எந்தவகையிலும் கனம் மிக்க உத்தியோக பூர்வமான அழைப்புக்களாக பிரதமரின் இந்த அழைப்புக்கள் காணப்படவில்லை.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் வலுப்பெற்றுள்ள வடபகுதிக்கு கத்தோலிக்க, கிறிஸ்தவ பேராயர்கள் மேற்கொள்ளும் நல்லெண்ண விஜயங்கள் மெச்சத்தக்கனவாகவும், எதிர்கால சமாதான நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கைதரக்கூடியனவாகவும் காணப்படுகின்றன.

வடபகுதிக்குச் செல்லும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதத்தலைவர்களும் வெறுமனே தமது மதவிவகாரங்களுடன் நின்றுவிடாது, பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிடுகின்றனர்.

அகதிமுகாம்கள், மற்றும் வைத்தியசாலைகளுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை இந்த மதத்தலைவர்கள் சந்திக்கின்றனர். இதன்மூலம் யுத்தக் கெடுபிடிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களையும் அவர்கள் அறியக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

அத்துடன் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில், எதிர்காலம் குறித்து நம்பிக்கையற்ற நிலையில் வாழும் வடபகுதி மக்களுக்கு, மனத்தெம்பைக் கொடுக்கும் வருடலை வழங்குவதாகவும் பேராயர்களின் விஜயம் விளங்கி நிற்கின்றது.

கடந்த ஆண்டு கொழும்பு கிறிஸ்தவ மதப் பேராயர் கென்னத் பெர்னாண்டோ, யாழ்குடாநாட்டில் விரிவான பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரனையும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ சந்தித்திருந்தார்.

இதன்பின்னர் திரு.பிரபாகரனுடனான சந்திப்புக் குறித்து ஆயர் கென்னத் பெர்னாண்டோ கொழும்பு திரும்பியதும் தமது சொந்த அபிப்பிராயங்களை வெளியிட்டிருந்தார்.

அப்போது அவர் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலைகள் சாதகமாகவே இருக்கின்றன எனக்குறிப்பிட்டிருந்தார். அத்துடன் திரு. பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் தனக்கிருக்கும் விருப்பத்தை வெளியிட்டிருந்ததுடன், சமாதானக் கதவுகளை புலிகள் மூடிவிடவில்லை என்று தம்மிடம் தெரிவித்ததாகவும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ கூறியிருந்தார்.

கூடவே புலிகள் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரனிடம் மென்மையான சுபாவமும் இருக்கக்காணப்படுகின்றது. மனிதாபிமான விடயங்களில் அவர் நாட்டங் காட்டியிருந்தார் எனவும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

ஆனால் ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் இக்கூற்றுக்களை தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் கடுமையாக விமர்சித்திருந்தன.

பிரபாகரன் பல மரணங்களுக்கு காரணமாக இருக்கின்றார். அவரிடம் எவ்வாறு மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியும் என்று சில தென்னிலங்கை பத்திரிகைகள் கண்டனம் வெளியிட்டிருந்தன.

அத்துடன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ கிளாலி கடலேரியைத் தாண்டி யாழ் குடாநாட்டுக்குள் பிரவேசித்ததையும் பேரினவாத சக்திகள் கண்டித்திருந்தன.

தடை செய்யப்பட்ட நீர்ப்பகுதியூடாக ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்குடாநாட்டுக்குள் பிரவேசித்திருந்தமை, சட்டவிரோதமான செயலாகும் எனவும்

> “புதியதோர்
> உலகம் செய்வோம்
> கெட்ட போரிடும்
> உலகை வேரொடு
> சாய்ப்போம்!”
>
> –பாவேந்தர் பாரதிதாசன்–

சில கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மத ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் யாழ்ப்பாண விஜயம், புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே. பிரபாகரனுடனான அவரது சந்திப்பு ஆகியனவற்றை யடுத்து புதிய சமரச முயற்சிகளை அரசு உருவாக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சமரச முயற்சிகளுக்குப் பதிலாக போர் நடவடிக்கைகளே கடந்த ஆண்டில் துரிதமடைந்திருந்தன.

புலிகளும், அரசதரப்பினரும் யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து பாரிய உயிரிழப்புகளுக்கு வழிவகுத்திருந்தனர்.

இதுதவிர யாழ்குடாநாட்டில் விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் என்பவற்றால் பாரியளவில் உயிர், உடமை இழப்புக்கள் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தன.

இவ்வாறு குடாநாட்டில் அமைதி, சமாதானம் ஆகியவற்றுக்கான அறிகுறிகள் எதுவும் தென்படாதிருக்கும் இத்தருணத்திலேயே, கடந்த வாரங்களில் கொழும்பு கத்தோலிக்கமத பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, கிழக்கு மாகாண அதி பேராயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் வடபகுதிக்கு விஜயம் செய்திருந்தனர்.

யாழ்குடாநாட்டில் விமானக் குண்டு வீச்சுக்களால் பொதுமக்களின் குடிமனைகள், வியாபார நிலையங்கள், பாடசாலைக் கட்டிடங்கள் வைத்தியசாலைக் கட்டிடங்கள் மட்டுமல்ல கோயில்கள், தேவாலயங்கள் என்பனவும் பெரிதும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்கமத பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் உட்பட அங்குள்ள மதத்தலைவர்கள் பலரும் கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுக்களை கடந்த ஆண்டில் வெகுவாகக் கண்டித்திருந்தனர்.

இந்நிலையில் கொழும்பு பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவின் யாழ்குடாநாட்டு விஜயம் குறிப்பிடத் தக்கதாகவே இருக்கின்றது.

யுத்தக் கெடுபிடிகளினால் யாழ்குடாநாட்டில் நிலவும் அவலநிலையை தென்னிலங்கையின் முக்கிய மதப்பிரமுகரான பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ நேரில் காணும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தார்.

அத்துடன் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தலைமையிலான ஓர் உயர் மட்டக்குழுவையும் பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ சந்தித்திருந்தார்.

யாழ்குடாநாட்டில் விரிவான பயணத்தை மேற்கொண்டு, அங்கு அமைதிக்காகப் பிரார்த்தனைகளையும் நடத்தியபின்னர் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கொழும்பு திரும்பி தமது யாழ் விஜயம் குறித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் அவர் வடக்கு-கிழக்குப் பகுதியில் ஒரு போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

பேராயரின் யாழ் விஜயம் குறித்த அறிக்கை, யாழ்குடாநாட்டில் அனைத்துத்தரப்பினரும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதையே விரிவாக எடுத்து விளக்கியிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வுக்கான அரசியல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்து போயுள்ளன. இந்நிலையில் யுத்தம் தொடருவது அநாவசிய இழப்பையே ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

புலிகளுக்கெதிரான யுத்தமொன்றை ஆரம்பிக்கும்போது கூடுதலானளவு உயிரிழப்புக்கள், படையினர் தரப்பில் ஏற்படுகின்றன. மறுபுறம் புலிகள் தரப்பிலும் இழப்புக்கள் பாரதூரமானவையாக இருக்கின்றன.

இத்தகைய இழப்புக்கள் இரு தரப்பினாலும் ஒரு வெற்றியை ஈட்ட முடியாது என்பதனையே புலப்படுத்துகின்றன. இந்நிலையில் இழப்புக்கள் தொடருவதைத் தவிர்ப்பதற்கு போர் நிறுத்தமே இன்றியமையாததாகின்றது.

இலங்கையின் 46வது சுதந்திர தினம் கடந்தவாரம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

கத்தியின்றி இரத்தமின்றி சுமுகமான முறையிலேயே இலங்கை பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றிருந்தது.

இலங்கையின் சுதந்திரத்துக்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கூட்டாக ஒத்துழைத்திருந்தனர்.

அப்போது அவர்களிடையே இன, மத பூசல்கள் காணப்பட்டிருக்கவில்லை. பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரமடைய வேண்டுமென்பதிலேயே அவர்கள் குறியாக இருந்தனர்.

அயல்நாடான இந்தியா சுதந்திரத்தைப் பெறுவதற்கு பெரும்பாடுபட்டிருந்தது.

காந்தியடிகளும், அவரது தலைமையை ஏற்றவர்களும் சாத்வீக வழிகளில் இந்திய சுதந்திரப் போராட்டங்களை நடத்திவந்தனர். ஆனால் அவர்களது தூய்மையான முயற்சிகளுக்குக் களங்கம் விளைவிப்பதுபோல இந்தியாவினுள் சுதந்திரப் போராட்டம் இடம்பெற்ற காலங்களிலேயே இந்து-முஸ்லிம் கலகங்களும் மோசமான முறையில் வெடித்திருந்தன.

இதுதவிர இந்திய சுதந்திரப் போராட்டத்தை நடத்தியோர் மீது பிரிட்டிஷாரின் கெடுபிடிகள் கண்மூடித்தனமானவையாகவே இருந்தன.

பஞ்சாப்பில் ஜாலியன் வாலாபாக்கில் சுதந்திரப் போராட்ட காலத்தில் கூடியிருந்த மக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் உட்பட இந்தியாவில் பரவலாக பிரிட்டிஷார் மேற்கொண்ட அடக்குமுறைகள் கடும் போக்கைக் கொண்டனவாகக் காணப்பட்டன.

இந்தியாவில் போன்று சுதந்திரத்துக்கான போராட்டம் இலங்கையில் பாரதூரமான இழப்புக்களைக் கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் 1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்த நிலையில் 1948ம் ஆண்டு இலங்கையும் ஒரு சுதந்திர நாடானது.

இலங்கை சுதந்திரமடைந்து தற்போது 46 ஆண்டுகள் கழிந்துள்ளன. ஆனால் இலங்கை அடைந்துள்ள சுதந்திரம் எவ்வளவுதூரம் அர்த்த புஷ்டியானது? என்பதே இன்று கேள்விக்குறியாக இருக்கின்றது.

சுதந்திரத்தைப் பெறுவதிலும், வெள்ளையரை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றுவதிலும் சிங்கள, தமிழ் இனங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால் இலங்கை இன்று ஒரு பூரண குடியரசாக விளங்குகின்ற போதிலும், நாட்டைக் கூறு போடுமளவுக்கு இனப்பிரச்னை வலுவடைந்திருக்கக் காணப்படுகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் ஆட்சியாளர்கள் இனப்பிரச்னையை மையமாக வைத்து அரசியல் இலாபம் தேடி வந்தனர்.

சிங்கள மொழி, பௌத்தமதம் போன்றவற்றை தமது சொந்த அரசியல் இலாபங்களுக்காகவும், சுயநலன்களுக்காகவும் பேரினவாத சக்திகள் பயன்படுத்தலாயின.

இதன் விளைவாகவே இன்று இலங்கையின் இனப்பிரச்னை ஓர் இரத்த வெறிபிடித்த இனக்குரோதமாக மாற்றமடைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ் அரசியல்வாதிகள் சாத்வீகமான முறையில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முன்வந்திருந்தனர். அஹிம்சை வழியில் தமது எதிர்ப்புக்களையும் முன்வைத்திருந்தனர்.

ஆனால் தமிழ்த் தலைவர்களின் நியாயமான கோரிக்கைகள் சிங்கள பேரினவாதத் தலைமையினால் காலத்துக்குக் காலம் தட்டிக் கழிக்கப்பட்டு வந்தன.

அவ்வப்போது இனக்கலவரம் போன்ற நடவடிக்கைகள் மூலம் தமிழர்கள் திட்டமிடப்பட்ட முறையில் பயமுறுத்தப்பட்டும் வந்தனர்.

ஆனால் தற்போது நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கின்றது. பத்து வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட இனப்பிரச்னைக்கும் இன்றைய இனப் பிரச்னைக்குமிடையே பெரும் வேறுபாடு காணப்படுகின்றது.

1956ம் ஆண்டு கொழும்பு காலிமுகத்திடலில் தமிழ் சந்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டிருந்தனர். தொடர்ந்து 1958ம் ஆண்டிலும் பின்னர் 1977ம் அண்டு, 1983ம் ஆண்டுகளில் இனக் கலவரங்கள் தென்னிலங்கையில் வெடித்திருந்தன.

இக்கலவரங்களின் போதெல்லாம் தமிழர்கள் உயிர், உடமைகளை இழந்த நிலையில் அகதிகளாகவும், அனாதைகளாகவும் மாறியிருந்தனர்.

இதனையடுத்து வடக்கே தீவிரவாதப் போராட்டம் ஆரம்பித்த நிலையில் அப்போராட்டம் ஒரு பரிபூரண ஆயுதப் போராட்டமாக மாறியிருந்தது.

இந்த அயுதப் போராட்டம் கடந்த பத்து வருடகாலத்தில் ஒரு பிரிவினைப் போராட்டமாகவே மாற்றமடைந்து



கொழும்பு பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ

பல்லாயிரக்கணக்கானவர்களைப் பலியெடுத்தநிலையில் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில்இன்று ஆயுதப் போராட்டத்தை நடத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் தன்னாதிக்கம், பாதுகாப்பு, சுயாட்சியை, நிர்ணயிப்பதற்கான ஒரு சுதந்திரப் போராட்டமாகவே தமது போராட்டத்தை அறிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தப் போராட்டத்தின் விளைவுகளினால் இன்று பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் தமக்கு ஒரு கௌரவமான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதையே பெரிதும் விரும்புகின்றனர்.

எனவே தமது உயிர், உரிமை, உடமை, பிரதேச தனித்துவம் ஆகியன தொடர்பான கெடுபிடிகள் நீங்கி தாம் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் வாழும் நாள் எப்போது தோன்றும் என்பதே வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்

லேடீஸ் ஸ்பெசல்




பரிசுத் திட்டப் போட்டியில் பங்குகொண்ட ஆயிரக்கணக்கானோரில் அதிஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது

பி.கே.சாமி

பட்டுச்சேலைப் பரிசுத்திட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆர்வமுடன் பங்கெடுத்துக் கொண்டனர்.

அநேகமாக அனைவருமே முரசுகளை பத்திரமாகச் சேகரித்து வைத்து சரியான பதில்களை தந்திருந்தனர்.

அவர்களில் அதிஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பட்டுச்சேலைப் பரிசுபெறும் அதிஷ்டசாலியை அருள் ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு.ஆர்.எம்.கணேசன் தேர்ந்தெடுத்து, தானே முன்வந்து பட்டுச்சேலையையும் வழங்கியுள்ளார்.

பட்டுச்சேலை பெற்றுள்ள அதிஷ்டசாலியின் பெயர் அறிய ஆவலாய் இருப்பீர்கள். இதோ அந்த அதிஷ்டசாலி:

செல்வி. க. உதயலெட்சுமி
436/1, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

இல்ல உபயோகப் பொருட்களை பெறும் அதிஷ்டசாலிகளை பிரபல மலையாள மாந்திரிகர் திரு.பி.கே.சாமி தேர்ந்தெடுத்தார். அவரும் தானே முன்வந்து பரிசுப் பொருட்களை வழங்கியுள்ளார்.

**அந்த ஆறு அதிஷ்டசாலிகளின் பெயர்கள்:**

1. செல்வி. மஞ்சுளா கருப்பையா
122, அம்பகமுவ வீதி
நாவலப்பிட்டிய.

2. செல்வி. வைத்திலிங்கம் சிவஜோதி
பேச்சியம்மன் கோவில் வீதி
ஆரையம்பதி-2.

3. செல்வி. என். அருந்ததி
277 1/1, 2வது டிவிசன்
மருதானை, கொழும்பு-10.

4. திருமதி.எ.பாலசிங்கம்
மே/பா-பேராநந்தம்
கௌரி அஸ்ரோலொஜிக்கல் ஸ்ரேசன்
பெரியகல்லாறு-1.

5. எம்.எஸ். தாகிரா
73-5வது குறுக்குத்தெரு
புத்தளம்.

6. புஸ்பயோகம் சூசைராயப்பன்
120/12, விவேகானந்தா மேடு
கொழும்பு-13.

பரிசுபெற்ற அதிஷ்டசாலிகளுக்கு வாழ்த்துக்கள்.

அதிஷ்டசாலிகள் விரும்பினால் தங்களது பாஸ்போட் புகைப்பட அளவான புகைப்படம் அனுப்பி வைக்கலாம். பிரசுரமாகும்.

அதிஷ்டசாலிகளை தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கியுள்ள அருள் ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு.ஆர்.எம். கணேசன், பிரபல மலையாள மாந்திரிகர் திரு.பி.கே.சாமி இருவருக்கும் நன்றிகள்.

பரிசுபெற்ற அதிஷ்டசாலிகளுக்குப் பரிசை பெற்றுக்கொள்வது தொடர்பான விபரங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

பட்டுச்சேலை பரிசுத்திட்டத்தில் அதிஷ்டசாலிகளாக முடியாதோர் வருத்தப்படவேண்டாம். அடுத்துவரும் தங்கநகைப் பரிசுத்திட்டம் உங்களுக்கு அதிஷ்டம் தரலாம் அல்லவா? தயாராகுங்கள், போட்டியில் குதிக்க.

# மணமகளே மணமகளே வா..வா

## திருமணத்திற்கு முன்னர் திருத்தமான அலங்காரங்கள்!

திருமணம் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பொன்னாள். நிறைய எதிர்பார்ப்புக்களுடன் வாழ்க்கையில் முதலடி எடுத்து வைக்கும் நாள். அந்நாளைச் சிறப்பாகவும், கணவர் என்றென்றும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கும்படியாகவும் செய்ய வேண்டும் என எண்ணுவது பெண்கள் இயல்பு.

அதற்கான ஆயத்தங்களை மணநாள் அன்று செய்துகொள்ள இயலாது. சடங்குகளும், சம்பிரதாயங்களும் மனதிற்குக் கிளுகிளுப்பூட்டும் வகையில் நடக்கத்தான் நேரம் சரியாக இருக்கும். மாலை வரவேற்புக்கு வேண்டுமானால் அழகு நிலையத்திற்குச் சென்று, மணப்பெண் அலங்காரம் செய்து வரலாம்.



இதற்கு முன்பிருந்தே ஒரு பெண் கவனிக்க வேண்டிய விசயங்கள் என்னென்ன என்பதை இங்கு பார்ப்போம்.

ஒரு மாதத்திற்கு முன்பே சோப் உபயோகிப்பதை நிறுத்திவிட்டு கீழ்க்கண்ட 'பக்' (Pack) உபயோகியுங்கள்.

கடலை மாவு-3 ஸ்பூன்
கஸ்தூரி மஞ்சள்- 1/4 ஸ்பூன்
எலுமிச்சைச் சாறு- 1 ஸ்பூன்
பால்- தேவையான அளவு
(உலர்ந்த சருமம் உடையவர்கள் பாலாடையைச் சேர்த்துக்கொள்ளலாம்)

குளிப்பதற்கு முன் இக்கலவையை முகத்தில் தடவி 15 நிமிட நேரம் கழித்து அலசிவிடவும். உடலுக்கு மென்மையான சோப் உபயோகிக்கலாம். ஒருமாதம் தொடர்ந்து இதைச் செய்துவந்தால் உங்கள் முகம் பொன்னென மின்னும். 'மஞ்சள் முகமே வருக' என உங்கள் கணவர் முதலிரவன்றே பாட ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஷம்புவும், ஹைட்ரஜன் பொரக்ஸைட்டும் கலந்த நீரில் கால்களையும் கைகளையும் ஊறவைத்து 15 நாட்களுக்கொருமுறை பெடிக்யூர் (கால் நகங்களைச் சுத்தம் செய்து அளவாய் வெட்டி, மஸாஜ் செய்து, பொலிஷ் பண்ணுவது), மனிக்யூர் (கைகளுக்கு மேற்கூறியவகையில் மஸாஜ் செய்து நகங்களைத் திருத்தி பொலிஷ் பண்ணுவது) செய்துகொள்ளலாம்.

வாரம் ஒருமுறை சூடான தேங்காய் எண்ணெய் தலையில் தடவி மயிர்க்கால்களில் அழுந்த (வட்டமான முறையில்) தேய்த்து, சீயாக்காயில் தயிர் கலந்து கசக்கி விடவும். அப்போது கடலைமாவு, பயத்தம் மாவு, மஞ்சள், நல்லெண்ணெய் கலந்த கலவையை உடலெங்கும் தடவி 20 நிமிட நேரம் கழித்துக்குளிக்கவும். பொடுகு இருப்பவர்கள் தேங்காய் எண்ணெய்க்குப் பதில் நல்லெண்ணெய் உபயோகிக்கலாம். மஸாஜ் செய்தபின் வெந்நீரில் முக்கி எடுத்த பூத்துவாயைத் தலையில் சுற்றிக் கொள்ளுங்கள். இதனால் ஏற்படும் ஆவியால் தலையில் உள்ள அழுக்கு கரைந்து, சரும துவாரங்கள் விரிவடைந்து, ஊட்டச்சத்து வேர்க் கால்களை அடையும். இப்படி நான்கைந்து முறை செய்யவும்.

நான்கைந்து நாட்கள் இருக்கையில் ஒரு சின்ன 'ஸ்ரொமக் வோஷ்' (Stomach Wash) எடுத்துக் கொள்ளுங்கள். திருமணத்திற்குப் பின் கிடைக்கும் விருந்துகளைத் தாக்குப்பிடிக்க இது உதவும்.

முகத்திற்கான 'ப்ளீச்சிங் ஃபேசியல்' (முகம் புத்துணர்ச்சியாக இருக்க செய்யப்படும் ஒரு முறை) ஆகியவற்றை நான்கு நாட்களுக்கு முன்பே முடித்துக்கொள்ளுங்கள். புருவத்தை தேவையான வடிவில் தீட்டிக்கொள்ளுங்கள். பின் தேவையற்ற முடிகளை அக்குள், கை, கால்கள் ஆகிய பகுதிகளில் அகற்றி விடவும்.

முக்கியமாய் மணப்பெண்கள் பற்களின் சுத்தத்தில் கவனம் செலுத்த வேண்டும். பற்களில் கறை, வாய் துர்நாற்றம் இருந்தாலோ பல் வைத்தியரைப் பார்த்து ஆவன செய்துகொள்ள வேண்டும்.

திருமணம் நெருங்கும் முன்பிருந்தே நிறைய நீர், பழச்சாறு, பச்சைக்காய்கறிகள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதால் முகம் தனிப்பொலிவு பெறும்.

மாலை ரிஸப்சனில் பெரிய கொண்டைகள் போடுவது தற்போது ஃபஷன் இல்லை. முத்துக்களினால் ஆன சடையும், 'ஸ்விட்ச்' எனப்படுகின்ற ரெடிமேட் கொண்டையும் இறக்கமாகப் பொருத்தப்படுகிறது.

மணப்பெண்ணிற்கு அணிவிக்கப்படும் புடவை, அணியும் நகைகள் ஆகியவை வண்ணத்தில் ஒத்துப்போவது நல்லது.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

## வாழைப்பழ புட்டிங்

**தேவையானவை:**

வெண்ணெய்- 45கிராம்
சீனி- (தூளாக்கியது) 450 கிராம்
கோதுமை மாவு- 180 கிராம்
வாழைப்பழம்- 3
பால்- (கெட்டியானது) 3/4 கோப்பை
முட்டை- 3

வாழைப்பழ எஸன்ஸ் அல்லது வெனிலா எஸன்ஸ்-1/2 தேக்கரண்டி.

**செய்யும் முறை:**

1. வெண்ணெய்யையும் சர்க்கரையையும் நன்றாகக் குழைத்துக் கொள்ளவும்.
2. கோதுமை மாவை அரித்தெடுக்கவும்.
3. முட்டையின் மஞ்சட் கருவை தனியாக ஒரு கிண்ணத்தில் எடுத்து நன்றாக அடித்துக் கொள்ளவும். எஸன்ஸ் சேர்க்கவும்.
4. அடித்த முட்டையை வெண்ணெய் கலவையுடன் சிறிது-சிறிதாகச் சேர்த்து நன்றாக அடிக்கவும்.
5. கோதுமை மாவையும், பாலையும் குழைத்த கலவையுடன் மாறி மாறிச் சேர்த்து மெதுவாகக் கலக்கவும்.
6. வில்லையாக நறுக்கிய வாழைப்பழத்தை கலவையுடன் சேர்க்கவும்.
7. கடைசியாக, நன்றாக அடித்த முட்டையின் வெள்ளையைக் குழைத்த கலவையுடன் சேர்த்து மெதுவாகக் கலக்கவும்.
8. கலவையை வெண்ணெய் தடவிய புட்டிங் பாத்திரத்தில் போடவும்.
9. 350 ஃபரன்ஹைட் சூட்டில் 1 மணிநேரம் பேக் செய்யவும்.

இப்போது வாழைப்பழ புட்டிங் வாய்க்கு ருசியாக ரெடி.

# தாய்மாருக்கு முட்டை அவசியம்!

இளந்தாய்மார் ஒரு நாளுக்கு ஒரு முட்டையாவது உண்ண வேண்டும். தனது உடலின் வலுவினைப் பெருக்குவதுடன் தாயின்பாலைப் பருகும் குழந்தைக்கும் பெரும் பலனை முட்டை தருகிறது.

குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு ஏற்ற புரதச் சத்தினை முட்டை தாய்மூலம் தருகிறது. முட்டையில் காணப்படும் விட்டமின் A, ஆரோக்கியமான சருமத்துக்கும் கண்பார்வைக்கும் உதவுகிறது. விட்டமின் B (கூட்டு) உணவின் செமிபாட்டுக்கும் உறுதியான நரம்புகளைப் பெறவும் உதவுகிறது. விட்டமின் D எலும்புகளை உறுதிப்படுத்துகிறது.

முட்டையில் இரும்புச் சத்தும் இருக்கிறது. சுத்தமான-துரிதமான இரத்த ஓட்டத்துக்கும் இரும்புச்சத்து உதவுகிறது. இதில் காணப்படும் பொசுபரசு குழந்தையின் மூளை வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தூண்டுகோலாகிறது.

கருவுற்றிருக்கும் போதே தாய்மார் ஒருநாளுக்கு ஒரு முட்டை உண்பதைப் பழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். பால் சுரப்பதற்கும் முட்டை உதவுகிறது.

**நீங்களும் தைக்கலாம்**
இழையோட்டல் (Darning)
தொடர்ச்சி அடுத்தவாரம் இடம்பெறும்.

# வீட்டுக் குறிப்புகள்


- பனிக்காலம் வந்துவிட்டதல்லவா? உதட்டில் வெடிப்பு ஏற்படும். இதற்கு வெண்ணெய் தடவ, உதடுகளில் பனி வெடிப்பு நீங்கி பளபளப்படையும்.
- தினமும் காலையில் இஞ்சி காபி குடிப்பதால் சளித்தொல்லை நீங்கும். காபி, டீயிலும் இஞ்சி சேர்த்து சாப்பிடலாம்.
- இரவில் செம்பருத்தி இலைகளை தலையில் வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டால் மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சி ஏற்படும்.
- மூக்கடைப்பு உள்ளவர்கள் தினமும் படுக்கும்போது மூக்கின் ஓரங்களில் வேப்பெண்ணெய் தடவிக் கொண்டால் மூக்கடைப்பு நீங்கும்.
- பாகற்காய் வறுவல் சுவையாக இருக்க பாகற்காய்களை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்பு, மிளகாய்ப் பொடி, புளித் தண்ணீருடன் காய்களை சேர்த்து அரைமணி நேரம் ஊறவைக்கவும். பின் வாணலியில் எண்ணெய் உற்றி வறுத்தெடுக்கவும்.
- முகத்தில் முகப்பரு தொல்லையா? தேங்காய்ப்பாலை தொடர்ந்து பதினைந்து நாட்கள் தடவ பரு குணமடையும்.
- கருஞ்சீரகத்தை இரண்டு நிமிடங்கள் தண்ணீரில் ஊறவைத்து, பின் அந்த தண்ணீரில் வாய் கொப்பளிக்க பல்வலி பறந்து போகும்.
- வெந்நீரில் சிலதுளி எலுமிச்சம் சாற்றையும், சிலதுளி டிட்டோலையும் கலந்து கட்டில், நாற்காலிகளுக்கு ஊற்ற, அதிலுள்ள மூட்டைப் பூச்சிகள் ஒழியும்.

மகளிர் மட்டும் பங்குகொள்ளும் மற்றும் ஒரு போட்டி
தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ்
இணைந்து வழங்கும்
தங்க நகைப் பரிசுத் திட்டம்
போட்டி விதிகள் அடுத்த முரசில் இருந்து....

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# த க வ ல் பெ ட் டி

## பந்தாடியது மாடு



தமிழ்நாட்டில் தைப்பொங்கலை அடுத்து மாட்டுப் பொங்கல் நடைபெறுவதுண்டு. அப்போது மஞ்சி விரட்டு என்னும் (மாட்டுக்) காளைகளுடன் (மனிதக்) காளைகளும் மோதும் விளையாட்டு நடைபெறும். இதே போன்று ஸ்பெயின் நாட்டிலும் காளைகளை அடக்கி வெற்றி கொள்ளும் வீரவிளையாட்டுகள் நடைபெறுவதுண்டு. அத்தகைய விளையாட்டில் ஈடுபட்ட சான் மாட்டின் என்ற இளைஞனை முரட்டுக் காளை முட்டிப் பந்தாடியபோது இப்படம் பிடிக்கப்பட்டது. இவர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

## இரட்டையர்கள் படிக்கும் பள்ளி

ஒரு குடும்பத்தில் இரட்டையர்கள் இருந்தாலே பெற்றாருக்கும் சகோதரர்களுக்குமே பெரும் சிக்கல்கள் தோன்றுகின்றன. உடைகள், தலை அலங்காரம், அணிமணிகளை வைத்தே அடையாளம் காணவேண்டி இருக்கும். ஆனால் ஒரே பள்ளிக்கூடத்தில் எட்டு இரட்டை சோடிகள் படிப்பதானால் எத்தனை தொல்லைகள் ஏற்படும்!

ஆசிரியர்கள், உடன் படிக்கும் மாணவர்கள், விளையாட்டுப் பயிற்றுனர்கள் முதற்கொண்டு அப்பாடசாலையிலுள்ள அனைவருக்குமே பெரும் சிக்கல்களை ஏற்படாமலிருக்குமா? ஆனால் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள ரொபேட் லீ பாடசாலை நிர்வாகம் இத்தனை 'தொல்லை'களையும் ஏற்று இவர்களை மகிழ்ச்சியுடன் சமாளிக்கின்றது.



இந்தப் பள்ளியில் மூன்று வயதான இரட்டையர்கள் முதல் 16 வயதுவரையிலான இரட்டையர்கள் வரை சகல வகுப்புக்களிலும் கல்வி கற்கின்றனர். அதனால் இப்பாடசாலைக்கு வியப்பான முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது.

இந்த இரட்டையரால் பல 'தொல்லை'கள் ஏற்பட்டாலும் ஒருவகை நகைச்சுவையூட்டும் தமாசுகளுக்கும் பஞ்சமில்லை.

சில இரட்டையர்கள் ஆணும் பெண்ணுமாக இருப்பதனால் இலகுவில் அடையாளம் காண முடிகிறது. இருவரும் ஒரேபாலாராக இருந்தால்தான் சிக்கல் ஏற்படுகிறது.

13 வயதுக்கு மேற்பட்ட இரட்டையர்கள் பல குறும்புகளைச் செய்வதனால் பல சிரமங்களேற்பட்டாலும் இறுதியில் எல்லாம் மகிழ்ச்சிகரமாகவே முடியும்.

குழப்படிகளும் கும்மாளமும் ஒன்றோடொன்று இணைந்து வருவதனால் எல்லோரும் சிரித்தவண்ணமே காணப்படுவதாக பள்ளி நிர்வாகம் தெரிவிக்கிறது.

## பாரினிலே இவள் கூந்தலைப்போல் பெரிதில்லை கண்டீரோ!



உலகில் மிக நீளமான கூந்தலை உடையவர் டியனோ விற் என்ற அழகி. மசாச்சுசெட்ஸ் மாநிலத்தில் வோர்ச்செஸ்ரர் நகரைச் சேர்ந்த இவர் ஒரு மொடல் அழகியுமாவார். இவருடைய கூந்தலின் நீளம் 13 அடி. அவருடைய உயரத்தை விட இரு மடங்குக்குமேல் நீளமானது. 1981முதல் இவர் முடி வெட்டவில்லை. இவருடைய கூந்தலுக்கு ஷாம்போ தடவிக் கழுவி, வாரி எடுக்க தினசரி பலமணி நேரம் செலவிட வேண்டியிருக்கிறது. 1994 கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இவருடைய பெயரும் இடம்பெறவிருக்கிறது.

நீண்ட கூந்தலை அள்ளிச் சுருட்டி அழகாக முடிந்து விட்டார்.

நீவிர் பார்த்தலிலே இவள் கூந்தலைத்தான் பெரிது என்பீர் மிகப்பெரிது என்பீர்!

## தினமும் காலையில் மலை விழுங்கும் முட்டை!

அது ஒரு பிரபல ஹோட்டல். அங்கு ஒரு அறையில் தங்கியிருந்தவரை "காலை உணவுக்கு என்ன தேவை?" என்று கேட்டனர் உணவுப்பிரிவினர்.

அவர் சொன்னார்.

"24 முட்டைகள் அனுப்புங்கள்."

உணவுப் பிரிவினருக்கு அதிர்ச்சி.



ஒரு ஆள்தானே தங்கியிருப்பதாகச் சொன்னார்கள். நிர்வாகத்திற்குத் தெரியாமல் புதிய ஆட்கள் வந்து அவருடன் தங்கியிருக்கிறார்களோ?

சந்தேகத்தோடு 24 முட்டைகளையும் கொண்டுசென்ற சர்வருக்கு அதிர்ச்சி.

ஒருவர்மட்டும்தான் அறையில் தங்கியிருந்தார். உணவு பரிமாறுபவர் முட்டைகளை வைத்ததும் அவர் நன்றி சொல்லிவிட்டு, பரிமாறுபவர் முன்பாகவே அத்தனை முட்டைகளையும் உள்ளே தள்ளித்தீர்த்துவிட்டார்.

பின்னர்தான் தெரிந்தது. அவர் ஜப்பானைச் சேர்ந்த 'சுமோ மல்யுத்த" வீரர் என்பது.

ஜுனிச்சி மாரி என்ற அந்த இளம் சுமோ வீரருக்கு 23 வயதாகிறது. 420 இறாத்தல் எடைகொண்ட மாமிச மலையாகக் காணப்படுகிறார். இங்கிலாந்திலுள்ள எசெக்ஸ் நகரில் மோட் ஹார்லோ ஹவுசில் அவர் தங்கியிருந்தார்.

காலை உணவுக்கு 24 முட்டைகளை கபளீகரம் செய்தவர், பகல் உணவுக்கு எவ்வகை உணவினை உண்பார் என்று விபரிக்க வேண்டியதில்லை.

சுமோ வீரர்கள் கொழுப்பு நிறைந்த உணவுகளை சிறுவயதிலிருந்தே உண்டு கொழுப்பார்கள். அதற்கேற்ற தேகப்பயிற்சிகளையும் மேற்கொள்வார்கள்.

ஜப்பானிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த ஜப்பானிய வீர விளையாட்டு வல்லுனர் குழுவில் ஜுனிச்சி மாரியும் ஒருவர்.

அவர் உணவு உட்கொள்ளத் தொடங்கும்போது ஒரு பட்டாளமே பக்கத்தில் நிற்கும். ஏன் தெரியுமோ? அவர் உணவு விழுங்கும் அழகை இரசிக்கத்தான்.

## குழந்தை ஒன்று! முகம் இரண்டு!!

டேவிட் கொக்லர் சுகதேகியான குழந்தையாகவே பிறந்தது. ஆனால் முகம்தான் சற்று விசித்திரமான உருவ அமைப்பைக் கொண்டிருந்தது.

குழந்தை பிழைக்காதெனவே கருதப்பட்டபோதும் உள்ளுறுப்புகளில் எதுவித மாறுபாடுகளோ குறைபாடுகளோ நோய்க்குணமோ தென்படாமையினால் மருத்துவ நிபுணர்கள் அந்தக் குழந்தையைச் 'செப்பனிடு'வதில் தங்கள் முழுக் கவனத்தையும் செலவிட்டு வெற்றியும் கண்டனர்.



இக்குழந்தைக்கு இரு கண்களும் இரு காதுகளும் இருந்தன. எனினும் மூக்குகள் மூன்று காணப்பட்டன. அத்துடன் வாயும் விசித்திரமான தோற்றத்தினைக் கொன்டிருந்தது. 'சயமிய இரட்டையர்' போன்று கருவுற்ற இக்குழந்தை எப்படியோ இந்த உருவினை எடுத்தது.

ஆஸ்திரிய நாட்டின் வியன்னா மருத்துவ நிபுணர்கள் நவீன பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையினை 11 மாதக் குழந்தையான டேவிடுக்கு அளித்து அதனை இன்று ஒரு சாதாரணக் குழந்தையாக்கிவிட்டனர். "டேவிடின் முகத்தில் எந்தவிதமான வித்தியாசமுமின்றி மிக அழகாகவே காணப்படுகிறான். அவனுடைய முகத்தில் எந்தவிதமான அடையாளமும் இல்லாமல் உருவாக்கித் தந்த மருத்துவர்களுக்கு எவ்வாறு நன்றிகூறுவதோ தெரியவில்லை" என்று டேவிடின் தந்தை ஆல்ஃபிரெட் கூறுகிறார்.

## தவறான இலக்கம் பிரிந்தவர்களை இணைத்தது!



நாம் தொலைபேசியில் ஒரு இலக்கத்தை நினைத்து சுழற்ற அல்லது தட்ட, தவறான இலக்கத்தில் விழுந்து சுவாரசியமான சம்பவங்கள் நடப்பதுண்டு.

ரென்னெஸ்ஸி மாநிலத்திலுள்ள ஜோன் கொல்மார்க் என்பவர் பிறிதொரு நகருக்கு தொலைபேசியில் நண்பர் ஒருவரோடு தொடர்பு கொள்ள முயல, தவறான இலக்கம் கிடைத்தது.

ஆனால் என்னே ஆச்சரியம். மறுமுனையில் உள்ளவரோடு பேசியபோது ஜோனுக்கு அதிர்ச்சியோ அதிர்ச்சி.

காரணம் அவரோடு பேசியவர் 49 வருடத்திற்கு முன்னர் அவரைவிட்டுப் பிரிந்த சகோதரர்.

இரட்டையர்களாகப் பிறந்து வறுமை காரணமாக பிரிந்தவர்கள் இருவேறு மாநிலங்களில் வளர்ந்தார்கள். தவறான இலக்கம் மீண்டும் இணைத்து வைத்தது.

பிறகு என்ன? இருவரும் நேரில் சந்தித்து ஒன்றாகவே தொழில் நடத்த ஆரம்பித்துவிட்டனர். பெரிய வர்த்தக நிறுவனம் ஒன்றை இருவரும் ஆரம்பித்துள்ளனர்.

தவறான இலக்கத்தால் சரியான பயன்.

www.padippakam.com

# சினிவிசிட்



ரோஜா
படம்- அதிரடிப்படை

## சினிமா விமர்சனம்

## அமைதிப்படை

வில்லனாக அறிமுகமாகி வித்தியாச வசன உச்சரிப்பிலும், இயல்பான நடிப்பிலும் கைதட்டல் நிறைய வாங்கியவர் சத்யராஜ்.

இரசிகர்களின் வரவேற்பு அவரை கதாநாயக னாக்கியது. சத்யராஜ் பாணியை பின்பற்றி பல வில்லன் நடிகர்கள் முயற்சி செய்தும் பூரண வெற்றியில்லை.

மீண்டும் சத்யராஜ் வில்லனாகியிருக்கிறார். அவரை நூறாவது நாள் படத்தின் மூலம் அட்டகாச வில்லனாக அறிமுகம் செய்த மணிவண்ணன் அமைதிப்படை மூலம் மீண்டும் வில்லனாக்கி வெறுத்து வாங்க வைத்திருக்கிறார்.

அரசியல்வாதிகளை நார் நாராய் கிழிக்கும் நாகராஜன் சோழன் பாத்திரம். பலவிதமான உருவ அமைப்புக்கள். அனைத்தும் கச்சிதமாக பொருந்தி வித்தியாச வில்லனாக சத்யராஜ் மீண்டும் தன்னை நிலைநாட்ட உதவியுள்ளன. கதாநாயகன் சத்யராஜுக்கு பெரிய வேலை இல்லை. சண்டைக்காட்சிகளில் ஆக்ரோசம் காட்டி பாசத்தை பொழிந்து, இறுதியில் தந்தையை கொன்று கதாநாயக கடமையை முடிக்கிறார். இது வில்லன் சத்யராஜ் படம். படம் முழுக்க வில்லனின் ஆக்கிரமிப்பு. சாதி கலவரங்களை தூண்டிவிடுவது, பணியாத பொலிசை கொலை செய்வது, தன் மனைவி பிள்ளையைக்கூட அரசியல் ஆதாயத்திற்காக கொலை நினைப்பது என்று அரசியல்வாதிகளுக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறார்கள்.

சுஜாதா தன் பாத்திரத்தை குறைவில்லாமல் செய்திருக்கிறார். கஸ்தூரியும், ரஞ்சிதாவும் தாமும் இருக்கிறோம் என்று தலையைக் காட்டியிருக்கிறார்கள். அமைதிப்படை முழுக்க முழுக்க சத்யராஜ் படம். ஆனால் சந்தோசமான படம். பொழுதைப் போக்கலாம்.



சரத்குமார்-ராதிகா
படம்-நம்ம அண்ணாச்சி



## ராதிகாவின் துணிச்சல்

'நரசிம்மராவ், கருணாநிதி, ஜெயலலிதா பாரதிராஜா ஆகியோர் குறிப்பிட்ட ஒரு தினத்தில் உங்களை விருந்துக்கு அழைக்கிறார்கள். தாங்கள் எந்த விருந்தில் கலந்து கொள்வீர்கள்?' இப்படியொரு கேள்வியை ராதிகாவிடம் கேட்டார்கள். அவர் சொன்ன பதில், 'பாரதிராஜாவின் விருந்தில் கலந்து கொள்வேன்' வார்த்து விட்டவரை மறந்துவிடாமல் இருக்கும் குணம் மற்றும் வெளிப்படையாகப் பேசும் துணிச்சல். அதுதான் ராதிகா.

## மினிசினி

★ ஸ்ரீதேவியின் மனேஜர் வேணு தயாரித்த 'சின்னவர்' படத்தில் பிரபு நடித்தார். தற்போது காமின் மனேஜர் டி.என்.எஸ். தயாரிக்கும் புதிய படமொன்றில் பிரபு நடிக்கவுள்ளார். இப்படத்தை, 'பொண்டாட்டி சொன்னா கேட்டுக்கணும்,' 'புகுந்த வீடா பொறந்த வீடா' போன்ற படங்களை இயக்கிய வி.சேகர் இயக்குகிறார்.

★ பிரதாப் போத்தன் இயக்கும் 'சிலம்பேரி பாண்டி' படத்தில் நெப்போலியன் கதாநாயகனாகவும், சரண்யா அகானா கதாநாயகிகளாகவும் நடிக்கின்றனர். ஆதித்யன் இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

★ நிழல்கள் ரவி-கஸ்தூரி ஜோடியாக நடிக்கவுள்ள புதிய படமொன்றிற்கான படப்பிடிப்பு அண்மையில் அதன் தொடக்க விழாவுடன் ஆரம்பமாகியது. குடும்பக் கதையம்சமுள்ள இப்படத்திற்கு 'பூவெல்லாம் உனக்காக' என்று பெயரிட்டுள்ளனர்.

★ பிரபல நடிகர் ஜெய்சங்கரின் மகனின் திருமணம் அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அரசியல் பிரமுகர்களும், திரையுலகத்தினரும் திரண்டு வந்து மணமக்களை வாழ்த்தினர்.

★ நீண்ட தலைப்புடைய படத்தில் பெயருடன் கதாநாயகனாக அறிமுகமாகியவர் மன்சூர் அலிகான். தற்போது ஓடிக்கொண்டிருக்கும் 'இராவணன்' படத்தை அடுத்து இவர் நடிக்கும் படம் 'சிந்துபாத்'. இதில் இவருடன் சங்கவி, கஸ்தூரி நடிக்கின்றனர்.

★ விசு கதை, வசனம் எழுதி இயக்கி நடிக்கும் புதிய படம் 'வா மகனே வா'. குஷ்பு கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தில் விரபாண்டியன் என்னும் புதிய கதாநாயகனை விசு அறிமுகப்படுத்த இருக்கிறார்.

★ 'புருஷ லட்சணம்' படத்தில் நடித்த ஜெயராம் கதாநாயகனாக நடிக்கும் 'சீமத்துரை' என்னும் படத்தை மனோபாலா இயக்குகிறார். கதாநாயகியாக ரஞ்சிதா நடிக்கிறார். முக்கிய வேடங்களில் நெப்போலியன், ராதிகா தோன்றுகின்றனர்.

★ ஜீ.வி தயாரிக்கும் 'மே மாதம்' படத்தை மணிரத்தினத்தின் உதவியாளரான பாலு கிருஷ்ண மூர்த்தி இயக்குகிறார். இவர் மணிரத்தினத்தின் நெருங்கிய உறவினராவார்.

★ சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்க விஜயகாந்த் கதாநாயகனாக நடித்து வரும் படம் 'ஆனஸ்ட்ராஜ்'. இப்படத்தில் அவருக்கு ஜோடியாக ஆம்னி நடிக்கிறார். டாக்டர் வேடத்தில் கௌதமி நடிக்கிறார்.

★ தமிழில் வெற்றிபெற்ற 'ஜென்டில்மேன்' படம் தெலுங்கில் மொழிமாற்றம் செய்யப்பட்டு பெருவெற்றி பெற்றது. தற்போது ஜென்டில்மேனை இந்தியில் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்கள். இந்தியில் சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கிறார். அத்துடன் இந்தியில் எடுக்கவுள்ள 'சிக்கு புக்கு ரெயிலே...' பாடல் காட்சியிலும் சிரஞ்சீவியே நடிக்கிறார்.



படம்-இனியவெ

## மன்சூர் அலிகானுக்கு மதிப்பு!

'இராவணன்' படத்தில் மன்சூர் அலிகான் பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் ராமதாஸின் படத்தையும், தி.மு.க (கோ) பிரிவு தலைவர் வை.கோபால்சாமி படத்தையும் அருகருகே வைத்து காண்பித்துள்ளார். இராவணன் பரவாயில்லாமல் ஓடுவதால் மன்சூர் அலிகான் நடித்த பிறமொழிப் படங்கள் மீது தயாரிப்பாளர்களது பார்வை விழுந்திருக்கிறது.

தெலுங்கில் அவர் வில்லனாக நடித்த படம் ஒன்று 'அதிகாரம் என் கையில்' என்ற பெயரில் தமிழுக்கு வந்துள்ளது. கொடூர வில்லனாக மன்சூர் அலிகான் நடிக்க சுரேஷ் கதாநாயகனாக நடித்துள்ளார். மன்சூர் அலிகான் மூடநம்பிக்கைகளை எதிர்ப்பதால் கசந்துபோயுள்ள சிலர் அவருக்கெதிராக வதந்திகளை பரப்புகிறார்கள். அலட்சியம் செய்கிறார் மன்சூர் அலிகான்.

மன்சூர் அலிகான்
படம்- இராவணன்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## பாப்பா முரசு சிறுகதை

# நரியிடமா நடக்கும்?



முதலைகள் பொதுவாகக் கடலில் தான் வாழும். சில சமயம் பெரிய நீர்த்தேக்கங்களிலும், ஆறுகளிலும்கூட அவை காணப்படும். அது போன்ற ஒரு நீர்த்தேக்கம் ஒரு காட்டில் இருந்தது. அது சிறிய கடல்போல் வியாபித்திருந்தது. அத்துடன் அதிலுள்ள தண்ணீர் மிகவும் சுவையாக இருந்தது. அதனால் காட்டிலுள்ள விலங்கினங்களும், சிறிய பிராணிகளும் தண்ணீர் குடிக்க அந்த நீர்த்தேக்கத்திற்கு வரும்.

அந்த நீர்த்தேக்கத்தில் ஒரு முதலை வசித்தது. அது வளர்கிற பருவத்தில் இருந்ததால் எப்பொழுதும், எதையாவது சாப்பிட்டுக்கொண்டே இருக்கும். அதனால் எப்போதும் பசியுடனேயே இருக்கும். ஆகாரம் சாப்பிட்டு விட்டு நீர்குடிக்க நீர்த்தேக்கத்திற்கு வரும் மிருகங்கள் கொழுகொழுவென இருக்கும். அவைகளின் காலைப் பிடித்து இழுத்துத் தண்ணீருக்குள் கொண்டுபோய் முதலை அவற்றைச் சாப்பிட்டு விடும். அப்படியும் அதன் கோரப் பசி அடங்காது. சாப்பிட மீண்டும் ஏதாவது கிடைக்காதா என்று நீர்த்தேக்கத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டேயிருக்கும்.

அந்த நீர்த்தேக்கத்தில் ஒரு நண்டு நீண்டகாலமாக வசித்தது. அதன் ஓடு கனமாகவும், உறுதியாகவும் இருந்தது. நண்டும் செழித்து கொழுத்து நன்கு வளர்ந்திருந்தது. அதைத் தின்றுவிட வேண்டுமென்று முதலை வெகுநாட்களாக ஆசைப்பட்டுக்கொண்டிருந்தது. அப்படி நண்டைத் தான் சாப்பிட்டால் அதன் கனமான ஓடு தன் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டு விட்டால் என்ன செய்வதென்று முதலை நண்டைச் சாப்பிடாமல் இருந்தது. அதனால் நண்டும் முதலையும் நண்பர்களாக இருந்தன.

நண்டைச் சாப்பிட முடியவில்லையே என்ற ஏக்கமுடனிருந்த முதலைக்கு நீர்த்தேக்கத்தில் அடிக்கடி தண்ணீர் குடிக்க வரும் ஒரு நரியின் மீது கண் விழுந்தது. அந்த நரி மொழு மொழுவென உடம்பில் எலும்பு இருப்பதே தெரியாமல் குண்டாக இருந்தது. அதைத் தின்றால் தன் ஆசை தீரும் என்று முதலை நரியைச் சாப்பிட தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

நரியோ தண்ணீரினுள் காலை வைக்காமல் கால்களைத் தரையில் அகலமாக ஊன்றி முன் பக்கமாகக் குனிந்து தண்ணீரில் தன் வாய்பட்டும் படாமலும் சர்வ ஜாக்கிரதையாகத் தண்ணீர்குடித்து விட்டுச் சென்றுகொண்டிருந்தது.

அதனால் முதலை நரியைச் சாப்பிட முடியாமல் தினசரி ஏமாந்துபோய்க் கொண்டிருந்தது. நரியோ நாளுக்கு நாள் குண்டாகிக்கொண்டே இருந்தது.

ஒரு நாள் முதலை நண்டை அழைத்தது.

"நண்டாரே எனக்கு ஒரே பசி!" என்றது முதலை.

"உமக்கு உடம்பு பெரிசு. பசி அகோரமாகத்தான் இருக்கும்!" என்றது நண்டு.

"இன்றைக்கு என்னமோ பசிதாள முடியாமலிருக்கிறது நண்டாரே?"

"என்னை வேண்டுமானால் சாப்பிடுமே!" என்றது நண்டு.

"உம்மைச் சாப்பிடுவதா? அது தப்பு! நீர் என் நண்பனாயிற்றே!"

"பிறகு நான் உம் பசியை எப்படிப் போக்குவது முதலையாரே?"

"அதோ பாரும் நண்டாரே..!" என்று கரையில் நின்றபடி தண்ணீர் குடிப்போமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்த நரியாரைக் காட்டியது முதலை.

"நம்ம நரியார்!" என்றது நண்டு.

"ஆள் எப்படி கொழு கொழுவென்றிருக்கிறார் பார்த்தீரா? இன்றைக்கு என் பசி தீர இந்த நரி போதும்," என்றது முதலை.

"சாப்பிட வேண்டியதுதானே முதலையாரே."

"தந்திரம் செய்து தான் சாப்பிட வேண்டும். நரி புத்திசாலியாயிற்றே," என்ற முதலை நண்டை அருகில் அழைத்து, "நீதான் எனக்கு இப்பொழுது உதவி செய்ய வேண்டும்." என்றுசொல்லி அதன் காதில் நரியை எப்படி ஏமாற்றலாம் என்று வழி சொன்னது.

இவைகள் ஏதோ பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்த நரி "இப்பொழுது முதலையால் நமக்கு எந்த ஆபத்தும் உண்டாகாது." என்று எண்ணி தண்ணீர் குடித்துவிட்டுக் காட்டுக்குள் ஓடிவிட்டது.

மறுநாள் தண்ணீர் குடிக்க வருகின்ற நேரத்திற்குச் சற்று முன்பு நீர்த்தேக்கத்தை விட்டு வெளியில் வந்த முதலை, இன்னமும் நரிவரவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு ஒரு மரத்தடிக்குச் சென்று இறந்து போனது போல படுத்துக் கொண்டது. மூச்சை அடக்கிக்கொண்டது. சுவாசம் விடுவதால் தன் வயிறு ஏறி இறங்காதபடி பார்த்துக்கொண்டது.

நண்டு காட்டிலுள்ள பூக்களை எல்லாம் பறித்துவந்து முதலையின் மீது போட்டுவிட்டு அருகில் உட்கார்ந்து, "முதலையாரே என்னைவிட்டுவிட்டு எப்படிச் செத்துப் போனீர்? நல்ல நண்பரை இழந்து தவிக்கிறேனே," என்று புலம்பி அழுதது.

முதலை, "நண்டாரே நரி வந்து விட்டதா?" என்று மெதுவாகக் கேட்டது.

"நீர் செத்துப்போய்விட்டதாகச் சொல்லி நான் அழுதுகொண்டிருக்கிறேன். நீர் என்னடா என்றால் பேசுகிறீர். காரியத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுவீர் போலிருக்கிறதே! அப்புறம் எப்படி நரியைக் கொன்று சாப்பிட முடியும்? செத்தது போல் கிடவும்," என்றது நண்டு.

முதலை மூச்சைப் பிடித்துக்கொண்டு செத்தது போல் கிடந்தது.

நரி தண்ணீர் குடிக்க நீர்த்தேக்கத்திற்கு வந்தது.

கரையில் முதலை படுத்துக்கிடப்பதையும் அதனருகில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கும் நண்டையும் பார்த்தது. பிறகு நண்டிடம் வந்தது,

"நண்டாரே! நண்டாரே! ஏன் அழுது கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டது நரி.

"என் நண்பன் இறந்துவிட்டார். என்னால் துக்கம் தாளமுடியவில்லை. அதனால்தான் அழுகிறேன்," என்ற நண்டு கேவிக்கேவி அழ ஆரம்பித்தது.

நரி முதலையைச் சுற்றி வலம்வந்தது. அடிக்கண்ணால் பார்த்தது முதலை. "நரிப்பயல் ஏமாந்துவிட்டான். நம் தலைப் பக்கம் வந்ததும் லபக்கென்று பிடித்து முழுங்கிவிட வேண்டும்," என்று தீர்மானித்து மூச்சையடக்கி செத்துவிட்டது போல பாசாங்கு செய்தது.

நரி மீண்டும் ஒருமுறை முதலைக்குச் சற்றுத்தள்ளி நின்று அதைப் பார்த்தது.

"நண்டாரே! முதலை இறந்துவிட்டதாகவா சொல்கிறீர்?" என்று கேட்டது நரி.

"ஆமாம்!" என்று சொல்லி அழுதது நண்டு.

"முதலை எப்போது செத்தது நண்டாரே?"

"மத்தியானம்"

"முதலை செத்துப் போகவில்லை நண்டாரே!" என்றது நரி.

"என்ன சொல்கிறீர் நரியாரே? என் நண்பர் முதலை சாகவில்லையா?" என்று கேட்டது நண்டு. முதலை சாகவில்லை என்பதை நரி எப்படிக்கண்டு பிடித்தது என்பது ஆச்சரியமாயிருந்தது நண்டுக்கு.

"ஆமாம் முதலை செத்துப் போகவில்லை" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிற்று நரி.


"எப்படிச் சொல்கிறீர் நரியாரே," என்று கேட்டது நண்டு.

"முதலை செத்துப் போனால் அதன் வால் அப்படி இப்படி ஆடிக் கொண்டிருக்கும். அதை நானே பலமுறை பார்த்திருக்கிறேன். இது வாலை ஆட்டாமல் இருக்கிறதே!" என்றது நரி.

முதலை நரி சொன்னதைக் கேட்டது. முன்னே பின்னே செத்திருந்தால்தானே நரி சொல்வது மெய்யா பொய்யா என்பது அதற்குத் தெரியும்! செத்து விட்டோம் என்பதைக் காட்ட வாலை அப்படி இப்படி அசைத்தது முதலை.

அதைப் பார்த்த நரி, "நண்டாரே! நீரும் உம் நண்பர் முதலையும் என்னை ஏமாற்றிக் கொல்லப் பார்த்தீர்கள். அது என்னிடம் நடக்காது," என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டது.

## அறிவோம் மனதில் பதிவோம்



புதுமை இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதில் முன்னணியில் இருக்கும் ஜப்பானில் ஒரு நிறுவனம் நவீன எலிப்பொறி ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது. இந்தப் பொறியில் இருந்து எலிகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் எலிக்குரல் கேட்கும். அந்தக் குரலை நம்பி பொறிக்குள் செல்லும் எலிகள் அதனுள் வீசும் நச்சுக்காற்றால் கொல்லப்படும். இறந்த எலியின் சடலம் ஒரு பெட்டிக்குள் வைத்து மூடப்பட்டு எறியத் தயாராய் பொறியில் இருந்து வெளியே வரும்.



அமெரிக்காவில் அலாஸ்காவைச் சேர்ந்த கை ஜேர்மன் என்பவர் 100 அடி உயரமுள்ள மரத்தில் 24.82 நொடிகளில் ஏறி இறங்கினார். 1988ம் ஆண்டு ஜுலை 3ம் திகதி அல்பானி நகரில் நடந்த திருவிழாவில் அவர் இச்சாதனையைப் புரிந்தார்.



கார் சாரதிகளுக்கு லைசன்ஸ் தருவதற்காக நடத்தப்படும் கார் ஓட்டும் சோதனை 1934ம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.



பல பறவைகள் சேர்ந்து ஒரே கூட்டில் முட்டையிடும் பழக்கம் உள்ளது. இந்தப் பழக்கத்தில் முதலிடம் வகிப்பவை வாத்துக்கள். வட அமெரிக்காவில் ஒரு வாத்தின் கூட்டில் 87 முட்டைகள் இருந்தன.

## இங்கே இவை

1. பாடும் மீன்கள்-மட்டக்களப்பு
2. முத்துக்குளிக்கும் இடங்கள்- சிலாபம், மன்னார்
3. பெரிய நீர்த்தேக்கம்- கல்லோயா.
4. கால்நடைப்பண்ணை- போபத்தலாவை.
5. குதிரைகள் அதிகம் காணப்படுவது- மன்னார், நெடுந்தீவு.
6. யானைகள் அதிகம் காணப்படுவது- டிக்வெல, தங்காலை.
7. சோடா தொழிற்சாலை- பரந்தன்
8. உருக்கு தொழிற்சாலை- ஒறுவெல.
9. ஓட்டு தொழிற்சாலை- அம்பாறை.
10. சீனி தொழிற்சாலை- கந்தளாய், இங்குலான.
11. பெயின்ற் தொழிற்சாலை- ஜாஎல.
12. பால் தொழிற்சாலை- தம்மண்கடவை.
13. தளபாட தொழிற்சாலை-மொறட்டுவ.
14. சீமெந்துத் தொழிற்சாலை- காங்கேசன்துறை,புத்தளம்.
15. குகை ஓவியம் -தம்புல்ல
16. பெரிய நீர்வீழ்ச்சி- பம்பரகந்த.


மா.வசந்தராணி
பது/சார்ணியா த.ம.வி, பதுளை.

## கணித விந்தை

$0 \times 9 + 8 = 8$
$9 \times 9 + 7 = 88$
$98 \times 9 + 6 = 888$
$987 \times 9 + 5 = 8888$
$9876 \times 9 + 4 = 88888$
$98765 \times 9 + 3 = 888888$
$987654 \times 9 + 2 = 8888888$
$9876543 \times 9 + 1 = 88888888$
$98765432 \times 9 + 0 = 888888888$
$987654321 \times 9 + (-1) = 8888888888$

சண்முகம் புவனேந்திரன்
ஸ்ரீஇராம கிருஸ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா '25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.02.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 28
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

1. முள்ளில்லாத பற்றைக்குள் எலும்பில்லாத மாடுகள்.அது என்ன?
2. பிடியில்லாக் குடையைச் சுருக்க முடியாது. அது என்ன?
3. முதுகிலே மூட்டை தூக்கி,மூன்று மணிக்கு ஒரு முழம் போவாள் அவள் யார்?
4. தண்ணீரில் ஓடிவரும் தத்துவப்பசு. தரைமீது நடவாது தத்துவப்பசு. அது என்ன?
5. நாலுகாலுண்டு, நன்றாக வீச வாலில்லைப் பூச்சி கலைக்க. அது என்ன?
6. வேட்டையாடுவான். தின்னமாட்டான். அவன் யார்?
7. உன்னில் பூக்கும். உப்பாய்க் கரிக்கும். எண்ணில் அடங்காது. அது என்ன?
8. பந்து நிறைய பவளராணிகள்? அவர்கள் யார்?

1. பேன் 2. வானம்
3. நத்தை 4. கப்பல்
5. நாற்காலி 6. துப்பாக்கி
7. வியர்வை 8. மாதுளம்பழம்

செல்வி. மா.வசந்தராணி, பதுளை.

1. உண்மை சொல்வேன். பொய்யும் சொல்வேன். புகழும் உரைப்பேன். வரலாறையே வடிவாய்ச் சொல்வேன். அதுவெல்லாம் உங்கள் கைவண்ணம். நான் யார்?
2. ஒருவருட வாழ்க்கை. உள்ளதோ பன்னிரண்டு உடை. ஆனால் மறுவருடம் என்னைத் தீண்டார். நான் யார்?
3. கையுண்டு, கழுத்துண்டு, வயிறு உண்டு, தலையில்லை, கால் இல்லை. நான் யார்?
4. பின்னவர் தள்ள, முன்னவர் வழிகாட்ட, குந்தி இருப்பவர் நினைத்த இடம் செல்வார். நான் யார்?
5. பறந்து வருவேன். பறவை அல்ல. காதினில் பாடுவேன் பாடகன் அல்ல. ஊசியும் போடுவேன், வைத்தியன் அல்ல. நான் யார்?
6. உன் உருவம் காட்டுவேன். ஆனால் இடம் வலதாய் இருக்கும். நான் யார்?
7. வலை பின்னுவான். வீசத்தெரியாது. அவன் யார்?
8. காசுகொடுத்து வேண்டி வந்தேன். காலைக்கடிக்கும் என அறியேன். அது என்ன?
9. தீன் எடுக்கும் குருவி தின்னாதாம். அது என்ன?

1. பேனா 2. கலண்டர்
3. சேட் 4. துவிச்சக்கரவண்டி
5. நுளம்பு 6. கண்ணாடி
7. சிலந்தி 8. செருப்பு
9. அகப்பை

மு.மதிவதனி
மட்டக்களப்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 25

பரிசுக்குரியவர்:
செல்வி. எம்.ஐ. முனீரா
புஹாரி வித்தியாலயம்,
முள்ளிபொத்தானை.

பாராட்டுக்குரியவர்கள்:
ந.துஷ்யந்தினி-கல்முனை.

பி.எம்.எம். மாஜீத்
மத்திய மகாவித்தியாலயம்-மூதூர்.

சம்ஸுன் ஸப்ரா-தெஹிவளை.

ஐ.எஸ்.நஜிபா
அன்நகர் மகளிர் ம.வி-மூதூர்.

செல்வி. பத்மபிரியா வடிவழகு
சி.சி.தமிழ் வித்தியாலயம்-புவக்பிட்டிய.

எஸ். ஜினத்துல் முனவ்வறா
மனாருல் உலூம்.ம.வி-அனுராதபுரம்.

பாக்கியராசா.விகர்ணன்-
கோட்டைக்கல்லாறு-02.

ம.பாரதி
கடையாமோட்டை அ.மு.ம. வித்தியாலயம்
மதுரங்குளி.

செல்வி.எஸ். சௌமியா
அசோகா வித்தியாலயம்-கண்டி.

எம்.கே.சர்மிளா கலீல்-வெளம்பொட.

எ.எஸ்.றியாஸ்-கிண்ணியா-03.

எ.ஜி. மனோலிராஜ்-கொழும்பு-14.

செல்வி.ஹஸானா பர்வீன்
அல்-அக்ஸா மு.ம.வி-கற்பிட்டி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## ஸ்போர்ட்ஸ்

# மோனிகாவின் காதல்!

தன் உயிரைக் காப்பாற்றிய இளைஞருடன் மோனிகா செலஸ் இரகசிய காதல் கொண்டிருக்கிறார்.

சினிமா பாணியில் துவங்கியுள்ள இந்தக் காதலைப்பற்றி ஜெர்மனி நாளிதழான பில்ட் ஜுயிட்டிங் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியுள்ளதாவது:

கடந்த வருடம் ஏப்ரல் 30ம் திகதி ஜேர்மனியில் உள்ள ஹம்பர்க் நகரில்



மோனிகா செலஸ் டெனிஸ் போட்டியில் விளையாடிக்கொண்டிருந்தபோது பார்சி என்பவன் அவரைக் கத்தியால் குத்தினான். அப்போது பார்சியை ஒரு இளைஞர் பாய்ந்து பிடித்தார். அவர் தடுக்காமல் இருந்தால் மோனிகாவுக்கு மேலும் சில குத்துக்கள் விழுந்திருக்கும்.

மோனிகாவின் உயிரைக் காப்பாற்றிய அந்த இளைஞரின் பெயர் கார்ஸ்டன் மலீசா. கல்லூரி மாணவரான இவருக்கு 26 வயதாகிறது. ஹம்பர்க் போட்டியின் போது மைதான உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிபுரிந்தார். அப்போது தான் மோனிகா உயிரைக் காப்பாற்றினார்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அமெரிக்காவில் செலஸ் சிகிச்சை பெற்று வருகிறார். இடைப்பட்ட காலத்தில் செலஸ் ஓய் வெடுத்துக்கொண்டிருந்த போது அவருக்கும், மலீசாவுக்கும் இடையே கடிதத் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

ஃபக்ஸ் மூலமாகக் காதல் ரசம் சொட்டும் கடிதங்களை இருவரும் பரிமாறிக்கொண்டுள்ளனர். பின்னர் நியூயோர்க்கில் உள்ள ரென்ட்ஸ் வோய்ஸ் என்னுமிடத்தில் பலமுறை சந்தித்தனர்.

கிறிஸ்துமஸின் போது மலீசா ஒரு மோதிரத்தை மோனிகாவுக்கு அனுப்பி உள்ளார். இது காதல்தானே என்று அந்தப் பத்திரிகை கேள்வியை எழுப்பி உள்ளது.

கடைசியாக இளைஞர் கார்ஸ்டன் மலீசாவைச் சந்தித்துப் பேட்டிகாணவும் அந்த நாளிதழ் தவறவில்லை. பேட்டியில் மலீசா, "இருவரிடையேயும் காதல் உறவு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆனால் மோனி தொலை தூரத்தில் இருக்கிறாரே," என்று வருத்தப்பட்டுக் கூறியுள்ளார்.

# சென்ற ஆண்டில் விலகிச் சென்ற வீரர்கள்

சர்வதேச விளையாட்டரங்கில் பல முன்னணி ஆட்டக்காரர்களின் விலகலை 1993ம் ஆண்டு சந்தித்தது.



கூடைப்பந்து விளையாட்டில் சுப்பர் ஸ்டாராக விளங்கிய அமெரிக்காவின் மைக்கல் ஜோர்டன். பணவிசயமாகச் சில சிக்கல்களில் சிக்கியிருந்தார். அவரது தந்தை சிலரால் கொல்லப்பட்டார். தந்தைமீது அதிகப்படியான பாசம் வைத்திருந்த ஜோர்டனுக்கு தந்தை இறந்ததும் வாழ்க்கையே சூனியமாகிவிட்டது. இந்நிலையில் கடந்த ஆண்டு (1993) தான் விளையாட்டுக்கே முழுக்குப் போட்டு விடுவதாக அறிவித்து விட்டார் ஜோர்டன். இதனால் அமெரிக்கா மட்டுமன்றி சர்வதேச கூடைப்பந்து அரங்கமே அதிர்ச்சியும் வருத்தமும் கொண்டது.

கிரிக்கெட்டை எடுத்துக்கொண்டால் அவ்விளையாட்டில் சர்வதேச அளவில் சுப்பர் ஸ்டார்களாக விளங்கிய விவியன் ரிச்சட்ஸ், டேவிட் கவர், இயன் பொத்தம் மற்றும் இந்திய அதிரடி வீரர் ஸ்ரீகாந்த் ஆகியோரும் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர்.

# பெண்கள் இனி குத்துச்சண்டையும் போடலாம்!

பெண்கள் குத்துச்சண்டைக்கு அனுமதித்து அங்கீகாரம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

இப்போது இக்கோரிக்கைக்கு பச்சை விளக்கு காட்டப்பட்டு விட்டது.

அமெச்சூர்களுக்கான விதிமுறைகளின் கீழ் பெண்கள் குத்துச் சண்டை போட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் குத்துச்சண்டையாளர்கள் ஒலிம்பிக் பாணியிலான போட்டிகளில் மட்டும் பங்கேற்க அனுமதிக்கப்படுகிறது. எனினும் சர்வதேச அமெச்சூர் குத்துச் சண்டை சம்மேளனத்தின் உன்னிப்பான பராமரிப்பின் கீழ்தான் இப்போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

இப்படி பெண்கள் குத்துச் சண்டை போட்டிக்கு அனுமதியளிக்கப்பட்டு இருப்பது, அடுத்த ஒலிம்பிக்கில் இப்போட்டியை சேர்ப்பதற்கான அறிகுறி என்று அர்த்தம் கொண்டுவிடக்கூடாது. ஒலிம்பிக்கில் சேர்த்துக் கொள்வதற்குமுன் இந்த புதிய பிரிவு (பெண்கள் குத்துச்சண்டை) பல ஆண்டுகள் சர்வதேச அளவிலான அபிவிருத்திகளைக் கண்டு தேற வேண்டியிருக்கிறது.

சர்வதேச அமெச்சூர் குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவர் அன்வர் சௌத்ரி இவ்வாறு தெரிவித்தார்.

# தேன் கிண்ணம்



### தேர்தல்

வாக்குறுதிக்கு
வார்த்தைகள்
தேடியலையும்
வேட்பாள கவிஞர்கள்,
மூக்குடைந்த சிலைமீது
காகம் விரட்டப்பட்டு
அவசர அலங்கரிப்பில்
மறைந்துவிட்ட
தலைவர்,
கட்சி கொடிகளின்
கவர்ச்சி நடனத்தை
கண்டுகளிக்கும்
வீதிகள்,
மின்கம்பத்தை
கட்டிப் பிடித்துவிட்டு
கதறும்
ஒலிபெருக்கிகள்,
வீதியோர கால்நடைக்கு
விருந்தாக தயாராகும்
போஸ்ரர்,
யாருக்கு ஒட்டுப்
போட்டோம் என்பதை
தெரிந்து கொள்ள
வானொலிப்பெட்டி
அருகில் நிற்கும்
மக்கள்!!!

தீதக்ஷலா
திருகோணமலை.

### தமிழனாய்

கால்கள்
சுடுகின்றன
நிற்பதற்கு
நிழல்-வேண்டும்.

•••

வன்முறை
வெய்யில்-வாட்டிக்
கொண்டிருக்கிறது
தேகம்-கறுத்து
சிதைந்து
போனேன்
நான்.

•••

நாய்களும்
முகர்ந்து-பார்த்து
அட,
மனித இறைச்சி.

•••

நீண்ட குழலில்
வாசம்-செய்த
நீசனொன்று-என்
நெஞ்சில்
புகுந்தபோது
இறந்து
போனேன்-நான்.

•••

வருவேனென்ற
வெண்புறா-விருந்தாளி
வரவேயில்லை.
நான்
இறந்துபோனேன்.

•••

எனக்கு
எம சபையில்
தீர்ப்பு
"மீண்டும்
தமிழனாய்-பிற
நரகம்
அனுபவி"

ஸ்ரீவரணி
வாழையூர்.

### "யுக புருஷர்கள்"

ஆறாயிரம் மைல்களுக்கப்பால்
அன்பின் ஆளுமையில்
வாசிக்கும் நாத ஒலிகள்
மனதிற்குள் எழும்
மத்தாப்பு ஜாலங்கள்..!

யுத்த காண்டத்திலிருந்து
யுத்தியாய் வந்து
துணிவினைச் சுமந்துகொண்ட
வாழ்வின் வசந்தங்களுக்கு
வாழ்த்துப்பா இசைப்பார்...!

அல்லும் பகலும்
அலுப்பில்லா வேலைகள்
அது
நகரத்தை நவீனமாக்கும்
மாண்டவரை புகலிடமாக்கும்
இவை
மாப்பிள்ளையின் உழைப்புக்கள்..!

வாக்கினில் பழுதில்லை
ஆனால் வரனுக்கு வாலிபம்
வாழ்த்துச் சொல்லும்
அகதி என்பது அழகல்ல
அதனால்
அதனை அதிதியாக்கி
மண(மன)வறை புகும்
யுக புருஷர்கள்...!

மறுதாரம் என்று
மறுநாளில் புரியும்
கற்பனையில் கலக்கும்
கவலைகள் இனி நாளும்
சொல்லொண்ணா சுகங்களாம்...!
இன்று
யுகத்தின் புன்னகையில்
யோகப் பொன்னூஞ்சல்
ஆடல்களே...!

அமிர்த-சந்திரபாலன்
திருகோணமலை.



### இது போதும் எனக்கு...

அனுகுண்டுகள்
எனக்கு-
தலைகுனிகின்றன.

-•-

கழுகு
புறாவிடம்
கதை சொல்லிச்
சிரிக்கிறது.

-•-

ஆயுதங்கள்
எல்லாம்
அனாதையாகி...
இப்போ-
அடுப்புக்கு
விறகாய்..

-•-

இங்கு
அங்குமிங்கும்
நான்-
அலைந்து திரிகிறேன்
என்-
அடையாள அட்டையை
அலட்சியப்படுத்திவிட்டு

-•-

என் தெருக்களில்
மிடுக்கோடு
தேசியக் கொடிகள்
பறக்க-
மூவினமும்-நாங்கள்
கை கோர்த்து....

-•-

சே...
இந்தக் கனவுடனேயே
நான்
இறந்திருக்கக்
கூடாதா?

-•-

அட்டாளைச்சேனை
யூயெல்.மப்றூக்.



### காத்திருக்கும் நான்

நான் காத்திருப்பேன்.
நீ-
பத்திரப்படுத்தித் தந்த
கைக்குட்டையை....
முத்தமிட்டுத் தந்த
வெள்ளை மல்லிகைப் பூவை...
உனக்கே
பரிசாய்த் தருகின்ற
இனிய நாள் வரும் வரை.

•

உன் நினைவுகள்
குருதியாய்ச் சுரக்கின்றன.
சாப்பிடப் போனால்
ஒவ்வொரு சோறிலும்
உன் முகம்;
உறக்கம் இல்லை!
ஒவ்வொரு இரவிலும்
கண்களுக்குள் நீ வந்து
கதைத்துக் கொண்டிருக்கிறாய்!

•

நமது-
லைப்ரரி வாசல் சந்திப்புக்கள்...
டியூசன் விடுகிற
நேரம் பார்த்து
ஒவ்வொரு ஒழுங்கையாய்
உனக்குப் பின்னால்
சுற்றித் திரிந்த
காதல் சந்தோசங்கள்...
ஆஹா-
எவ்வளவு இளமையானவை
அவை.

•

என் விரல்களை இழுத்து
நெட்டி முறிப்பாயே
அந்தச் சத்தத்தின் மீது...
உன் உதடுகளின் மீது
முத்தமிட்டுவிட்டு
ஒரு பக்கக் காதை
முன் பற்களால் கடிக்கும் போது
நீ சிணுங்குவாயே
அந்த ஒலியின் மீது
சத்தியமாகச் சொல்லுகிறேன்,
என் இதயத்தின்
சோலைகள் மீது
குந்திக்கொண்டிருப்பது
நீ ஒருத்தி மட்டும்தான்!

•

அன்பே!
உன் சந்தேகங்கள்தான்
எனக்கு விளங்கவில்லை.
இனியும்-
கண்ணீரில் நனைந்த
கடிதங்களை அனுப்பாதே!
நம்பு...!
வரிகளில் பரிமாறிய
அன்பை
கல்யாணத்தில் தரிசிக்கத்தான்
நான்-
காத்துக்கொண்டிருக்கின்றேன்!

-காத்தான்குடி அனு-

# இந்த வாரம் உங்கள் பலன்

(13.02.94 முதல் 19.02.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், வெள்ளி, சனி |
| இடபம் | - கேது |
| துலாம் | - விழாயன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - செவ்வாய், புதன் |

மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சந்திரன் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் கஷ்டம், கவலை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | தெய்வ நம்பிக்கை, உயர்ந்தநிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ந்த எண்ணம், பணக்கஷ்டம். | காலை 8 மணி |
| வியாழன்- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 11 மணி |
| சனி- | தனலாபம், செய்தொழில் முன்னேற்றம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொல்லை அகலும், மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பணவரவு, இனசனக் கொண்டாட்டம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனச்சஞ்சலம். | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் உதவி, செய்தொழில் நன்மை. | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியிடப்பயணம், முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, துயர் அதிகம். | காலை 9 மணி |
| சனி- | பணக்கஷ்டம், மனச் சஞ்சலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பண இழப்பு, கவலை. | காலை 8 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயணங்கள் தடை, புதிய முயற்சி. | காலை 7 மணி |
| புதன்- | எதிர்பார்த்த வெற்றி, சுகம். | பகல் 11 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, பணவரவுதடை. | காலை 9 மணி |
| வெள்ளி- | உறவினர் எதிர்ப்பு, துயரம். | பி.ப 3 மணி |
| சனி- | பூரண சுகம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, செய்தொழில் விருத்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த வாழ்க்கை, முன்னேற்றம். | காலை 9 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், தேக சுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- | பிரயாணக்கஷ்டம், காரியத்தடை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உறவினர்பகை, மனக்கவலை. | பி.ப 4 மணி |
| சனி- | புதிய முயற்சி, மனத்தைரியம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி நிலை, முன்னேற்றம். | காலை 7 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், காரியசித்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, கவலை நீங்கும். | காலை 10 மணி |
| வெள்ளி- | பணவரவு, கவலை நீங்கும். | காலை 9 மணி |
| சனி- | அந்நியர் எதிர்ப்பு, மனக்குழப்பம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கவலை நீங்கும், பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| திங்கள- | பயணங்களில் வெற்றி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கௌரவம், உயர்ந்தநிலை. | பி.ப 1 மணி |
| புதன்- | அந்நியர் எதிர்ப்பு, மனப்போராட்டம். | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பெரியோர் நட்பு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம். சுக போகம். | காலை 10 மணி |
| சனி- | தனலாபம், காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவநிலை, பெரியோர் நட்பு. | காலை 8 மணி |
| திங்கள்- | வைத்தியச் செலவு, தேகசுகம் பாதிப்பு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | முயற்சி மேன்மை, புகழ். | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் எதிர்ப்பு, கவலை. | பகல் 11 மணி |
| வியாழன்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- | பயணங்களில் இழப்பு, மனக்கவலை. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணநஷ்டம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி நிலை, பிரயாண வெற்றி. | காலை 8 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியிடவாசம், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, காரியக்கேடு. | பகல் 12 மணி |
| வியாழன்- | தொல்லைகள் நீங்கும், கௌரவத்தன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், புதிய முயற்சி. | பி.ப 2 மணி |
| சனி- | உறவினரால் கஷ்டம், மனக்கவலை. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, கௌரவத்தன்மை. | பி.ப 4 மணி |
| திங்கள்- | செய்தொழில் நஷ்டம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், உயர்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, கௌரவம். | காலை 10 மணி |
| வியாழன்- | பணவரவு, காரியசித்தி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, உயர்ச்சி. | காலை 6 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனப்பயம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | வெளியிடப் பிரயாணம், பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | செலவு மகுதி, உறவினர் உதவி. | காலை 9 மணி |
| புதன்- | எடுத்த காரியம் சித்தி, பெரியோர் உதவி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | பயணங்களில் வெற்றி, உயர்ச்சி நிலை. | காலை 10 மணி |
| சனி- | தனலாபம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, மனக்கிலேசம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், கௌரவத்தன்மை. | காலை 8 மணி |
| புதன்- | வெளியிடவாசம், செலவுமிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- | வெளியிடப் பிரயாணம், பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூர இடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் சகவாசம், உயர்ச்சிநிலை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | கடன்பயம், காரியத்தடை. | காலை 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், உயர்ந்தநிலை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | தனலாபம், புதிய முயற்சி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், பணச்செலவு. | காலை 9 மணி |
| சனி- | தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்



## குழந்தை பிறந்ததும் அம்மா கதறினாள்

## பெற்றவர்களைப் பீதியடையவைத்த குழந்தை!

ஒரு குழந்தையைப் பிரசவித்த தாய் அதனை முதன் முதலில் பார்க்கும்போது அக மகிழ்வாள். ஆனால் தாய்லாந்திலுள்ள சியாங் மெய் என்ற ஊரில் பியாவோ ஸச்சாமூ என்ற தாய் தான் பிரசவித்த குழந்தையைப் பார்த்ததும் அலறினாள்.

குழந்தையை முதன் முதலில் பார்த்த அதன் தந்தை ஜெய் புரொட் "உருக்குத் தகடுகளை ஒட்டி இணைத்து உருவாக்கியது போலிருக்கிறதே" என்றார். கடவுள் தங்களைத் தண்டித்துவிட்டார் என்று இருவரும் பிரலாபித்தனர்.

இக்குழந்தையின் சருமத்தில் ஒருவகை நோயின் பாதிப்பு ஏற்பட்டிருந்தமையினால் சருமம் தடித்து பாளம் பாளமாகப் பிழந்து காணப்பட்டது. முகம் விகாரமடைந்து, சேர்க்கஸ் விளையாட்டில் வரும் கோமாளிகளின் செயற்கையாக, சிவப்பு வர்ணம் தீட்டி அகட்டிய வாயைப் போல்- அதன் வாயும் காணப்பட்டது.

பிறந்து சில மணி நேரத்தில் இக்குழந்தை இறந்துவிடும் என்று கருதிய உள்ளூர் மருத்துவர்கள், குழந்தை சில நாட்கள், எந்தவிதமான பிரச்சனையுமில்லாமல் உயிருடன் வாழ்வது கண்டு தலைநகரான பாங்கொக்கிலுள்ள பிரதான மருத்துவமனை நிபுணர்களுடன் தொடர்பு கொண்டனர். தகுந்த ஏற்பாட்டுடன் குழந்தையும் அனுப்பப்பட்டது.

குழந்தையைப் பரிசோதனை செய்த மருத்துவ நிபுணர்கள், இதற்கு 'இட்தியோசிஸ்' நோய் தாக்கியிருப்பதாகக் கண்டு பிடித்தனர். மேல் தோல் கெட்டியாகி சொர சொரப்பாகும் ஒரு வகை நோய் இது என்றும், அதற்கான சிகிச்சை அளித்தால் குணமாகிவிடும் என்றும் நம்பிக்கை தெரிவித்தனர்.

இத்தகைய நோய்க் கிருமிகள் குழந்தை கருவிலிருக்கும்போதே குழந்தையைப் பீடிக்கின்றன. இதனால் பெரும்பாலான குழந்தைகள் இறந்தே பிறக்கின்றன. இல்லாவிட்டால் பிறந்ததும் இறந்துவிடுகின்றன.

இக்குழந்தை பல வாரங்கள் உயிருடன் வாழ்வதாலும் கொடுக்கும் மருந்துகள் உரிய பலனை அளிப்பதனாலும் சிகிச்சை வெற்றி அளிக்கும் என்று நம்பிக்கையுடன் மருத்துவம் தொடர்ந்தது.

"இந்நோய் கண்டு இத்தனை காலம் உயிர்வாழும் குழந்தை எம்மை வியப்புக்குள் ஆழ்த்திவிட்டது. துரிதமாகக் குணமடைந்து வருகிறது. சில மாதங்களில் பரிபூரண குணம் கிடைத்துவிடும்" என்று டாக்டர் சுந்தோண் ஹோப்பாப்பான் கூறினார்.

பிறந்ததும் தீண்டத்தகாத பிராணி என்று ஒதுக்கித்தள்ளிய அக்குழந்தையின் தாயும் தந்தையும் இப்பொழுது அக்குழந்தையினை தூக்கிஅணைத்து மகிழ்கின்றனர். "இது அருமையான குழந்தை- இதனைவிட்டு நான் பிரியமாட்டேன்" என்று தாய் பியாவோ மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

நுவா தொங் என்பது அப்பெண் குழந்தையின் பெயர். இக்குழந்தையை தங்கள் ஊரிலிருந்து பாங்கொக் நகரத்திலுள்ள பிரதான (சிறுவருக்கான) மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதற்கேற்ற வசதி பெற்றாருக்கு இல்லாமையினால் உள்ளூராட்சி அலுவலகமே பொருளாதார உதவியினைச் செய்ய முன்வந்தது.

குழந்தைக்கு இப்பொழுது 5 மாதமாகிறது. "இக்குழந்தைக்கு பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை செய்து இதன் வாயைத் திருத்தி அமைக்க வேண்டும். இதன் சருமத்தை மென்மையடையச் செய்ய, தொடர்ந்து பல ஆண்டுகள் எண்ணையும் களிம்புகளும் தடவி வரவேண்டும். இதனால் இக்குழந்தை ஏனைய சாதாரண குழந்தை களைப் போன்று வளர்ந்து பலகாலம் வாழமுடியும்" என்று டாக்டர் சுந்தோண் குறிப்பிட்டார்.



## உங்கள் குழந்தைக்கு சளித்தொல்லை ஏன்?

பிறந்த மூன்று மாதத்தில் இருந்து மூன்று வயதுவரை நோய் எதிர்ப்பு சக்தி தோன்றும்வரை சளித்தொல்லை பெரும்பாலான குழந்தைகளை பாதிக்கிறது.

சளித்தொல்லை ஒவ்வாமை காரணமாகவும் இருக்கலாம். காசநோய் கிருமிகள் தாக்குதலாலும் இருக்கலாம். இப்படி சளித்தொல்லை உள்ள குழந்தைகளுக்கு மூச்சுக்குழாயில் சளி அல்லது கிருமிகளின் திரவத்தால் அடைபட்டால் மூச்சு வாங்கும். விலா எலும்புகள் தூக்கி தூக்கி மூச்சிறைக்கும். இதை தவிர்க்க குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து தலைக்கு குளிக்க வைத்தல் கூடவே கூடாது. அடிக்கடி தலைக்கு நீர் ஊற்றல்கூடாது. வெதுவெதுப்பான நீரை குளிப்பதற்கு பயன்படுத்த வேண்டும். நன்கு காய்ச்சி ஆறவைத்த சுத்தமான நீரை குடிக்கக் கொடுக்க வேண்டும். குடல் புழுக்கள் இருந்தால் மருந்து கொடுக்க வேண்டும்.

மழை-பனி காலங்களில் குளிர்காற்று படாமல் பராமரிக்க வேண்டும். கம்பளி துணி உடைகளை பயன்படுத்த வேண்டும். தும்மல், மூக்கில் நீர்வடிதல் ஏற்பட்ட உடன் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்வது நல்லது.

## நலம் பெற சுலப வழிகள்!

- இஞ்சித்துண்டை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து, சாப்பிட்டு வந்தால் வாய்க் கசப்பு நீங்கிவிடும்.
- தினமும் தூங்கப் போவதற்கு முன்பு தேயிலைத் தண்ணீர் கொண்டு கண்களை சுற்றி கழுவி வந்தால் சுருக்கம், கறுப்பு வளையம் நீங்கி பளபளப்பு உண்டாகும்.
- இரவில் சிறிது வெந்தயத்தை நீரில் ஊறவைத்து, காலை நீராகாரத்தில் போட்டு குடியுங்கள். எப்படிப்பட்ட சூடும் தணிந்து விடும். உடல் பருக்கும்.
- வெந்தயத்தை கஞ்சிபோல தயாரித்து சாப்பிட்டால் பெண்களுக்கு தாய்ப்பால் அதிகரிக்கும்.
- மணத்தக்காளி வேரை இடித்து தண்ணீரில் போட்டு காய்ச்சி வாய் கொப்பளித்தால் பல்வலி உடனே குணமாகும்.
- சுக்கை சுட்டு கரியாக்கி, தேங்காய் எண்ணை யில் குழப்பி பூசினால் ஆறாத ரணம், மேகப்புண், படர்நோய், படர் தாமரை, வெட்டுக்காயம் ஆகியவை உடனே குணமாகும்.
- நெஞ்சில் கபம் உள்ளவர்கள் வால் மிளகை இடித்துத் தூள் செய்துகொண்டு ஒரு தேக்கரண்டி தேனில் ஒரு சிட்டிகை மிளகுத்தூளை கலந்து தினமும் காலையில் சாப்பிட்டுவர நல்ல குணம் தெரியும்.
- இலையுதிர் காலத்தில் பழுத்து உதிரும் வேப்பம் இலைகளைச் சேகரித்து எடுத்து தூள் செய்து நெருப்பில் போட்டால் புகை நெடிதாளாமல் கொசுக்கள் ஓடிவிடும்.
- வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வறுத்து அதனுடன் பனங்கற்கண்டைச் சேர்த்து காலை, மாலை இரு வேளை களிலும் ஐந்து கிராம் சாப்பிட்டு வந்தால் தேவையற்ற உடல்சதை குறையும்.
- எலுமிச்சம் பழத்தோலைக் காயவைத்து இடித்து உப்பு சேர்த்து வைத்துக் கொள்ள வும். தினசரி அப்பவுடரில் நல்லெண் ணைய் சேர்த்து பல் துலக்கிவர பற்கள் பளபளவென்று ஆவதோடு வாய் துர்நாற்ற மும் நீங்கிவிடும். விக்கல் எடுக்கும்போது சிறிது சர்க்கரையை வாயில்போட்டுக் கொண்டால் விக்கல் அடங்கும்.
- அரைத் தேக்கரண்டி கசகசாவை பால் விட்டு அரைத்து பாலில் கலக்கி குழந்தை களுக்குக் கொடுத்தால் வயிற்றுப் போக்கு, சீதபேதி ஆகியவை நின்றுவிடும்.
- ஒரு கிராம் கொத்தமல்லி விதையை நீரில்போட்டு காய்ச்சி வடிகட்டி பசும் பாலும், சர்க்கரையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பித்தம் குணமாகும்.
- ஒரு டம்ளர் மோரில் ஒரு மிளகு அளவு பெருங்காயத்தை கரைத்துக் குடித்தால் வாய்வு, வயிற்றுவலி போன்றவை குணமாகிவிடும்.

## காட்டுப் பிராணிகளின் காதல் கேளிக்கைகள்!

### பிரிய மறுக்கும் யானைகள்!

### அணைத்துக்கொள்ளும் பறவைகள்!!

### பரிசுகள் பரிமாறப்படுவதும் உண்டு



அன்பைப் பரிமாறும் பென்குயின் ஜோடிகள்



இதயம் கலந்துவிட்ட இரு யானைகள்

மிருகங்களும் பறவைகளும் தங்கள் காதல் உணர்வுகளையும் அன்பையும் மனிதர்களைப் போலவே வெளிப்படுத்துகின்றன. சில பிராணிகள் தங்கள் வாழ்க்கை முழுவதும் ஒரே இணையுடன் மட்டுமே வாழ்கின்றன. இணை பிரிந்தால் அல்லது மரணமடைந்தால் பிரிவுத்துயர் தாங்காது மாண்டுவிடுகின்றன.

தங்கள் அன்பை வெளிப்படுத்த பரிசுகளைத் தருகின்றன; எப்போதும் இணை பிரியாமல் திரிகின்றன; ஆதரவாக அணைத்துக்கொள்ளுகின்றன. ஊடலும் உண்டு.

**பென்குயின்களின் காதல்**

கடும் குளிர்ப்பிரதேசங்களில் வாழும் பென்குயின், பறவை இனத்தைச் சேர்ந்தது. ஆனால் பறப்பதில்லை. ஆண்பறவை தனக்கேற்ற துணையைத் தேர்ந்தெடுக்கும் முறையே அலாதி. முதலில் தனக்கான ஒரு கூட்டினை அமைத்துக்கொள்ளுகிறது. அதனை ஒருவகை புல் மற்றும் குச்சிகளைச் சேர்த்துக்கட்டிக்கொள்ளும். வண்ணம் வண்ணமான சிறு கற்களைப் பொறுக்கி கூட்டினுள் பரப்பும். பூக்களையும் தேடிக்கொண்டு வந்து அலங்கரிக்கும். மேல் புறத்தை அழகிய ஒக்கிட் பூவினைச் செருகிக் கவர்ச்சியாக்கும்.

இவையெல்லாம் பெண் பென்குயினை வசீகரிக்கக் கையாளப்படும் கைங்கரியங்கள். ஏதாவது ஒரு பெண் குருவி அருகே வந்துவிட்டால், தன் கூட்டில் உள்ள அலங்காரங்கள் ஒவ்வொன்றையும் தனது அலகுகளால் தொட்டுக்காட்டி ஒருவகை நடனமாடும். ஆண்குருவியின் அலங்காரங்களில் திருப்தியடைந்த பெண்குருவி ஆண்குருவியின் கூட்டுக்குள் நுழைந்துவிட்டால் இவை இரண்டும் 'கணவன் மனைவி'யாகி விடுகின்றன.

பெண் குருவி கருவுற்றதும் தனக்கென தனியான கூட்டினை அமைத்து அதனுள் முட்டையிட்டு குஞ்சி பொரித்து வளர்த்தெடுக்கும். ஆனால் தன் இணையான ஆண்குருவியினை ஒதுக்கிவிடாது. ஆண்குருவியும் அவ்வாறே தன்னுடன் முதன்முதலில் சேர்ந்த பெண் குருவியை விட்டுவிடாது. இறக்கும்வரை இவை இணைபிரியாமலே இருக்கும்.

**யானைகளின் வாழ்க்கை**

ஆண் யானை தனக்கான பெண்துணையினைத் தேடிக்கொண்டால், அதனை விட்டுப் பிரியமாட்டாது. இரண்டும் ஒன்றாகச் செல்லும்போது உணவுக்காகக் கிடைக்கும் இலைகுழைகளையும் பழங்களையும் பெண் யானைக்கே முதலில் கொடுக்கும். குட்டையில் குளிக்கும்போது பெண்யானைக்கு ஆண்யானை நீரைப் பீய்ச்சிக் குளிப்பாட்டும். உடலையும் தேய்த்துவிடும்.

இரண்டும் தம் உடல்களை ஒன்றுடன் ஒன்று தேய்த்துக்கொள்ளும். துதிக்கைகளை ஒன்றோடொன்று பிணைத்துப் பின்னிக் கொள்வதுடன் வாய்களை இணைத்து முத்தமும் கொடுக்கின்றன.

**அன்னப்பட்சி-வாத்து**

அன்னப்பட்சிகள் இணை சேர்ந்தால் ஆயுழ்காலம்வரை பிரிவதில்லை. சரியான பருவத்தினை அடைவதற்கு முன்னதாக- குஞ்சுப் பருவத்திலேயே இவை இணையினைத் தேடி ஒன்றாகத்திரிந்து, உரிய காலம்வந்ததும் உறவுகளைத் தொடர்கின்றன. குஞ்சுப் பருவத்தில் இவை பொருத்தம் பார்த்து 'ஒப்பந்தம்' செய்து கொண்டுவிடுகின்றன.

வாத்துக்களும் இதே முறையினை அனுசரிக்கின்றன. இவற்றில் ஒன்று இறந்துவிட்டால் அதன் இணை அதிக துயரினை வெளிப்படுத்துகிறது. நோய்வாய்ப்பட்டு விரைவாக தன் வாழ்வினை முடித்துக்கொள்ளுவதுமுண்டு. தான் இறக்கும்வரை இணையினை நினைத்து இரை எடுக்காதிருந்தும் மரணமடைந்துவிடும்.

மிருகங்களில் கரும் சிறுத்தை இனம் தனக்கென ஒரு இணையினைத் தேடிக்கொண்டால் வேறோர் சிறுத்தையை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சில மிருகக் காட்சிச்சாலைகளில் இணை சேர்ந்து திரிந்த சிறுத்தைகளைப் பிரித்து வைத்தபோது, பிரிவுத் துயர் தாங்காது அவை பட்ட துன்பம் பார்ப்போரை நெகிழ வைத்த சம்பவங்களுமுண்டு. இறக்கும் தறுவாய்க்கே சென்றுவிட்ட பின்னர், இவற்றை ஒன்று சேர்த்ததும் அவை இரண்டும் காட்டிய மகிழ்ச்சிப் பெருக்கு சொல்லில் அடங்கா என்று கூறப்படுகிறது.

**பச்சோந்தி**

பச்சோந்தி அடிக்கடி தன் நிறத்தை மாற்றிக்கொள்வதும் தன் இணையினைக் கவர்ந்துகொள்ளத்தானாம். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதிய இளமைத் தொடர்

# கொலை விழும் நேரம்

"முனிவன் மனமும் மயங்கும் பூமி
மோக வாசல்தானே!—மனம்
மூடி மூடிப் பார்க்கும் போதும்
தேடும் பாதை தானே!..."
-கவியரசு கண்ணதாசன்-

மூன்றாம் மாடியில் லிஃப்ட் ஓய்ந்து விரிந்து வழிவிட வெளியே வந்தாள் சித்ரா.

இந்த இடத்திலே சித்ரா பற்றி சொல்லாவிட்டால் உங்களுக்கு பொசுக்கென்று கோபம் வரும்.

பூபால் அன்ட் பிரதர்ஸ் உலகெங்கும் வர்த்தகத் தொடர்புள்ள வியாபார நிறுவனம். சூரியனைவிட சுறுசுறுப்பாக 24 மணி நேரமும் இயங்கி, இந்த மாதம் நிகர லாபம் இரண்டு கோடி என்றால் 'ப்பூ அவளவுதானா' என்று அலட்சியம் செய்து இன்னும் மேலே மேலே என்று சூடாக இயங்கும் நிறுவனம்.

பூபால் அன்ட் பிரதர்ஸ் ஆரம்பிக்கும் போது உயிரோடு இருந்த பூபால் பொட்டென்று போய்ச் சேர்ந்துவிட இப்போது பிரதர்ஸ் மட்டும் உயிரோடு இருந்து சுளையாக உழைக்கிறார்கள். ஒருவர் பிரசாத். 55 வயதிலும் தொந்தி விழாமல் இருக்க தினமும் கடற்கரையில் காலையில் நீண்டநேரம் நடந்துகொண்டிருப்பவர். மற்றவர் ஹரிகரன். 40 வயதில் வியாபார நுணுக்கங்களை மடக்கிச் சுருட்டி விரல் நுனியில் வைத்திருப்பவர்.

அந்த ஹரிகரனை சுருட்டி தன் மனதில் வைத்திருக்கிறாள் சித்ரா.

சித்ரா ஹரிகரனின் அந்தரங்க காரியதரிசி. ரிசப்ஷனிஸ்டாக வேலைக்கு வந்து, சுறுசுறுப்பாலும், பணியில் ஆர்வத்தாலும் அத்தோடு அபார அழகாலும் ஹரிகரனின் ஏக பத்தினி விரத உறுதியை உடைத்து சுக்கு நூறாக்கி அவன் மனதில் அழகிய அம்பாய் புகுந்து அந்தரங்க காரியதரிசியாக உயர்ந்து விட்டவள்.

வீட்டில் வயதான அம்மா மட்டும். அதனால் இந்த இருபது வயதில் கைநிறைய வாங்கும் சம்பளம் அதிகம்.

மெல்லிய நீலமான சல்வார் கமீசில் சித்ரா அழகாக-நடக்கப் பயிற்சி பெற்றது போல் நளினமாய் நடந்து போக, மூன்றாம் மாடி வரவேற்பறையில் காத்திருந்தவர்கள் அத்தனை பேரும் அவளையே விழிகளால் உரித்தார்கள்.

கிரிக்கெட் பற்றி சுவாரசியமாக பேசிக்கொண்டிருந்த இரு இளைஞர்கள் சித்ரா தந்த அழகுச் சுவாரசியத்தில் பேச்சை நிறுத்திவிட்டு அவள் கடந்து போனபின்னர் எதைப்பற்றிப் பேசினோம் என்று மறந்து போனார்கள்.

கண்ணாடி கதவு திறந்து கம்பனியின் உள்ளே போக ரிசப்ஷனிஸ்ட், "குட்மோனிங்" என்று அழகாய் சிரித்தாள். பதிலுக்கு "குட்மோனிங்" சொல்லி, மெத்தென்ற தரை விரிப்பில் நடக்க ரிசப்ஷனிஸ்ட் பொறாமையாய் அவளைப் பார்த்தாள். ஹரிகரனின் அலுவலக அறைக்கதவில் மெல்ல இரு தரம் தட்டி, கதவு தள்ளி "குட் மோனிங் சேர்" என்று அப்போதுதான் மலர்ந்த பூப்போல முகம் மலர்த்தி புன்னகைத்தாள்.

பதிலுக்கு குட்மோனிங் சொல்லாமல், வழக்கம் போல் துள்ளியெழுந்து, "ஹாய் சித்" என்று உற்சாகமாய் கைகுலுக்காமல் ஹரிகரன் வெறித்த பார்வையோடு இருந்தார்.

வாடிப்போன பூப்போல முகத்தில் இருந்து சந்தோசம் உதிர, ஹரிகரனை கூர்ந்து பார்த்தாள்.

ஏதோ வித்தியாசமாய் உணர்ந்தாள். தோள்பையை இறக்கி மேசைமேல் போட்டுவிட்டு ஹரிகரன் அருகே விரைந்துபோய்,

அவர் தோளில் கைவைத்து உலுக்கினாள். ஹரிகரன் வெறித்த விழிகளோடு அப்படியே முகம் கவிழ்ந்து மேசை மீது சரிய,

சித்ரா- அதிர்ந்துபோய், இலங்கையில் இனப்பிரச்சனை இருப்பதுபோல சத்தியமான ஹரிகரன் ஏற்கனவே உண்மையாக செத்துப் போனது புரிந்து, கத்த முயன்று, நா ஒத்துழைக்க மறுக்க, பெரு முயற்சி செய்து போராடி, புறங்கையை வாயால் பொத்தியபடி அலற, ஏசி அறையின் இறுக்கத்தில் வெளியே சுத்தமாக சத்தம் எதுவும் கேட்கவில்லை.

தட்டுத் தடுமாறி, மேசைமீது குந்தியிருந்த சிவப்பு இண்டர்கொமில் மனேஜருக்கான இலக்கம் அழுத்தி, நடுங்கும் கரங்களால் ரிசீவர் காதில் பொருத்தி



காத்திருக்க,

'யெஸ்'

என்று மறுமுனை சொல்ல,

"நான்...நா..ன்..சி..த்...இங்..இங்.."

என்று தடுமாற, மறுமுனையில் மனேஜர் மனோகரின் மூளையில் ஏதோ விபரீதம் என்று அலாரம் அடிக்க,

"நீங்கள் எங்கே நின்று பேசுகிறீர்கள் சித்ரா?"

சித்ரா மீண்டும் குரல் குழறிப் பதில் சொல்லி முடிக்க, ரிசீவரை தொப்பென்று போட்டுவிட்டு, முன்னால் இருந்து வியாபார விஷயமாக பேசிக்கொண்டிருந்த நரைமுடி மனிதர் அதிசயமாகப் பார்த்ததையும் கவனியாமல், பக்கத்து நாட்டை ஆக்கிரமித்த படைபோல, உடல் முழுவதும் பதட்டம் ஆக்கிரமிக்க மனோகரன் எழுந்து ஓடிப் போக, மனோகர் ஓடிப்போவதைப் பார்த்து பார்த்துக்கொண்டிருந்த ஃபைல்களையும், வேலைகளையும் போட்டுவிட்டு ஊழியர்கள் சிலர் அவன் பின்னால் ஓட, மனோகரின் அறையில் இருந்த நரைமுடி மனிதர் அறையை சுற்றி சுவராய் நின்ற கண்ணாடி வழியே அத்தனை பரபரப்பையும் பார்த்து ஒன்றும் புரியாமல் மனேஜரின் நாற்காலிக்கு நேர் மேலே உயரத்தில் இருந்த விலை உயர்ந்த சுவர் கடிகாரத்தில் விழிகள் போட, அது பளிச்சென்று காட்டிய நேரம் காலை 8.35.

■

மதுமிதா கேஸ் விசயத்தில் பெரிதும் பத்திரிகைகளால் பாராட்டப்பட்டு, வரப் போகும் புரமோசனைவிட இனிய நண்பன் குலாம்ஷாவின் சோகத்தை எப்படி கழுவித் துடைப்பது என்பதைப் பற்றியே கவலைப் பட்டுக்கொண்டிருந்த டி.ஐ.ஜி டென்சிலின் அலுவலக மேசையில் இருந்த தொலைபேசி கவலைப்பட்டது போதும் என்னைத் தூக்கிக்கொள் என்று சிணுங்கிக் கொண்டிருக்க, எடுத்து காதோடு அணைத்து,

"ஹலோ டி.ஐ.ஜி. ஹியர்."

"பத்திரிகைகளில் புகைப்படம் பார்த்தேன். நீங்களும் குலாம்ஷாவும் என்ன இரட்டையர்களா சேர்? தினமுரசு தகவல் பெட்டியில் போடலாம் போல அப்படி ஒரு ஒற்றுமை. உருவத்தில் அல்ல. உடன்பாடான செயல்களில். "ஆம் ஐ கரெக்ட்?"

இனிய நாதமாய் ஒரு பெண்குரல்.

"யார் பெண்ணே நீ."

"உங்கள் மீது பிரியமானவள்."

"பெயரே கிடையாதா?"

சிரித்தாள்.

"பிரியா என்றே அழைத்துக் கொள்ளுங்கள். பெயர் பிடித்திருக்கிறதா பிரிய டி.ஐ.ஜி?"

"பெயர் பிடித்திருக்கிறதோ இல்லையோ உனக்கு என்ன பிடித்திருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது."

"என்ன?"

"பைத்தியம். இல்லாவிட்டால் நெருப்போடு விளையாடமாட்டாய்."

மீண்டும் சிரித்தாள்.

"டி.ஐ.ஜி! பிரிய டி.ஐ.ஜி! எனக்கு பிடித்த பொழுது போக்கு என்ன தெரியுமோ? சொன்னால் ஆச்சரியப் படுவீர்கள். ஒரு சென்டிமீற்றர் நீளமான ஆத்திரமும் படுவீர்கள்."

"படலாம் சொல்லு."

"நெருப்போடு நல்ல விருப்போடு விளையாடுவது!"

"நல்லது. அப்படியானால் நேரில் வா."

"வலையா இது? இது துள்ளும் மீன். ஆனால் புத்திசாலி மீன். வலை தெரிந்து கொள்ளும். தப்பும் வித்தை புரிந்து கொள்ளும். இப்போது நான் உங்களுக்கு ஒரு உதவி செய்யப் போகிறேன்."

"அம்மா தாயே உன் உதவியும் வேண்டாம். உபத்திரவமும் வேண்டாம். நீ செய்யக்கூடிய உலகளவான உதவி ஃபோனை வைப்பது."

"அதற்கு முன்னர் ஒரு சிறு தகவல்."

டி.ஐ.ஜி. டென்சில் நெற்றியில் கைவைத்து தொல்லையாய் உணர,

"ஒரே ஒரு கம்பனியில் ஒரே ஒரு கொலை. பூபால் அன்ட் பிரதர்ஸ் என்று ஒரு கம்பனி. அங்கே ஹரிகரன் என்னும் கம்பனி இயக்குநர்களில் ஒருவர். நல்லவரோ கெட்டவரோ தெரியாது. பரிதாபமாய் மூச்சை நிறுத்திவிட்டார். தகவல் எப்படி? மறு விபரங்கள் பின்னர். சுபம். நன்றி, வணக்கம்!"

நெற்றியில் இருந்த கை தானாக விலக,

"உண்மையாகவா சொல்கிறாய் நீ?"

என்று அவசரமாய் குரல் உயர்த்திக் கேட்க, மறுமுனையில் ரிசீவர் வைக்கப் பட்டுவிட்டது புரிந்தது.

■

இப்போதெல்லாம் நேரம் காலம் பார்ப்பதில்லை. வானத்திற்கு மூட் வந்தால் போதும். உடனே பூமியின் மேனியை மொத்தமாய் எடுத்துக்கொண்டு மழை பொழிந்துவிடும்.

வானம் பூமியோடு மழையால் பேசிக் கொண்டிருப்பதற்கு வசதியாக இருள் போர்வையை வீசியிருக்க, பீற்றர் வீதியில் அவன் மிக நிதானமாக நடந்து கொண்டிருந்தான்.

தலையிலே ஒரு தொப்பி அணிந்திருந்தான். அரைக்காற்சட்டை அணிந்து கொண்டிருந்ததால் வீதியில் தேங்கியிருந்த வெள்ளத்தை கண்டு காற்சட்டை நனையுமோ என்று விலகி நடக்கும் தொல்லையில்லாமல், முதுகில் தொங்கிய லெதர் பையோடு, மழையோடு காற்றும் பலமாக வீசினால் முறிந்துவிடுமோ என்று நினைக்கக்கூடிய மெல்லிய உடலோடு, மழையை இரசிப்பவன் போல் உதடுகளை குவித்து மெல்லிய விசில் சத்தத்தோடு நடந்துகொண்டிருந்தவன், நீர்புக முடியாத வசதியுள்ள 'வோட்டர் புறூப்' கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தான். 8.40. முகத்தில் சின்னதாய் ஒரு புன்னகை வர, தெருவின் வலது கோடியில் இருந்த தொலைபேசிக் கூண்டுக்குள் சென்று, ரிசீவர் தூக்கிவைத்துக் கொண்டு டயல் செய்தான். உயிர் பெற்று மறு முனை கிடைக்க,

"ஹலோ" என்றான் குரலில் சற்று கரகர சேர்த்து மாற்றம் செய்து!

"ஹலோ பிரசாத் ஹியர்"

என்றார் மறுமுனையில் பூபால் அன்ட் பிரதர்ஸ் இயக்குநர்களில் ஒருவரான பிரசாத்.

"வெரி வெரி குட்மோனிங் மிஸ்டர் பிரசாத். குட் எனக்கு. பட் உங்களுக்கு நொட் குட்."

சினமானார் பிரசாத்.

"என்ன பேசுகிறாய்... யார் நீ?"

"நானா? என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ கேட்கிறாய்."

பாலும் பழமும் படப் பாடல் ஸ்ரைலில் பாடிக்காட்டி, மேலும் பிரசாத்தை சினமூட்டி, நேரில் பார்க்க முடியாவிட்டாலும் மறுமுனையில் அவர் சினப்படுவதை மனதால் உணர்ந்து அதனால் சந்தோசமாகி சிரித்து,

"இப்பொழுது நேரம் என்ன பிரசாத்?"

"டேய்...யாரடா நீ...நேரம் கேட்க ஃபோன் செய்கிறாயா நீ?"

"கோபப்படாதீர்கள் பிரசாத். உங்கள் பிரிய மகள், செல்வ மகள் மற்றும் செல்ல மகள் நிரோசா, கசக்கி காலில் போட்டு மிதித்து நாசம் செய்யப்பட்ட ரோஜா போல யாருக்கும் பயன் இல்லாமல் சாகப் போகிறாள். ஐ மீன் கொல்லப்போகிறேன்."

நெற்றிப் பொட்டில் ஓங்கி அறையப் பட்டதுபோல் அதிர்ந்து,

"யாரடா நீ..மிரட்டுகிறாயா நீ?"

"மிரட்டல்!...குலைக்கிற நாய்களையே எனக்குப் பிடிப்பதில்லை மிஸ்டர் பிரசாத். இன்னும் சில நிமிடங்களில் உங்களுக்கு ஒரு தகவல் வரும். உங்கள் சகோதரன் ஹரிகரன் சவமான சந்தோசச் செய்தி. அந்தக் கொலை விழுந்த நேரம் காலை 8.20. அடுத்த கொலை விழும் நேரம் 9.20. குட்பை பிரசாத்."

தொடர்பு துண்டித்தான். காற்சட்டைப் பையில் கைவிட்டு சிகரெட் பக்கெட் மறுபடி எடுத்து பிரித்து ஒரு சிகிரெட்டை உதட்டால் கவ்வி எடுத்து, பக்கெட் உள்ளே வைத்து லைட்டர் எடுத்து தீமூட்டி, சுவாரசியமாக புகை இழுத்து கூண்டுவிட்டு வெளியே வர, மழை சற்று ஓய்ந்திருந்தது.

அங்கே பிரசாத், ஏ.சி.அறையில் நிறைய வியர்த்துப் போய் வீட்டுக்கும், ஹரிகரனின் அலுவலகத்திற்கும் மாறி மாறி போன் செய்ய என்கேஜ் சத்தம் மட்டும் பதிலாய் வர, அதனால் பதட்டம் அதிகமாகி விட, இண்டர்கொமில் தனது காரை உடனே தயார் செய்யச் சொல்லி சாரதிக்குச் சொல்லி, புறப்பட அவசரமாக,

பூபால் அன்ட் பிரதர்ஸில் இருந்து மனேஜர் மனோகர் பிரசாத்தை போன் மூலம் வலைவீசி, டைமன் அவெனியூவில் உள்ள மற்றொரு கிளை அலுவலகத்தில் அவர் இருப்பதாக அறிந்து, ... பொக்கற் டயரியில் இலக்கம் பார்த்து போனில் முயல மூன்றுதரம் என்கேஜ் சத்தம் வந்து நான்காவது முறை ரிங் சத்தம் கேட்க சற்று நிம்மதியாகி, "ஹலோ" என்று பிரசாத் குரல் கேட்க, மேலும் கொஞ்சம் நிம்மதியாகி ஹரிகரன் பற்றிய செய்தியை துக்கமான குரலில் சொன்னான்.

போனில் கேட்டது மிரட்டல் அல்ல. போனில் பேசியவன் விளையாட்டான ஆள்அல்ல. இப்போது என்ன செய்வது? ஹரிகரனின் அலுவலகம் போவதா, அல்லது வீட்டுக்குப் போய் நிரோசாவையும் அழைத்துக்கொண்டு, அல்லது எல்லா வற்றுக்கும் முடிவாக பொலிசுக்கு போன் செய்து பாதுகாப்பு கேட்டு.., வேண்டாம் பொலிஸ் எல்லாவற்றையும் குழப்பமாக்கி விடும். என்ன செய்யலாம்..... என்ன செய்யலாம்? என்று நகம் கடித்து யோசித்து குழம்பி, அதிக பட்ச பதட்டமாகி, ஒரு முடிவும் எடுக்காமல் தன் காரை நோக்கி ஓட்டமும் நடையுமாய் விரைய, ஊழியர்கள் ஒருமாதிரியாக பார்க்க, காரில் ஏறி கதவை அறைந்து சாத்தி "நேரே பொலிஸ் ஸ்ரேசனுக்கு டி.ஐ.ஜி அலுவலகத்திற்கு போ" என்றார் சாரதியிடம் பிரசாத்.

■

நிதானமாக நடந்து, பிரசாத் வீட்டின் இரு மாடிக் கட்டிடத்தின் கம்பீரம் பார்த்து, சுவரின் பின்னே உயரமாய் வளர்ந்திருந்த அசோகா மரங்கள் இலைகள் அசைக்க, நாளை இங்கே ஒரு கறுப்புக்கொடியை எங்கே கட்டப் போகிறார்கள் என்று யோசித்துக்கொண்டு, உதட்டில் சிகரெட் பொருத்தி, இறுதியாய் ஒரு ஆழமான இழுப்பு இழுத்து பின் காலடியில் போட்டு சிகரெட் நசித்துவிட்டு, வெள்ளை வர்ணம் பூசப்பட்ட ஆள் உயர கேட் அருகே போய் தள்ள, அது உள்ளே வா என்று உடனே திறந்துகொள்ள, சிரித்துக்கொண்டே உள்ளே நிலப்பாவடை போல் விரிந்திருந்த பச்சை புல்வெளியில் கால் வைத்தான்.

தனது பிரத்தியோக அறையில் ஒன்பது மணிவரை நிம்மதியாக தூங்கி, எழுந்தவுடன் எதிரே இருந்த ஆள் உயரக் கண்ணாடியில், கண்ணாடிபோல இருந்த நைற்றி வெளிப் படுத்திய தன் அழகுகளை தானே இரசித்து, இரு கரங்களையும் தலைக்கு மேலே உயர்த்தி, சோம்பல் முறிக்க, அபாரமான இளமையின் பளிச்சென்ற சாட்சிகளாக மார்புகள் நிமிர்ந்து எழுந்து திமிர்காட்ட நிரோசா தன் அழகுகளுக்காக தானே கொஞ்சம் கர்வப்பட்டாள்.

அந்த வீட்டின் சகல விபரங்களும் அறிந்தவனாக, பதட்டமே இல்லாமல் அவள் அறை தெரிந்து கதவில் கைவைத்து தள்ள சத்தமில்லாமல் திறந்துகொண்டது.

முதுகில் தொங்கிய லெதர் பைக்குள் கையை விட்டு வெளியே எடுக்க, ஒரு ரோஜாப்பூ சிவப்பாய், அழகாய் கையோடு வந்தது.

கண்ணாடியில் தன்னை இரசித்தபடி நைற்றியின் இடுப்பு முடிச்சை அலட்சியமாக தளர்த்த, அங்கே தெரிந்தது இளமையின் அமோகமான விழாக்கோலம்.

அவன் மணிக்கட்டில் நேரம் பார்க்க 9.10 என்றது கடிகாரம்.

20 நிமிடங்கள் இன்னும் உண்டு.

எதிரே தெரிந்த இளமை மனதில் அம்பாய் தைத்து, ஆசைக் களத்தில் வீழ்த்திப்போட, தனது பலவீனம் தனக்கே எதிரியாகமாறப் போவது தெரியாமல் நிரோசாவை நோக்கி ரோஜாவோடு நடக்கத் தொடங்கினான்.

நிரோசா இப்போது நைற்றிக்கு விடை கொடுக்க தயாராகிக்கொண்டிருந்தாள்.

■

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. முத்துக்குமரன்
வயது: 28
முகவரி: 80, கொலன்னாவ ரோட், தெமட்டகொட, கொழும்பு-9.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.



பெயர்: கே. குருபரராஜ்
வயது: 20
முகவரி: தலாங்கந்த லிந்துலை.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.



பெயர்: எம். ஜவ்பர்
வயது: 25
முகவரி: இல.443, கண்டி வீதி, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கால் பந்து விளையாடுதல்.



பெயர்: செல்வி. ஏ. விஜாகா
வயது: 19
முகவரி: 33, டீன்ஸ் வீதி, நகர்ப்பபிரிவு-4, அக்கரைப்பற்று-1.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், சினிமா பார்த்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: எம். குமரகுல சிங்கம்
வயது: 27
முகவரி: P.O. BOX. 60298 AL-KHOR, DOHA-QATAR.
பொழுதுபோக்கு: வீடியோ கமரா மூலம் படம் பிடித்தல், புகைப்படம் பிடித்தல், இசை, விளையாட்டு.

பெயர்: வி. உதயகுமார்
முகவரி: 64, SEAMIST CRESENT, MIV 4E4, SCARBOROUGH, ONTARIO, CANADA.
பொழுதுபோக்கு: நடனமாடுதல், பாட்டுப்பாடுதல், சினிமா பார்த்தல்.

பெயர்: செல்வி. கி. சசிகலாராணி
வயது: 26
முகவரி: 27, செல்வநாயகபுரம், திருகோணமலை.
பொழுதுபோக்கு: தையல், ரி.வி. பார்த்தல், கதைப்புத்தகம் வாசித்தல், வலைப்பந்து விளையாடுதல்.

பெயர்: எஸ். பரீனா
வயது: 21
முகவரி: BLOCK NO. 01 HOUSE NO. 382 AL-NASEEM AL-JAHRA CENTRAL FREE KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், கதைப் புத்தகம் வாசித்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



சிறுகதை

-அக்குறணை ஹரீரா அனஸ்-

# கண்ணீர் ராத்திரிகள்

அடிமை என்பதாய் பிரகடனப்படுத்தப் பட்டுப் போனவர்கள். கல்வி வாசனை, பொது அறிவு வாசனை, ஏன் தங்கள் நலனைப்பற்றியே அறிய முடியாத கூலிகள். இந்த உத்தமர்கள் இல்லையென்றால் எங்கள் ஏற்றுமதிப் பெறுமானங்களெங்கே? ஏன் எங்கள் கௌரவ ஜமாய்ப்புகள்தான் எங்கே? இந்த மலைவாசிகளைப்பற்றி சிந்திப்பவர்கள் எத்தனை பேர்? அப்படியே சிந்திப்பவர்களும் அவர்களை சீரழிக்கும் பாணியிலேயே....இது அக்கிரமம்...!

மனப்பாரமென்றால் இதுதானோ? எப்போதும் மனம் இவ்வாறுதானே இருக்கிறது. செண்பகம் வாசல்படியில் சுருண்டு படுத்திருந்த நாயை விரட்டிவிட்டு காய்வதற்காக வெயிலில் போட்டிருந்த கோணிச்சாக்கை எடுத்து உதறியபடி வீட்டினுள் புகுந்தாள். 'வெய்யில் அடிச்சா நெருப்புமாதிரி... இல்லையெண்டா சொர...சொர...எண்டுக்கிட்டு மழைதான்.' தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

"அம்மா பசிக்குதம்மா. சாப்பாடு கொடம்மா! இன்னைக்கு மட்டும் சாப்பாடில்லாட்டி நான் அந்தச் சாமி சத்யமா கலட்டி மலையிலை இருந்து குதிச்சி....செத்துப்புடுவேன் ஆமா.." ராமு தாயிடம், சண்டப்பிரசண்டம் செய்தான். "நா என்னடா பண்ணுவேன் மகாராசா? அந்தப் பிள்ளையாரப்பா சத்தியமா அப்பிடிச் செஞ்சு போட்டிடாதேப்பா... எங்கை ஒங்கப்பன் வர நான் யார்ரை காலைப் புடிச்சாயினும் சாப்பாட்டுக்கு ஏதாச்சும் பண்ணுரன். கொஞ்சம் அந்தச் சாக்கிலை படுத்துக்கோ."

மூட்டு முள்ளாய் வலித்தது. காலை வெள்ளென கொழுவிய கொழுந்துக்கூடை பகல்பகலாய் முதுகில் கிடந்து உருண்ட வேதனை இன்னமும் பச்சைப் புண்ணாய் வலித்தது. அதுமட்டுமா, கயிறு வெட்டிக் காய்த்துவிட்ட அடையாளம் கறுப்பு உராய்வாய் தினம் தினம் மரத்துப் போயிருந்தது. தலைவேறு விண், விண் என்று வலித்தது. உடலில் எத்தனையோ காயங்கள்; மனதில் அதைவிட அகலமானவை.

"சொந்தமாக்கித் தருவோம்" என்ற வார்த்தைகளை மட்டும் செவி வாங்கிக் கொண்ட எட்டடி லயத்துக் குடில்களில் இப்படி எத்தனை செண்பகம்கள்.

"சட...சட" என அடுப்பு வெடித்துக் கொண்டிருந்தது. பச்சை வீரமரத்து விறகுகள் அவளுக்கு சாம்பிராணி அபிஷேகம் செய்தது. வீடு முழுக்க புகைமயம். சீலைத் தலைப்பை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு தண்ணீரை அடுப்பில் வைத்த கையோடு அனுங்கிக் கொண்டிருந்த அலமேலு அண்டை போனாள் செண்பகம். "அலமேலு அவமேலு...என்னாத்தா செய்யுது...? உனக்கு என்னாத்தா செய்யுது?" நேற்று வரைக்கும் நல்லா இருந்தவள்இண்ணைக்கு காலையிலை "முதுகு முள்ளுக்குப் பக்கத்திலை லேசா வலிக்குதும்மா...."எண்டு சொன்னாள். அந்திக்குப் பார்க்கும்போது பென்னம்பெரிய கட்டி ஒண்டு விஷம் வைச்சு பெரிசா முகம் விட்டிருந்தது. அதுக்குக் கத்தாழை தேடி அதன் சோத்தை எடுத்து மஞ்சள் சேர்த்து தேங்காயெண்ணையில் கொதிப்பாட்டிக்கட்டிப் போடுமளவில் எத்தனை மணியாகும். அலமேலுவின் வேதனை பெத்த வயிற்றில் "சுரீர்" என்று தைக்க செம்பகம் சூளைக் கொளுத்திக்கொண்டு மேல்க்கணக்குத் தோட்டத்து மேட்டில் இருக்கும் கற்றாழைப் பற்றைக்குப் போனாள்.

•••

பகல் முழுக்க மாடாய் உழைத்து உழைத்து உடம்பெல்லாம் வலியெடுக்க றோட்டோரத்தில் இருந்த பட்டமரக் கொப்பொன்றையும் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான் சிங்காரம். அந்தக் கொப்பு விறகுக்காவது உதவும். இந்த மனிதர்கள் என்றும் பெரியவர்கள் என்றும் உதவிக்கென்று யார் இருக்கிறார்கள்?

"செம்பகம்... செம்பகம்...." என அழைத்தவாறே தனது குடிசைக்குள் நுழைந்தான். 'எங்கை செம்பகத்தைக் காணோமே' மனம் கேள்வியாய்க் கேட்க...அலமேலு முனகி முனகிச் சொன்னாள்- "அப்பா... அம்மா எனக்கு விஷப்பருவுக்கு மருந்து புடுங்கப் போயிரிச்சி." 'ஏன்... அலமேலு! ஒனக் கெங்கேவிஷப்பரு?" "ஆங்..." என்று அவள் அந்த முகம் வைத்த கட்டைக்காட்டினாள்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான். அலமேலு வேதனையால் 'ஆ...ஊ..' என்று கத்துவதைக் கேட்டு மனம் வெந்து சிங்காரத்தின் கண்கள் குளமாகிவிட்டன. எல்லா விதத்திலும் தனித்துவிடப்பட்ட ஜீவன்கள். இப்போது அடையாள அட்டைப் பிரச்சனை. அது ஒருபுறமிருக்க...சந்தேகப்பட்டு அள்ளிக் கொண்டுபோய்....பின்னர் காணாமலே போய்...அடிமேல் அடிபட்டகாலில் படுவதுபோல....

"ஐயோ..மாரி ஆத்தா...ஏண்ட மாரி ஆத்தா..." செம்பகத்தின் பதட்டமான குரல்கேட்டு ஓடிவந்தான் சிங்காரம். அதற்கிடையில் செம்பகம் வாசல்படியில் விழுந்து மயங்கிவிட்டாள்.

"செம்பகம்... செம்பகம்... ஒனக்கு என்னம்மா நடந்தது...? சொல்லு செம்பகம் சொல்லு," தன் அருமை மனைவியை மடிமீது வைத்து ஆதரவாகக் கேட்டான் சிங்காரம். செம்பகம் கண்களைத் திறக்கவே இல்லை... பின்னர் ஒருவாறாய் தண்ணீரை முகத்திலடித்து தலையைப் பிடித்து விட்டு சிங்காரம் காரியம் செய்ய, செண்பகம் மெதுவாகக் கண்திறந்தாள்.

"நான் நம்ம அலமேலுவுக்கு கத்தாழை புடுங்கப் போனேனா, அங்கை... அங்கை... ஒரு நல்ல பாம்பு... இருந்து சட்டுணு கொத்திரிச்சி மச்சான்..." இதனைக் கேட்ட சிங்காரத்திற்கு உடலெல்லாம் நடுங்கியது. தன் அருமை மனைவியைத் தீண்டிய பாம்பின் மீது வெறிபிடித்த கோபமாய் வந்தது... அலமேலு "அம்மா அம்மா" என்று அரற்றினாள். மற்றைய மூவரும் அழுதுகொண்டிருந்தனர்.

செம்பகம் நீலமானாள். செம்பகம் மூச்சிழுத்தாள். செம்பகம் செத்துப் போனாள்.

•••

காலம் கொஞ்சம் கொஞ்சமாய் நகரத்தொடங்கியது. இடிந்துபோய் உட்கார்ந்திருந்தான் சிங்காரம். வேலைக்குப் போகாமல் போகாமல் இருந்து பார்த்தான். மனம் முழுக்க பாரமாய்க் கனத்துத் தொங்கியது. ராமு கடைக்குட்டி, அலமேலு நடுவில் பிறந்தவள். மூத்ததுகள் இரண்டும் பெண்குட்டிகள் இரண்டும் குமர். சிங்காரம் என்ன செய்வான். கீழ்கணக்கு லயத்தில் யாரிடமாவது காசு கடனுக்கு வாங்கி... என்று நினைத்தாலும் நினைவு கூட ஓடி மறைந்துவிடும். லயத்தில் என்ன பணக்காரர்களா இருக்கிறார்கள்? கடன் வாங்கிவிட்டு பின்னாடி கொடுப்பதற்கு? எல்லோரும் அன்று அன்று தம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காய்... இயந்திரமாய் வேலை செய்பவர்கள். அந்த 'காமறாவில்' செம்பகத்தின் வெறுமை அப்பட்டமாகவே தெரிந்தது. சிங்காரத்திற்கு



ஏற்கனவே இருதய வால்வில் பலவீனம். அவனால் தொடர்ந்து அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றமுடியுமா?

"அடேய் சிங்காரம்! என்னடா இப்படியே இடிஞ்சு போயிருக்காய் ஒனக்கென்னடா நடந்துப்புடிச்சு?" மேல் கணக்குத் தோட்டத்தின் கங்காணி சுப்பையா வந்து அதட்டியபோது தான் சிங்காரம் நினைவிலிருந்து மீண்டான்.

"வாங்க கங்காணி ஐயா! வாங்க... நம்மை எல்லாம் விட்டுப்புட்டு நம்மட செம்பகம்.." வார்த்தைகள் கொழுவ சிங்காரம் கதறி அழுதான்.

"சிங்காரம் இறப்பும் பிறப்பும் நம்மளுக்குத்தானேயடா... இதுக்குப் போயி பெரிசு படுத்தாதை... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு... அதுவிஷயம்மாத்தான் ஒன்னோட பேசிட்டுப் போக வந்தனான்."

என்ன என்பது போல சிங்காரம் கங்காணியை நோக்கினான்.

"கொழும்பிலை ஒரு நல்ல இடமா கெடைச்சிருக்கு..."

"எதுக்குங்க..."

"அதுதான் ஒண்டை மூத்த புள்ளைங்க இரண்டையும் வேலைக்கு சேக்குறதுக்கு ஒரு வூடு கெடைச்சிருக்கு எண்டுறனே."

"வேண்டாங்க கங்காணி, அதுகள் திங்க வழியில்லாட்டிலும் நம்மளோடையே இருக்கட்டுமுங்க."

"அடே சிங்காரம்! முட்டாள் தனமாப் பேசாதை. மாசமுடிவிலை ஒனக்கு ஒரு எட்டு நூறுரூபா கெடைக்கிறது விருப்பமில்லையா? கொஞ்சம் யோசிச்சிப்பாரு."

பிணமே வாய்திறந்துவிடுமே. சிங்காரம் மனிதன் தானே... கங்காணியின் குழையடிப்பிற்கு சிங்காரம் கட்டுப்பட்டான்.

இதனால் கங்காணிக்கு சுளையாய்க் கிடைக்கப் போவது இரண்டு பிள்ளைகளுக்குமா....? மூவாயிரம் ரூபாய். ஒப்பந்தம், பொறுப்பு, ஒப்படைப்பு இத்யாதிகள் எல்லாம் கங்காணி மட்டும்தான். சிங்காரத்திற்கு இதில் எந்தத் தொடர்பு மில்லை.

•••

சில நாட்களுக்கு வேலைக்குப் போவதும் சிலநாட்களில் இயலாமல் படுப்பதுமாக இரண்டரை மாதங்கள் கழிந்துவிட்டன. இதுவரை கங்காணி சொன்னதைப் போல புள்ளைகளிடமிருந்து பணமுமில்லை. ஒரு கடதாசியும் இல்லை. சிங்காரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை.

என்ன செய்வது என்றும் விளங்காதவன் கஷ்டப்பட்டு மலையேறி கங்காணியின் வீட்டுக்குப் போனான்.

"வா..வா.. சிங்காரம் என்னடா.... நல்லாவே இளைச்சுப் போயிட்டே..." கங்காணியின் குரலில் கலக்கமே இல்லாமல் இருந்தது.

"கங்காணி ஐயா! அதுதான் நம்ப புள்ளைங்களிட்டை இருந்து ஒரு மறுமொழியும் இல்லைங்க. சல்லியும் அனுப்புதுகளில்லங்க... அதுதான் என்ன ஏதுண்டு விசாரிச்சுக்கிட்டுப் போகலாமெண்டு வந்தேனுங்க." "ஆ... அதுவா... அந்த வூட்டுக்காரங்க நல்ல மனிசருங்க... அவங்கள் கொஞ்சம் மறந்துக்கிட்டிருப்பாங்க.... அதுதான்போல ஆ...இப்ப என்ன இரண்டரை மாசம்தானே...இன்னும் ஒரு கொஞ்ச நாள் பொறுத்திருந்து பாரேன். சிலவேளை எல்லாத்தையும் சேர்த்தே அனுப்பிடுவாங்களோ.....என்னமோ...?" சிங்காரம் புறப்பட்டுப் போனான்..

•••

மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. அந்தக் காமறாவில் ஏறக்குறைய அரைவாசி இடத்திற்குமேல் தண்ணீர் வந்துவிட்டது. ஏற்கனவே பெய்த மழையின் உபகாரம் அது. வாசல்படியில் சத்தம் கேட்க... எழும்பி ஒரு சாக்கை எடுத்துப் போட்டுவிட்டு வாசல்பக்கம் போனவன் அதிர்ந்து போனான். தனது இரண்டு குஞ்சுகளும் விறைக்க விறைக்க நின்று நடுங்குவதைக் கண்டான். தன் அன்பு மகள்மார் இரண்டு பேரையும் கண்ட சந்தோஷத்தில் அப்படியே கட்டி அணைத்தான். நெற்றி முகம் என்று மாறி மாறி இரண்டு பேரையுமே முத்தமிட்டான். குளிர் ஒருபுறம், மழை ஒருபுறம், வேதனை ஒருபுறமாக தமது தந்தையைக் கட்டிக் கொண்டு ஆறாய் அழுது தீர்த்தார்கள் அந்த இரண்டு செல்வங்களும்.

"அப்பா..அப்பா..கங்காணி எங்களை ஏமாத்திடானப்பா!"

"என்னம்மா சொல்றாய்?" மூத்தவள் கேவிக்கேவி விம்மினாள்.

"அப்பா எங்களைக் கொண்டு போயி... ஒரு விபச்சார விடுதியிலை சேத்துட்டானப்பா..."

ஆயிரம் இடிகள் தலையிலிடித்தது தலைக்கு மேலுள்ள வானம் இடிந்து நொருங்குவதாய்ப்பட்டது அவனுக்கு....

"என் கண்ணுகளா ஒங்களுக்கு என்னம்மா ஆச்சி..."

தங்களை கங்காணி கூட்டிப் போனது, விடுதியில் சேர்த்தது என்றெல் லாம் சொன்னாள், மூத்தவள்...ஆத்திர மேலீட்டால் வெருண்டு கத்தினான் சிங்காரம்.

"அம்மா தாயே... இண்டைக்கே இப்பவே போயி இந்தக் கங்காணி சுப்பையாவிண்டை தலையை அறுத்துப் புட்டு வந்திறம்மா... என்னை வுடம்மா...." ஆவேசத்தில் கவ்வாரத்துக் கத்தியை எடுத்தான். கல்லில் போட்டுத் தேய்த்தான்.

"அப்பா வேண்டாமப்பா... அவனைக் கொண்டு போட்டா.... லயத்திலேயே பெரிய ரகளையாயிடுமப்பா... பின்னாடி உங்களுக்கு வேலையும் கிடைக்காதுப்பா... இந்த லயத்தைவிட்டே நம்மளை துரத்திப் போடுவாங்கப்பா.... அம்மா செத்துப் போனதுக்கப்புறம் இந்தத் தம்பியையும் தங்கச்சிமாரையும் பாக்கிறதுக்கு வேறை யார் அப்பா இருக்கிறாங்க. அதுமட்டுமில்லை கொலைகாரப்பட்டதோடை ஜெயில்லை கொண்டுபோய் போட்டுடுவாங்கப்பா. இப்போதைக்கு வேண்டாமப்பா... அவனை கொஞ்சம் கொஞ்சமாச் சாக வைக்கிறதுக்கு நானே ஒரு வழி நெனைச்சேன். அதை நானே செஞ்சு காட்றேனப்பா..."

மூத்தவள் ராசாத்தி அப்பாவை சாந்தப்படுத்தினாள். தன் குழந்தைகளை அணைத்தபடி அன்றிரவு முழுக்க சிங்காரம் கவலையில் தூங்கவே இல்லை. இப்படி எத்தனை இரவுகள் தான் கண்ணீரில் கரைவதோ?

•••

ஏதோ ஒரு திட்டம்- ஏதோ ஒரு முறை- கங்காணி சுப்பையாவின் விதியை ராசாத்தி பற்றிக் கொண்டவளாய்... எப்படியோ கங்காணியின் வீட்டில் ராசாத்தி வேலைக்காரியாய்ச் சேர்ந்தாள். சம்பளம் பேசவில்லை...சாப்பாடுமாத்திரமே... சுப்பையாவின் மனைவி பட்டம்மாளும் ராசாத்தியை விரும்பி விட்டாள். கங்காணிக்கு ஏகப்பட்ட விருப்பம் ராசாத்தி மீது. அவள் கங்காணியின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துவந்தாள்.

அன்று காலை சுப்பையா செத்துப் போனான். பட்டம்மாள் அழுது புலம்பினாள். ஊர்முழுக்க அழுதது... ராசாத்தி அமைதியாய் வீட்டுக்குப் போனாள். தன் அன்புத் தந்தையிடம் சொன்னாள்- "சுப்பையா செத்துப் போனான்.."

குட்டிக்கதை

# மச்சான(ப்) பார்த்தீங்களா..?



அப்புத்தளையூர் எப். லெனாட்குமார்.

"சீதனம் கொடுத்து தான் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்றால், உலகில் எத்தனை ஏழைப்பெண்கள் மணமாகாமல் இருப்பார்கள்...?"

சுந்தரிக்கு அழுதழுது முகம் வீங்கியிருந்தது. அவளால் அழுவதை தவிர வேறு என்ன தான் செய்யுமுடியும்! திருமணம் என்பது இறைவன் தானே நிச்சயிக்க வேண்டும். அவளாலேயே அவளை புரிந்துகொள்ள முடியாதிருந்தது.

ஒரு நேரம் சந்தோசமாயிருப்பாள். மறுநேரம் எதையோ பறிகொடுத்தவள் போல குந்தியிருப்பாள். தனிமையில் சிந்தித்துக்கொண்டிருப்பாள். இப்போதும் அப்படிதான். சிவந்த முகம் வீங்கியிருந்ததுகூட அவளுக்கு அழகாய்த் தானிருந்தது.

"மக... என்னம்மா யோசிச்சிக் கிட்டிருக்க? மத்தவங்க ஒரு மாதிரி சொல்லுறாங்கண்ணு யோசிக்கிறியா? என்ன மக செய்யிறது? உனக்கினு ஒருத்தன் பொறக்காமலா இருந்திருப்பா! கவலப்படாம போய் முகத்த கழுவிகிட்டு, சாப்பிடு...!" தாயின் பரிவான வார்த்தை மனதுக்கு ஒருவிதமான ஆறுதலாய் இருந்தது!

சுந்தரிக்கு இப்போது இருபத்தெட்டு வயதாகிறது. இவளையும் பார்க்க இளைய பெண்கள் குடியும் குடித்தனமுமாயவாழும்போது இவள் மனம் பலமாக வலிக்கும்.

"எல்லாமே கடவுள் விட்டபடி தான்...!" தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொள்வாள்.

இவளையும் "எத்தனை" பேர் பெண் கேட்டு வந்தபோதும் இறுதியில் சீதனப் பிரச்சனையால் தான் தட்டுப்பட்டு போயிருக்கிறது.

தந்தையின் "கூலிவேலை"ப் பணம் சாப்பாட்டுக்கே போதாமல் இருக்கும்போது, அவரால் சீதனத்துக்காக பணமெங்கே சேர்க்கமுடியும்? பெற்றோரை எப்போதும் சுந்தரி குறை குறைசொன்னதில்லை.

'சீதனம் கொடுத்துத்தான் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்றால் என்னைப் போல் எத்தனை ஏழைப் பெண்கள் மணமாகாமல் இருப்பார்கள்?' தன்னை கேட்டு சமாதானமடைவாள். அவள் நொந்ததெல்லாம் சமுதாயத்தை....! சீதனப்பேய் பிடித்தாடும் ஆண்களை...!

எத்தனை தடவைகள் கண்ணாடிமுன் சென்று தன்னை மணப்பெண்ணைப் போல் அலங்கரித்து களித்திருக்கிறாள்! படுக்கையில் அவள் விட்ட பெருமூச்சுகள் எத்தனை...!

ஏழ்மையில் வாடி நிற்கும் சுந்தரியின் வீட்டாருக்கு மாப்பிள்ளை போர்வையில் வந்த ஆண்களுக்கும் அவர் கூட்டிவந்த குழுவுக்கும் வயிறுமுட்ட சாப்பாடு போட்டதே, பெரிய தொகை செலவாகியிருந்தது! வந்தவர் சீதனமில்லை என்றதும் ஏதாவது "சாக்குபோக்கு" சொல்லி வேண்டாமென்று சொன்னது தான் மிச்சம்.

இறுதியாக வந்த மாப்பிள்ளை வீட்டாரும் அப்படித்தான் சொன்னார்கள்.

"பொண்ண... எங்களுக்கு நிறைய புடிச்சிருக்கு!

"ஆனா, சீதனமில்லாதது தான் பிரச்சின...! கொறஞ்சது அம்பது ஆயிரம் ரூபா பணமா சரி கொடுக்க முடியுமுனா சொல்லுங்க வர்ற முகூர்த்தத்தில சரி கல்யாணத்த வைக்கலாம்...!"

ஐம்பது ஆயிரம் பணமிருந்திருந்தால் சுந்தரிக்கு எப்போதோ கல்யாணம் முடிஞ்சிருக்கும் என்பது அவர்களுக்கு தெரிய நியாயமில்லைதான்.

சுந்தரிக்கு, தன்னை பெண்கேட்டுவரும் ஆண்களின் முன்போய் நின்று நின்றே மனம் புண்பட்டிருந்தது.

'இனிமே நான் கண்காட்சி பொருளா இருக்க விரும்பல...! ஒரு பெண்ண கைப்பிடிச்சி சுயமாவாழ முடியாத ஆம்பள எல்லாம் ஆம்பளையா? கடவுள் எனக்கினு ஒரு ஆம்பள படைச்சிருந்தா நிச்சயம் என்னத்தேடி வருவாரு....! தனக்குள்ளேயே ஒரு முடிவெடுத்துக் கொண்டாள்.

ஆம்!

இப்போது சுந்தரி-ஜன்னல் கம்பிகளுக்கிடையில் முகம் புதைத்து வழிபார்த்திருப்பது, தன்னை மணக்க வரும் ஆண் மகனை தான். காலம் கனிந்தால் ஆண்கள் மனம் மாறினால் நிச்சயம் இவளைப்போன்ற ஏழைப் பெண்களும் களிக்கும் காலம் கனிந்து வரும்.

அதனாலல்லவோ இவ்வேழைப் பெண் மனதுக்குள்ளேயே 'மச்சானைப் பார்த்திங்களா?' என்ற பாடலை மௌனமாக அசைபோட்டுக் கொண்டிருக்கிறாள்!

(உண்மை தானே?)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## உண்மைக்கதை

### ஆணப்பெத்தவங்கதான் வரதட்சணை கேட்கணுமென்னு ஏதாவது சட்டமிருக்கா? இல்லாட்டி யாராவது சொல்லியிருக்காங்களா?

# எது நியாயம்?

-ரமேஷ் கண்ணன்-

"திவ்யா மனசப்போட்டு குழப்பிக் கொள்ளாம எழுந்து கண்ணத் துடச்சுக்க..."

திவ்யாவின் அண்ணன் குமார்தான் அவளை ஆறுதல்படுத்திக் கொண்டிருந்தான். ஆமாம் அழுகையின் பின்னணி சோகமானது. என்னதான் சொன்னாலும், எவ்வளவுதான் விவரித்தாலும் இந்த வரதட்சனைப் பிரச்சனை மட்டும் தீரப் போவதில்லை என்பதுதான் அவளின் கண்ணீர்துளிகளின் எதிரொலிப்பு. சில வினாடி மௌனத்தின் பின் மெல்ல எழுந்துகொண்டவள், குமாரை நோக்கு கின்றாள்.

"திவ்யா ஒருத்தனுக்கு ஒருத்தி என்னு எண்டைக்கோ ஆண்டவன் எழுதிடுறான். ஆனா அவன் கிடைக்கும் வரைக்கும் நாமதான் பொறுத்துக்கணும்... அதவிட்டுட்டு இப்படி அழுறதால எந்தப் பயனும் கிடைக்கப் போறதில்ல. ஒனக்கென்று ஒருத்தன் இல்லாமலா போகப் போறான்....?"

அவள் கன்னங்களை ஆக்கிரமித்த கண்ணீர்த்துளிகளைத் துடைத்தபடி குமார் அவளை தேற்றுகின்றான். என்னதான் ஆறுதல் சொன்னாலும் அவளால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் இன்றுவரை அவளைப் பெண்பார்க்க வந்தவர்கள் ஏராளம். ஆனால் அவர்கள் பெண்பார்க்க வந்தார்களா? அல்லது பொன் பார்க்க வந்தார்களா? என்பதைத்தான் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"எவ்வளவு நகை போடுவீர்கள்? எவ்வளவு பணம் தருவீர்கள்? சொந்த வீடு உண்டா?" இவைதான் வருபவர்களின் கேள்விகளே தவிர பொண்ணு எப்படி? எதுவரைக்கும் படிச்சிருக்கு? பழக்கவழக்கம் எப்படி? என ஒருவார்த்தைகூட கேட்டது கிடையாது.

'கல்யாணம் என்பது இதுதானா? ஏதோ சந்தையில் வாங்கப்படும் ஜடங்களாக வல்லவா பெண்களைக் கருதுகின்றார்கள். பெண்களைத் தெய்வமாகப் போற்றியகாலம்



மலையேறிவிட்டது. இப்போதெல்லாம் பெயருக்கு 'மனைவி' என்ற ஸ்தானத்தில் ஒருத்தி இருந்தால் சரி...' அவள் உள்மனது புலம்பிக்கொண்டது. ஆயினும் வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. தன்னைத்தானே தேற்றிக்கொண்டவள், திடமான ஒரு முடிவுடன் எழுந்துகொண்டாள்.

ஒருவாரம் சென்றதும் சந்தேகம்தான். மீண்டும் குமார் எவ்வாறோ ஒரு இடத்தைப் பார்த்திருந்தான். பாவம் அவனால் இதைத்தவிர என்னதான் செய்ய முடியும். வருபவர்கள் வசதியானவர்கள், பொடியன் வெளிநாட்டில் படித்தவன், பெரிய உத்தியோகம், இவை குமார் சொன்ன சில தகவல்கள். அவற்றைக் கேட்க அவளுக்கு சிரிப்பதா அல்லது அழுவதா என்று புரியவில்லை.

வழமையாகப் பெண்பார்க்க வருகின்றார்கள் என்றவுடன் வெறுப்பாக மறுத்துப் பேசும் திவ்யா, ஏனோ இன்று சந்தோசமாக; அவன் விருப்பத்திற்கேற்ப தன்னைத் தயார் செய்துகொள்ள சம்மதித்தது குமாருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும் அவனதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

என்றுமில்லாது திவ்யாகூட நாளைய பொழுதை ஆவலுடன் எதிர்பார்த்தாள். மறுநாள் விடியற் காலையிலேயே எழுந்து கோலமிட்டு மங்களகரமாக வீட்டை மாற்றி யிருந்தாள். பார்ப்பதற்கு கோவில் போன்று காட்சியளித்தது. குமாருக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாமே குழப்பமாக இருந்தது. என்றாலும் தங்கையின் மாறுதல் அவனுக்குப் பூரண திருப்தியைக் கொடுத்தது.

அவள் எதிர்பார்த்தது போன்று அன்றும் ஒரு பெரிய பட்டாளமே வந்திருந்தது. அனைவரையும் திருப்திகரமாக, குறிபார்த்து கவனித்தாள் திவ்யா. உண்மையில் அவள் கவனிப்பில் வந்தவர்கள் அனைவருமே திருப்தி யடைந்தது உண்மை. ஒவ்வொருமுறையும் அவர்கள்தான் பேச்சை ஆரம்பிப்பார்கள். ஆனால் இம்முறை திவ்யா முந்திக் கொண்டாள்.

"என்னங்க.. ஒங்க பையனுக்கு நீங்க எவ்வளவு வரதட்சண தருவீங்க...? எவ்வளவு பெறுமதியான வீடு கொடுப்பீங்க..? எத்தனைப் பவுனுல நகபோடுவீங்க...?"

"என்னடியம்மா... எங்க பையனுக்கு.., நாங்க வரதட்சண தரணுமா...? வீடு கொடுக்கணுமா! நக போடணுமா..! இங்கப் பாரு நாங்க பையன பெத்தவங்க..: இதெல்லாம் நாங்க கேக்க வேண்டிய கேள்வி..."

திவ்யாவின் எதிர்ப்பார்க்காத அந்தப் பேச்சில் திகைத்துப்போன மணமகனின் தாயாரின் சூடான பேச்சு அது.

"என்னங்க ஒங்க நாயம்! ஆணப் பெத்தவங்க தான் வரதட்சண கேட்கணும் எண்ணு ஏதாவது சட்டமிருக்கா..? இல்லாட்டி யாராவது சொல்லி யிருக்காங்களா...? இல்லையே.."

" நீங்க வரதட்சண கேக்கலாம் எண்டா, நாங்க கேக்கிறதுல என்னத் தப்பிருக்கு..? உண்மையாச் சொன்னா ஆணபெத்தவங்கள விட பெண்ணப் பெத்தவங்கதான் கட்டாயம் வரதட்சன கேட்கணும். காரணம் தாலி கட்டின பிறகுகூட ஒங்களுக்கு ஒங்க மகன், மகன்தான். ஆனா பெண்ண பெத்தவங்கள பொறுத்தவரைக்கும் தாலிகட்டின மறுநிமிஷமே அவ மாற்றான் மனைவி...

"பத்துமாசம் சுமந்து, பெத்து, வளர்த்து, ஆளாக்கின தன் பெண்ணையே ஒங்களுக்கு தாரவாத்து கொடுக்கிற அவங்களுக்கு, பெண்ணைப் பெத்தவங்களுக்கு நீங்க என்ன கொடுத்தீங்க..? சொல்லுங்க என்ன கொடுத்தீங்க...?

"வரதட்சண என்பது கேட்டு வாங்கிற தில்லை. அவங்க விருப்பமா கொடுக்கிறது... இப்ப சொல்லுங்க, யாரு யாருக்கு வரதட்சண கொடுக்கணும்...?"

திவ்யாவின் கேள்விக்குப் பதில் கொடுக்க அங்கு வந்தவர்களால் முடிய வில்லை. ஏன் அவள் கேள்விக்கு யாராலும் பதில்கொடுக்க முடியாது..

பூரண திருப்தியோடு திவ்யா அண்ணாந்து பார்க்கின்றாள். ஓட்டிடுக்கின் ஊடாக ஒரு சூரிய ஒளிக்கதிர் பிரகாசித்துக் கொண்டிருந்தது...

(நிஜம்)

# பழைய வைராக்கியம்

-கிண்ணியா சத்தார்-

## குட்டிக்கதை

உம்மா இரண்டாவது தடவையாகவும் எச்சரித்தபோது சுஜிக்கு அழுகையாக வந்தது.

தேம்பித்தேம்பி அழத்தொடங்கியவளை நோக்கி மேலும் சில இடிமுழக்க வார்த்தை களை கொட்டி முடித்தாள் ஆசியத்து. வகுப்பில் முதலாம் நிலை மாணவியால் சகிக்க முடியாத வார்த்தைகள்தான் அவை.

சுஜி பூப்பெய்திய முதல்நாளே பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தமர்ந்த போது ஆசியத்து உதிர்த்த முதல் வாக்கியமே அதுதான்.

"சுஜியை இனிமே பாடசாலைக்கு விடமாட்டோம்."

ஓரிரு ஆசிரியர்கள்கூட வந்து ஆசியத்திடம் சுஜியின் திறமையைப் பற்றிக்கூறி தொடர்ந்து படிக்க அவளை அனுப்புங்கள் என்றபோது ஆசியத்தோ ஒரே பிடியா நின்றுவிட்டாள்.

உம்மாவை நினைக்கும்போது சுஜிக்கு கோபம் நெருப்பாய் வந்தது.

"ஏம்மா கடைசி ஒங்க மகள் ஒரு ஆசிரியையா வாறது கூட உங்களுக்குப் பிடிக்கலையா?" என்று சுஜி அழுகைக் குரலோடு கேட்டது ஆசியத்துக்கு எந்த அர்த்தத்தை தெரியப்படுத்தியதோ தெரியாது.



"அடியே வயதுக்கு வந்திட்டா பொம்பளே வீட்டோடுதாண்டி இருக்கணும்." என்று மட்டும் சொல்லிவிட்டு அடுப்புக்குள் நுழைந்து கறிக்கு உப்பு நிலை பார்க்கலானாள்.

அதற்குப் பிறகும் சுஜி எவ்வளவோ தெண்டித்துப் பார்த்தாள். ஆசியத்து அசையவேயில்லை.

"பொம்பள படிச்சி என்னத்தக் கிழிச்சிடப் போறா"வாயில வந்த வார்த்தைகளையெல்லாம் பேசிப்பேசி சுஜியின் படிப்புக்கு மூன்று மாதத்தில் முற்றுப்புள்ளி வைத்துவிட்ட ஆசியத்து அடுத்து வைத்த கோரிக்கையோ சுஜியை என்னவோ பண்ணியது.

'திருமணம்'

முடியாது!' "எனக்கு அந்தத் திமிர் பிடிச்சவனப் பார்க்கவே சகிக்கல.

"அதுவுமில்லாம எனக்கு இப்ப என்னம்மா கலியாணம்"? என்று இந்த விசயத்திலே சுஜி பிடித்த பிடி தளராமல் நின்றதைப் பாத்து ஆசியத்து பழைய பஞ்சாங்கம் பேசலானாள்.

"அடியே எங்க காதர்நானாவும் நானும் சின்ன வயசிலிருந்தே முடிவெடுத்திட்டோம்.

"இதற்கு மாறா நீ ஏதும் கதைச்சாலோ செஞ்சாலோ என்னோட...." என்று இழுத்தாள் ஆசியத்து.

இரண்டு மாதத்துக்கப்பால் அதிலும் தோல்வி கண்டாள் சுஜி.

'படிச்சி ஒரு வேலை கெடைச்ச பிறகுதான் கலியாணம்.' என்று சுஜி கண்ட கனவுகளெல்லாம் சுக்குநூறாகிப்போனது. சுஜி அர்சத்துக்கு மனைவியாக இல்லறம் புகுந்தாள்.

ஆரம்பத்திலே அர்சத்தை அடியோடு பிடிக்காதிருந்த சுஜி காலப் போக்கில் இணங்கிப் போகலானாள். என்றாலும் அர்சத்தின் குணம் மாறவே இல்லை. உப்புக் கொஞ்சம் குறைஞ்சாக்கூட கன்னத்திலே பளிரென அறைந்துவிடும் அவனது முன் கோபத்தால் சுஜி ரொம்ப சித்திரவதைப் பட்டாள். படுக்கையில் கூட அவனோடு எவ்வளவுதான் துன்பப்பாடங்கள்! போதையில் வந்து ராத்திரியெல்லாம் அவன் பண்ணும் அட்டகாசம் கொஞ்சமா நஞ்சமா? கண்ணாடி முன்நின்று தன்னைப் பார்க்கும் போதெல்லாம் சுஜியின் கண்கள் சிவந்து விடும்.

'அழகு' அடடா எங்கே? என்று வியக்க வைக்கும் அவளுடைய நிலை ஒரு பெண்ணுக்கு வரவேகூடாது.

அதில் மட்டும் அர்சத் கெட்டிக்காரன். அன்று காலைதான் சுஜி முதலாவது குழந்தையைப் பெற்று ஆசியத்தும்மாவின் கையில் கொடுத்தாள். ஆனால் ஒண்ணு! குழந்தை உசிரோடு கெடைச்சதப் போல சுஜி...! பாவம்- சுஜி உம்மாவின் பழைய வைராக்கியத்திற்கு இணங்கிவிட்டு நீளமாய் உறங்கிக்கொண்டிருந்தாள்.

## தேர்தல்கால சிறுகதை

# போலி முகங்கள்

ஆக்கம்-சூர்யா

"மறுக்கவேண்டாம் அண்ணர். நீங்கள் கேட்கத்தான் வேண்டும். ஊருக்குள் உங்களுக்கு நல்ல பெயர்."

எதிரேயிருந்த இளைஞன் வேலையுதத்தை வற்புறுத்தினான். அவனோடு கூட வந்த நாலுபேர் எதுவும் பேசாமல் வேலாயுதத்தார் என்ன சொல்லப் போகிறார் என்று இறுக்கமான முகத்தோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு வெளியே அவர்கள் வந்த பஜீரோ வகானம் நின்றுகொண்டிருந்தது. உள்ளே இரண்டுபேர் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதலாமவன் கேட்டான்,

"இந்த வேலாயுதத்தார் முந்தி வேறு ஒரு இயக்கத்துக்குத்தானே சப்போர்ட் பண்ணியவர். தெரியுமோ மச்சான்?"

"தெரியும். எங்களைக் கண்டாலே நாறின மீனை பூனை பார்க்கிற மாதிரித்தானே மனுசன் பார்க்கிறது."

"பிறகு ஏன் மச்சான் உந்தாளை தேடி சிவம் அண்ணை வந்திருக்கிறார்?"

அதிருப்தியோடு கேட்டான். விரலிடுக்கில் புகைந்துகொண்டிருந்த சிகரெட் போலவே மனமும் புகைந்தது.

வீதியை மைதானமாக்கி கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களை பார்த்துக்கொண்டே இரண்டாமவன் அதற்கு பதில் சொன்னான்.

"உவர் தான் கூட ரன்ஸ் எடுப்பாராம். அதுதான் எங்கள் ரீமில் போடலாம் என்று சிவம் அண்ணர் யோசிக்கிறார் போல் இருக்கிறது."

அலட்சியாய் சொல்லி, விரக்தியாய் சிரித்தான்.

முதலாமவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருவாரமாய் சிவம் அண்ணரோடு பஜீரோவில் ஓடித்திரிந்த போதும் யார் யார் எல்லாம் தமது இயக்கம் சார்பில் வேட்பாளர்களாக நிற்கப் போகிறார்கள் என்பது சத்தியமாகத் தெரியவில்லை.

■

ஐந்து வருடத்திற்கு முன்னால் இராணுவம் துரத்திவர, சந்தில் இருந்த வீடொன்றுக்குள் புகுந்தான். நாய் ஒன்று படுத்திருந்தது. இவன் அவசரமாய் பதட்டமாய் ஓடிவர என்ன நினைத்தோ தெரியவில்லை. குரைக்காமல் இருந்தது. அது குரைத் திருந்தால் அந்தச் சத்தத்தை வைத்தே அவர்கள் தொடர்ந்து வந்திருப்பார்கள். ஒரு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. நன்றியோடு அந்த நாயைப் பார்த்தான்.

"யார் அது இந்த நேரத்திலை. என்ன வேணும்?"

நிமிர்ந்து பார்க்க வீட்டு வாசல் கதவு திறந்து அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தார் அருணாசலத்தார்.

மெதுவாய் அவர் அருகில் போய் தன் அபாய நிலை சொன்னான். "ரவுண்டப் பலமாக இருக்கிறது. விடியும்வரை இங்கே ஓரிடத்தில் இருந்துவிட்டுப் போகிறேன்." என்றான்.

அருணாசலத்தாரின் முகம் போன போக்கில் அவருக்கு அதிலே சம்பந்தமில்லை என்று தெரிந்தது.

"தேவையில்லாத வேலை பார்க்கிறது. பிறகு ஓடி ஒளிக்கிறது. எங்களைக் கேட்டோ இயக்கத்துக்கு போனனீங்கள். நீ சிவப்பிரகாசத்தின்ர மகன்தானே?"

"ஓம் அண்ணை."

"அந்த மனுசன் உன்னை வளர்க்கப் பட்டபாடு. நீர் ஊருக்காக போராட வெளிக்கிட்டிட்டீர். தம்பி உமக்குக் குடும்பப் பொறுப்பு பற்றித் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும். வீட்டிலை பெண்



பிள்ளைகள் இருக்குது. அதனாலே நீர் போட்டுவாரும் தம்பி."

முகத்தில் ஓங்கி அறைந்திருந்தால்கூட இதைவிடப் பரவாயில்லாமல் இருந்திருக்கும். உள்ளே சினம் பொங்க அடக்கிக்கொண்டான்.

"என் தமிழுக்கு இன்னல் வந்தால் தாய் தடுத்தாலும் விடேன்." என்று யாரோ சொன்னதை பொதுமேடையில் முழங்கிய போலி முகம் பற்றி புரிந்துகொண்டான்.

"நமது அரசியல்வாதிகளுக்கு தமிழ் பேச்சுக்கே தவிர, அவர்களது மூச்சாக இருப்பதாக நினைத்தால் எங்களைவிட வேறு முட்டாள்கள் இருக்கமாட்டார்கள். அரசியலுக்குள் விழுந்தவர்கள் எல்லா வற்றையும் நியாயப்படுத்துவார்கள். நியாயம் தேட மாட்டார்கள்."

அரசியல் வகுப்பில் போதிக்கப்பட்டது நினைவுக்கு வந்தது. மறைந்துகொள்ள இங்கே இடம் கேட்டோமே என்று வெட்கமாக இருந்தது. திரும்பி நடந்தான்.

"தம்பி ஒரு நிமிசம்"

நின்று திரும்பிப்பார்க்க,

"இனி என்றாலும் திருந்தி நடவும். வீட்டுக்கு உபயோகமாக இருக்கப்பாரும். நீங்கள் போகும்பாதை மெத்தப் பிழை."

ஓடிப் போய் கழுத்தைப் பிடித்து நெரிக்கலாம் போல இருந்தது.

"மக்கள் வேலை என்பது இலகுவானதல்ல. ஒரு மலர் மாலை கட்டுவது போல சுலபமானதல்ல. பொறுமை வேண்டும். மக்கள் நம்மை புரிந்துகொள்ள மக்களை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்."

போதிக்கப்பட்டது நினைவுக்கு வந்து முன்னால் நின்று தடுத்தது.

பதில் சொல்லாமல் நடக்க கதவு அறைந்து சாத்தும் சத்தம் முதுகின் பின்னால் கேட்டது.

■

அவன் ஐந்துவருடத்திற்கு முன் சந்தித்த அதே அருணாசலம் இன்று சிவம் அண்ணரின் கூட்டாளி. தேர்தலில் அவரும் ஒரு வேட்பாளர்.

வெறுப்பாக இருந்தது. சிவம் அண்ணரிடம் ஒருமுறை சொன்னான்,

"அண்ணர், அருணாசலம் மாதிரி ஆட்கள் தங்களுக்கு என்ன இலாபம் எண்டுதான் பார்க்கிறவை. முந்தி எங்களுக்கு துரோகம் செய்தவங்கள்."

அரசியல் பற்றி உனக்கு என்ன தெரியும் என்பது போல அவனை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தார் சிவம் அண்ணர். இங்கே அவன் இயக்கமே மூச்சு என்று உழைத்தபோது தமிழ்நாட்டில் இருந்தவர் அவர். இயக்கம் வளர்க்க பட்டகாயங்கள், சுமந்த சுமைகள், சந்தித்த துரோகங்கள் பற்றி அவருக்கு தெரிய நியாயமில்லை. சொன்னாலும் அது ஒரு பெரிய விசயமாக தெரியாது. பட்டவனுக் குத்தான் வலி தெரியும். துடித்த துடிப்பு புரியும்.

"உப்பிடிப் பார்த்தால் வெறும் பேப்பரைத்தான் வேட்பாளர் பட்டியலாய் கொடுக்க வேணும். அதெல்லாம் கிடக்கட்டும். அந்த பிரஸ்காரனை விசாரிச்சனியோ? ஒரு பத்தாயிரம் நோட்டிஸ் அடிக்க வேணும்."

உன் கருத்து தேவையில்லை. உன் உழைப்பு மட்டும் போதும், என்பதாய் அவர் பேச்சுக்கு முற்றுப்புள்ளியிட மனது முறிந்து போனது.

மறுநாள் சிவம் அண்ணர் அச்சகத்தில் அடிப்பதற்காக கொடுத்த பிரசுரத்தை கொண்டு சென்று கொடுக்கும்போது பார்த்தான்.

."தீந்தமிழர்களுக்காக போராடப்போகும் பொது வேட்பாளர்கள்" என்ற தலைப்போடு அதில் அருணாசலத்தின் பெயரும் இருந்தது.

மறுநாளே சிவம் அண்ணர் அவனை அவசரமாக அழைத்தார்.

"அச்சகத்தில் கொடுத்த பிரசுரத்தை உடனே திருப்பி எடுத்துவர வேண்டும்."

"முடித்துவிட்டார்களோ தெரியாது."

"அவ்வளவு கெதியா ஏன் அடிக்கி றான்கள்? அதில் சில பெயர்களை உடனே மாற்றவேண்டும். பெண்சாதிமாருக்கு பயந்தவங்கள். கத்துறாளவையாம். கேட்க மாட்டம் எண்டு சொல்லுறாங்கள்."

பிரசுரம் திரும்பி வந்தது. காலியாகிவிட்ட இடங்களை நிரப்ப சிவம் அண்ணர் ஓடாய்த்தேய்ந்து உழைத்துக்கொண்டிருந்தார்.

களைத்துப்போன நிலையில் இப்போது வேலாயுதத்தாரின் காலைப்பிடிக்காத குறை.

வேலாயுதத்தாரின் மனைவி ஊரில் இல்லை. திரும்பிவந்து, தான் தேர்தலில் நிற்கும் விசயம் அறிந்து, 'எலக்சன் கேட்டால் உங்களுக்கும் எனக்கும் இனி ஒரு கனெக்சனும் இல்லை' எண்டு சொன்னா என்ன செய்வது என்று வேலாயுதத்தார் யோசித்தார்.

"பொது வேட்பாளர் பட்டியல் எண்டால்தான் தம்பி சனம் விரும்பும். அப்படி ஒரு நிலை வந்தா நானும் யோசிக்கலாம்."

தப்ப வழி தேடினார். சிவம் அண்ணர் விடவில்லை. மற்ற இயக்கமொன்றின் பெயரைச் சொல்லி திட்டினார். அவர்களே ஒற்றுமைக்குத் தடை என்றார்.

"பொது வேட்பாளர் அணி என்று தான் போடப்போகிறோம். யோசிக்க வேண்டாம். பட்டியலில் சில தவறான பெயர்கள் இருக்கலாம். ஒத்துக்கொள்ளுறன். தேர்தல் முடிய அந்த இடங்களுக்கு நல்ல மனுசர், படிச்ச பெரிய மனுசர் நாலு பேரைப் போடலாம். ஒத்துக்கொள்ளுங்கோ."

ஒற்றைக்காலில் நின்றார்.

■

"சுய விருப்பத்தால் தமிழர்களுக்காக தேர்தலில் குதிக்கும் தமிழர்கள்" பெயரோடு வேலாயுதத்தின் பெயரும் பிரசுரத்தில் இருக்க,

"பொதுவேட்பாளர்கள் அணி வெற்றி பெற வேண்டும்" என்று தலைப்பிருந்தது.

பிரசுரத்தின் அடியில் "இப்படிக்கு தமிழ் மக்கள்" என்றிருந்தது.

யார் கேட்கிறார்கள் என்ற விபரங் களையே பிரசுரத்தில் பார்த்துத்தான் அவனே தெரிந்துகொள்கிறான்.

பின்னர் எப்படி தமிழ் மக்களுக்கு தெரிந்து அவர்களே பிரசுரம் அடித்திருக்க முடியும்!

மனதுக்குள் சிரித்துக்கொண்டான். எல்லாமே என்றோ முடிந்துவிட்டனவோ? புரட்சிகர அரசியல், மக்களின் மத்தியில் உருக்கு உறுதிவாய்ந்த அரசியல் தலைமைத்துவம் என்பதெல்லாம் அழகான கதைகளாக, கற்பனைகளாக...

அவன் விழிகளில் இருந்து விடைபெற்று இறங்கி தரை தொட்டது கண்ணீர்த்துளி. ●

# இலக்கிய நயம்

## தருவது ரசிகன்

# கனவும் உயிர் காக்கும்

விடைபெற்றுச் சென்று கொண்டிருந்த சூரியன் கடல் மட்டத்தில் நின்று எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது.

கடற்கரை மணல் பரப்பில் பலவர்மனின் கரங்களின் சிறைக்குள் வெட்கப்பட்டுக்கொண்டிருந்தாள் சீனத்து பைங்கிளி யூஜினா.

கடைந்தெடுத்த தங்கச் சிலையாக தன் கரங்களுக்குள் வசப்பட்டவளின் வசீகரத்தில் சிந்தையை இழந்துவிட்டு தவித்துக் கொண்டிருந்தான் பலவர்மன்.

பட்டத்துராணி படுத்துறங்கும் பஞ்சணை போல மிருதுவாய், மென்மையாய் இருந்த யூஜினாவின் வயிற்றில் மெல்லத் தன் கரத்தால் வருடிக் கொடுத்தபடி கேட்டான்,

"இன்று நீ என்ன விரதமோ யூஜினா?"

பலவர்மனின் கரம் செய்த குறும்பால் கூச்சத்தால் நெளிந்தபடி செவ்விதழ் பிரித்து சீனத்து பைங்கிளி பதில் கேள்வி உதிர்த்தது.

"ஏன்?"

"இல்லை. உள்ளே ஒன்றுமே இல்லாதது போல் இருக்கிறதே! அதுதான் கேட்டேன்."

சீனத்தின் சிங்காரக் கிளி 'களுக்' என்று நகைத்தது அழகுச் சுனைபோல் இருந்த தொப்புள் சுழியில் பலவர்மன் தன் விரல்களால் விஷமம் செய்து கொண்டே,

"ஏன் சிரிக்கிறாய்? இந்தச் சிரிப்புத்தானே என் சிந்தையை சீவி எடுத்துக்கொண்டிருக்கிறது?"

என்று குழைந்தான்.

"நான் உணவு உண்டேனா என்று அறிய வேண்டுமானால் அதற்கு வேறு வழிகள் உண்டு."

"என்ன வழிகள்?"

தெரியாதது போலக் கேட்டான். அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டான். ஆனால் அவன் கரம் மட்டும் பூந்தேகத்தில் புதைந்து கிடக்கும் இரகசியங்களை அறிந்துவிட்டுத்தான் அடுத்த வேலை என்பது போல சுறுசுறுப்பாக சுற்றித்திரிந்தது.

யூஜினா பலவர்மனின் கரத்தில் தன் விரல்களால் கிள்ளியபடியே பதில் சொன்னாள்,

"உண்டேனா இல்லையா என்று உதடுகளால் கேட்டிருக்கலாம்."

"ஆம்... ஆம் கேட்டிருக்கலாம்."

"ஏன் கேட்கவில்லையாம்?"

"முற்றும் துறந்த முனிவனைக் கூட சித்தம் கலக்கிப் பித்துபிடிக்க வைத்து, சுழற்றும் விழிகளாலும், திரண்டு நின்று மன்மத யுத்தக் களத்துக்கு அழைக்கும் சிகர அழகுகளாலும் உறுதி தளரவைக்கும் வலிமையுள்ள பெண் அருகில் இருக்கும் போது சிந்தனையின் கூர்முனை மழுங்கி விடுகிறது. உன் விழிகள் அதனை விழுங்கிவிடுகின்றன."



உதடு சுழித்துப் பழிப்புக்காட்டினாள். பலவர்மன் அந்த உதடுகளுக்கு தன் உதடுகளால் இன்ப வேதனை என்னும் தண்டனை கொடுத்தான்.

பலவர்மனின் கரச்சிறைக்குள் இருந்து விடுபட நினைப்பவள் போல் யூஜினா அசைய, திண்மையான அழகுகள் இரண்டும் பலவர்மனின் வலிய கரத்தில் மோதி பலவர்மன் மனதை மேலும் பலவீனப் படுத்தின.

"என்ன இருக்கும். இருக்கும்."

"உங்கள் கரத்தின் மென்மை. அதுதான் அறிந்துகொண்டே இருக்கிறேனே."

சொல்லிக்கொண்டே அவன் விழிகளை நோக்கினாள். வெட்கமும், அவன் கரம் செய்யும் விஷமங்கள் உள்ளே விதைக்கும் கிறக்கமும் கலந்து சிவந்திருந்த விழிகளை சந்தித்த பலவர்மனின் விழிகள் மூடிக் கொள்ள மறந்தன. மனமும் ஆசைக் கதவுகளை மூடிக்கொள்ளாமல் அகலத் திறந்தது.

"இதற்குத்தான் நான் வருவதில்லை. பொல்லாத கரங்கள். என் உடல் தாங்காது."

தோள்களை குலுக்கி முகத்தில் பொய்யான பயக்குறி காட்டினாள்.

"எறும்பை நசித்தால் கூட அதற்கு ஒன்றும் ஆகாது. இந்தக் கரங்களைப் போய் பொல்லாத கரங்கள் என்று சொல்கிறாய் பார். பேசும் சித்திரத்தின் போதை இதழ்களில் பொய் வரலாமோ?"

"இருக்கும் இருக்கும்."

யூஜினாவை தன் இடது கரத்தில் சாய்த்துக்கொண்டு அவள் மென்மையான வயிற்றில் முகம் குனிந்து புதைத்தான்.

உணர்ச்சிகள் உள்ளே அலையாய் எழுந்து அவஸ்தை செய்ய,

"விடுங்கள் போதும், விடுங்கள் போதும்.."

என்று முணுமுணுத்தபடி உடல் நெளித்தாள் யூஜினா.

விடாது கேட்டது சிரிப்பொலி.

"யார் சிரிப்பது?"

யூஜினா திகைத்து பின் தன் நிலை உணர்ந்து விழிகள் திறக்க, அவள் பக்கத்தில் பஞ்சணையில் இருந்து அவளையே பார்த்தபடி புன்னகைத்தாள் தோழி.

"என்ன யூஜினா? கனவிலே கூட களியாட்டம்தானோ? விழிகள் மூடிக்கொண்ட போதும் நினைவு அலைகள் நெஞ்சில் வந்து மோதிக்கொண்டிருக்குமே. இது தானடி காதல் நோய்."

"சும்மா போடி! அவரைத்தான் நான்கு தினங்களாய் நான் காணவேயில்லயடி"

"நேரில் காணவில்லையே என்று துடிக்கும் உயிருக்கு கனவுதானடி கைகொடுத்து உதவுமாம்."

தோழி சொன்னது யூஜினாவுக்குப் புரிந்தது.

இதயமன்னவன் முகம் காணவில்லையே, அவன் தரும் வெல்ல முத்தம் பெறமுடியவில்லையே என்று விழித்திருக்கும் போது துடித்தவளுக்கு கனவு சுகம் தந்தது. துடிப்பை ஆற்றும் வழிசொன்னது. என்றாலும் புரிந்த உண்மை மறைத்து கேள்வி வீசினாள்.

"யார் சொன்னதாம்?"

"நான் அல்ல. திருவள்ளுவர்."

"என்ன சொன்னார் அவர்."

தோழி தன் மனதில் பதிந்திருந்த குறள் எடுத்து யூஜினாவுக்கு சொன்னாள்.

**"நனவினா கல்கா தவரைக் கனவினாள்**
**காண்டலி வைன்டென் னுயிர்."**

அதிகாரம் 122, குறள்-1213

## குறுக்கெழுத்துப் போட்டி இல-37

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | 4 |
| | ■ | 5 | | | | |
| 6 | | 7 | ■ | 8 | | |
| | ■ | | ■ | | | ■ |
| 9 | 10 | | | ■ | | 11 |
| | ■ | | ■ | 12 | ■ | |
| ■ | | ■ | 13 | | | |

### இடமிருந்து வலம்

1. வாத்தியாரின் கையில் இருக்கும்.
3. ஏதாவது ஒரு துறையில் தன்னிகர் இல்லாமல் விளங்குவோரையும் இவ்வாறு அழைப்பதுண்டு.
5. தலையில் விழுந்தால் உயிர் காலி.
6. இதற்கான உத்தரவாதம் நம்நாட்டில் குறைந்து கொண்டிருக்கிறது. (திரும்பியிருக்கிறது)
9. வீரர்கள் இது நெஞ்சில் இருப்பதையே விரும்புவார்கள்.
13. இது குளிர்காயவும் உதவும்.

### மேலிருந்து கீழ்

1. சமாதானம் வேண்டியும் இது செய்யப் படுவதுண்டு.
2. சமாதானப் பிரியர்களுக்குப் பிடித்தமானது.
3. இளையராஜாவிற்கு இப்படியும் ஒரு பட்டம் இருக்கிறது.
4. பிரபலமானவர்களிடம் காரியத்தைச் சாதிக்க சிலர் இதைத்தான் பயன்படுத்துவார்கள்.
7. இதன் பிடியிலே சிக்கினால் அவ்வளவுதான்.
8. காதற்ற ஊசியும் கடைவழிக்கு வராது என்பதில் இதுவும் ஒரு சொல்.
10. அமெரிக்காவின் சின்னம் (குழம்பியிருக்கிறது)
11. முதன் முதலில் நடக்கும் சிறப்பான நிகழ்வை இப்படி அழைக்கலாம் (தலைகீழாக உள்ளது)
12. சிறந்த கதையொன்றிற்கு இதுவும் சிறப்பாக இருக்க வேண்டும்.

***இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 19.02.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:***

**குறுக்கெழுத்துப் போட்டி இல-37**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-35க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கா | ஞ் | 2 சி | பு | ர | ம் | ■ |
| 3 வி | சா | ர | ணை | ■ | 4 கொ | 5 சு |
| ய | ■ | ச் | ■ | 6 நோ | ■ | ய |
| ம் | 7 த | சே | ■ | 8 யா | க | ம் |
| ■ | 9 க | த | க | ளி | ■ | வ |
| 10 க | ரா | ம் | பு | ■ | 11 தி | ர |
| 12 சா | று | ■ | 13 வெ | ல் | ல | ம் |

குறுக்கெழுத்துப் போட்டி இல.35இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. லிண்டா நாகராஜா திருமலை.
2. கே. ரங்கநாதன் கொழும்பு-6.
3. பர்ஸான் இஸ்மாயில் சீகிரியா.
4. எம். ஜோன்சன் வவுனியா.
5. கு. ருக்குமணி மஸ்கெலியா.
6. எஸ். தாவூத் கண்டி.
7. எம். கனகராஜ் தலத்துஓயா.
8. எஸ். பவானி கொழும்பு-4.
9. ஏ.எல். அமீர் ஹுஸைன் கல்முனை-03.
10. எல்.எம். பஷீர் புத்தளம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் குறிப்பாக கிழக்கிலும் வவுனியாவிலும் உருவாகப்போகும் குட்டித் தலைவர்களின் எதிர்காலம் பற்றி உங்களின் கருத்து?

சசிரகு-மட்டுநகர்.

கடந்தகாலம், நிகழ்காலம் பற்றியே தெரியாத பலர் தேர்தலில் குதித்திருப்பதால், அல்லது குதிக்க வைக்கப்பட்டிருப்பதால் அவர்களது எதிர்காலம் எப்படி போனால் உமக்கென்ன எனக்கென்ன? நாம் ஏமாறாமல் போனால் சரிதான்.

□

சத்யராஜின் ஏர்போர்ட் பற்றி உமது விமர்சனம்?

எம்.என். நபீஸ்-மடவள பஸார்.

பாடல் இல்லாமல், துணிக்குறைப்பு ஆடல் இல்லாமல், தேவையற்ற நகைச்சுவை காட்சிகளின் திணிப்பு இல்லாமல் விறுவிறுப்பான வித்தியாசமான படம் தரமுடியும் என்று நிரூபித்துள்ள படங்களில் ஒன்று.

□

தற்போது அரசியல் கட்சிகளில் தோன்றியிருக்கும் நெருக்கடி நிலைகளைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

ச.ராமஜெயம்-எட்டியாந்தோட்டை.

உட்கட்சி ஜனநாயகம் என்ற ஒன்று இருப்பதை தலைமையில் உள்ளவர்கள் பலர் மறந்துபோய் விடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

□

என்ன சிந்தியா? காமினி திசாநாயக்கா ஆளும் கட்சியில் இணைந்துவிட்டாராமே?

ஏ.எம் இப்திகார்-புத்தளம்.

அரசியல் பற்றித் தெரியாவிட்டால் இப்படித்தான் தம்பி ஆச்சரியப்பட வேண்டிவரும்.

□

## அரசியலில் குதிக்க எது தேவை?

டியர் சிந்தி! சிரித்தாலும் கண்ணீர் வரும். அழுதாலும் கண்ணீர் வரும். இரண்டும் கண்ணீர்தானே?

சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை.

கண்ணீர்தான். ஒன்று ஆனந்தக்கண்ணீர். மற்றையது ஆற்றாமையால் வரும் கண்ணீர்.

□

தன்னைப் புலிகள் கொன்றுவிடுவார்கள் என்று கலைஞர் பயப்படக் காரணம் என்ன?

எச்.எம்.மஸ்னவி-புத்தளம்.

பயப்படக் காரணம் வாழ வேண்டும் என்ற ஆசை. இன்னுமொரு முறை முதல்வராக வருவதற்கு பத்திரமாக இருக்க வேண்டுமே என்ற துடிப்பு.

□

நான் அரசியலில் குதிக்கப் போகிறேன். அதற்கு தகுதியானவை பணமா, படிப்பா?

செல்வன். ரெ.சந்திரசேகர்-புத்தளம்.

தற்போதைய நிலவரப்படி நடிப்பு. அதிக ஆர்வம் எனில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன் தமிழ் இயக்கங்கள் ஏதாவது ஒன்றுடன் நீர் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். சான்ஸ் போச்...

□

உலகத்தில் பணத்தால் வாங்க முடியாதது என்ன?

எம்.பிரதாப் சந்திரன்-உடபுசல்லாவ.

உண்மையான அன்பு.

□

மகாநதியில் கமல் சுகன்யாவுக்கு கொடுத்த முத்தம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஏ.பி.ஜெளபர்-ஓட்டமாவடி.

சுகன்யாவிடம்தான் கேட்க வேண்டும் ஜெளபர்.

□

வருகிற உள்ளூராட்சித் தேர்தலில் உண்மையான வெற்றி யாருக்கு,

எம்.மகேந்திரன்
இந்தகல எஸ்டேட் மேற்பிரிவு.

கிழக்கிலும்- வவுனியாவிலும் என்றால் அங்கு தேர்தல் நடப்பதே போதும். வெற்றி அரசுக்கே.

□

மாத்தையா கொல்லப்பட்டு விட்டாரா?

எஸ் சாரதா-திருகோணமலை.

இந்த கேள்வி திரு.பிரபாகரனுக்கு முகவரியிடப்பட வேண்டியது.

□

மரணத்துக்கு ஒரு மாற்றம் வந்தால்?

சீ.ரவிந்திரன்-குறுமண்வெளி-11.

தாங்காது ஐயா பூமி.


□

டியர் சிந்தியா! சென்ற ஆண்டின் சிறந்த பாடல் எது?

எம்.என்.என்-ரூபி மஹால்.

என்னைப் பொறுத்தவரை 'புத்தம் புது பூமி வேண்டும்.' படம்-திருடா திருடா. வைரமுத்து எழுதியது.

□



# குத்தரித்த கடி ஜோக்ஸ்

**இன்ஸ்பெக்டர்:** கைதி தப்பி ஓடுறப்ப கையில் துப்பாக்கி வச்சிக்கிட்டு என்னய்யா பண்ணிக்கிட்டு இருந்தே?

**பொலிஸ்காரர்:** நான் விடுவேனா...வானத்த நோக்கிச் சுட்டேனே... ஆனா, அவன் அதுக்கெல்லாம் பயப்படல சார்.

□□

- தலைவர் 'மூட்ல' இருக்கிறப்ப மேடைக்கு அழைச்சு வரவாணான்னு சொன்னா கேக்க மாட்டீங்களே.
- ஏன் என்ன ஆச்சு..?
- பேசறதுக்குப் பதிலா 'சிக்கு புக்கு ரயிலே'ன்னு பாடி ஆட ஆரம்பிச் சுட்டாரே.

□□



கண்ட கண்ட ரத்தத்த குடிச்சு உடம்பைக் கெடுத்துக்காத.... 'எய்ட்சு'ன்னு என்னமோ இருக்கிறதா பேசிக்கிறாங்க.

□□

**கணவன்:** உன்னோட நாய் என்னைக் கடிச்சிடுச்சு.

**மனைவி:** வாயமூடுங்க... நாயாம் நாய். டாமின்னு சொன்னா என்ன கொறைஞ்சா போயிடுவீங்க? சரி...சரி... சீக்கிரம் ஆஸ்பத்திரிக்குப் போய் டாமியை செக்கப் பண்ணிட்டு வாங்க.

□□

**எழுத்தாளர்:** என் கதையில் வரும் ஹீரோ கூடுவிட்டு கூடு பாயும் வித்தை தெரிந்தவர்.

**தயாரிப்பாளர்:** அப்படியென்றால் அரசியல் வாதியின் கதை என்று சொல்லுங்க.

□□

**அவன்:** மர்மக்கதை எழுத்தாளரின் மகளை கல்யாணம் பண்ணியது தப்பாய் போச்சுது.

**நண்பன்:** ஏனடா?

**அவன்:** இரவு நேரத்தில் விளக்கை அணைத்துவிட்டு 'ஜல் ஜல்' என்று நடந்துகிட்டிருக்கா.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இவ்வாரம் (13.02.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 16

காலத்தின்குரல்: நாராயணன் தெய்வீக அவதாரம் எனினும் குழந்தைகளுக்கான குறும்புத்தனங்களும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அதேவேளை அவனிடம் பெருந்தன்மைகளும் காணப்பட்டன. சிறுவர்களுடன் சிறுவனாக விளையாடித்திரிந்தாலும் பெரியவர்களுடன் உயர்ந்த நிலையில் உறவாடுகிறான்.

இயற்கைச் சூழலின் உயர்வினை சிறுவர்களும் உணரவேண்டும். துர்ச் சக்திகள் இயற்கையை அழிக்கும்போது, அதனை எதிர்க்கும் தன்மையினை சிறுவர்களும் அறிந்திருப்பது அவசியம். இதற்காகவே கிருஷ்ணனின் இளமைக்கால லீலைகளை சிறுவர்களுக்குப் புகட்டுதல் நன்மை பயக்கும்.



-காட்சி துவக்கம்-

பின்நோக்கு காட்சிகள்

நந்தகோன் கிராமத்தை, கம்சனால் ஏவப்பட்ட இரு பூதங்களும் எரிக்கின்றன. இதனை அறிந்த கண்ணனும் பலராமனும் பூதங்களை அழிக்கின்றனர்.

-பின்னோக்கு முடிவு-

நந்தகோன் கிராமம்- மக்கள் கூட்டம்.

ஒருவர்: இந்த இரு சிறுவர்களின் தீரச் செயலுக்குக்காரணம் எதுவாக இருக்கும்?

மற்றவர்: இரண்டு பூதங்களையும் கொன்றுவிட்டார்களே!

மூன்றாமவர்: பூதங்களுடன் சிறுவர்கள் மோதியவிதம் அற்புதம்!

நந்த: இந்திரனின் அனுக்கிரகத்தால்தான் இதெல்லாம் நடக்கின்றன. இந்திரனுக்கு பூசை நடத்த வேண்டும். யசோதாவிடம் போய் பூசைக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி சொல்லுங்கள். எல்லோரும் போய் ஆயத்தங்களைச் செய்யுங்கள்...!

மற்றவர்கள்: ஆமாம் வாருங்கள்..!

-காட்சி மாற்றம்-

யசோதா பூசைக்கான ஆயத்தங்களில் ஈடுபடுகிறாள். அலங்காரங்கள் நடைபெறும் போது கிருஷ்ணன் வருகிறான்.

கண்ண: அம்மா...! இதென்ன நடக்கிறது?

யசோ: பூசைக்கான ஆயத்தங்கள்.

நந்த: அம்மாவிடம்தான் எல்லாவற்றையும் கேட்டறிய வேண்டுமா? அப்பாவிடமும் கேட்டால் என்ன கண்ணா?

யசோ: ஏன் அப்படி! அவன் என் மகன்தானே! என்னிடம்தான் எதையும் கேட்பான்! கவனியுங்கள்! இனிமேல் கண்ணனுக்கும் எனக்குமிடையில் நீங்கள் குறுக்கே வரவேண்டாம். மகனே! போய் வெண்ணை சாப்பிடு...!

கண்ண: அதிருக்கட்டும்..! இங்கு என்ன நடக்கிறது? அதனை முதலில் சொல்லுங்களேன்!

யசோ: தெய்வேந்திரனுக்கு பூசை வைக்கப் போகிறோம்!

கண்ண: அம்மா! இந்திரனுக்கு ஏன் பூசை?

யசோ: அப்படியெல்லாம் கேட்கக்கூடாது கண்ணா...இந்திரன் கோபம் பொல்லாதது.

கண்ண: பொல்லாங்கு புரிபவரை ஏன் வணங்க வேண்டும்? தன்னை வணங்காதவர்கள் மீது கோபம் கொள்பவர் எப்படி கடவுளாக இருக்கமுடியும்? அம்மா! இறைவனை வணங்குவது நமது கடமை தான். ஆனால் தன்னைத் தொழாதவர்கள் மீது கோபம் கொள்ளுபவரை கடவுளாகக் கருதமுடியாதே அம்மா!

நந்த: (நகைத்தல்)

யசோ: ஏன் சிரிக்கிறீர்கள்? அவனிடம் விளக்கமாகச் சொல்லுங்கள்.

நந்த: யார்? நானா? உனக்கும் உன் மகனுக்குமிடையிலான பிரச்சனையில் நான் தலையிடப் போவதில்லை. கண்ணன் கூறுவதிலும் உண்மை இருக்கிறது.

யசோ: நீங்கள் அவனுடைய தகப்பன். எதுசரி எதுபிழை என்று அவனுக்கு விளக்க முடியாவிட்டாலும் இத்தகைய செயல்களுக்கு அவனைத் தூண்டாமலாவது இருங்கள்.

ரோகி: கண்ணனுக்கு எவரும் புத்திசொல்லத் தேவையில்லை. நமது கிராமத்துப் பிள்ளைகள் மாடுகளைத்தான் மேய்க்கின்றனர். ஆனால் கண்ணனோ நந்தகோன் கிராமத்தையே மேய்க்கிறானே!

கண்ண: இந்திரனுக்குப் பூசை வேண்டாம் என்கிறேன் நான்..!

யசோ: இந்தப்பூசை நமது மூதாதையர்களால் நெடுங்காலமாக அனுசரிக்கப்பட்ட ஒன்று மகனே! பூசை நடைபெறாவிட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும்...!

கண்ண: இருக்கலாம்! ஆனால் வணக்கத்துக் குரியவருக்குத்தான் வணக்கம் செலுத்தப் பட வேண்டும்!

நந்த: அப்போ அத்தகைய அந்தஸ்துடையவர் யார் மகனே?

கண்ண: அப்பா! நாங்கள் இடையர்கள். பசுக்கள் பாலும் தயிரும் வெண்ணையும் தருகின்றன. அவை வளர நம்மைச் சுற்றியுள்ள காடுகள் உதவுகின்றன. வனத்தையும் மேய்ச்சல்நிலத்தையும் யமுனா நதி செழிப்படைய வைக்கிறது. கார்மேகங்களைத் தடுத்து நமக்கு மழை தர, அதோ அந்த மலைகள் உதவுகின்றன. அதோ அந்த கோவர்த்தன கிரிதான் நமக்கு நல்ல மழைகிடைக்க வழிகாட்டுகின்றது. பசுவும் வனமும் யமுனையும் கோவர்த்தன மலையும் நமது வணக்கத்துக்குரியன. தன்னை வணங்காதமையினால் பழிவாங்கும் எவரும் வணக்கத்துக்குரியவரல்ல. ஆகவே இந்திரனின் கோபத்துக்கு அஞ்ச வேண்டியதில்லை அம்மா. நான் தாயாகிய தங்களை வணங்கக்கடமைப்பட்டவன். உங்களை நான் வணங்காவிட்டால் நீங்கள் என்மீது கோபம் கொள்ளமாட்டீர்களே!

யசோ: அவ்வாறெல்லாம் பேசாதே! இந்திரனின் கோபம் கொடியது. பலதீங்குகள் ஏற்படலாம்.

கண்ண: நான் அதற்கெல்லாம் அஞ்சப் போவதில்லை.

-காட்சி மாற்றம்-

- இந்திரன் நந்தகோன் கிராமத்தின்மீது பெரும் புயலையும் பெரு மழையையும் ஏவுகிறான். மக்கள் பதட்டமடைகின்றனர்.
- கண்ணன் குழல் ஊதிக்கொண்டிருக்கிறான்.
- சிறிதாமனும் ஷியாம் சகாவும் கிருஷ்ணனிடம் வருகின்றனர்.

சிறிதா: ஷியாம் சகா!, வா, கண்ணனிடம் போவோம். கண்ணா...! இந்திரனின் கோபத்தைப் பார்த்தாயா? அவனிடம் மன்னிப்புக்கோரு. இல்லாவிட்டால் நமது கால்நடைகள் எல்லாம் அழிந்துவிடும். (கண்ணன் சிரிக்கிறான்)

கண்ணா! சிரியாதே..! இந்திரனை வணங்கலாகாதென நீதான் சொன்னாய். இப்பொழுது மக்களைக் காப்பாற்றும்படி உன் கோவர்த்தனமலையிடம் சொல்லிப் பாரேன்...!

-காட்சி மாற்றம்-

- கண்ணன் கோவர்த்தன கிரி அருகில் சென்று அதனை ஒரு விரலால் தூக்குகிறான். அதிசயப்பட்ட கிராமவாசிகள் அதன்கீழ் ஒதுங்குகின்றனர்.
- தேவர்கள் மலர்மாரி பொழிகின்றனர்.
- இந்திரனின் கர்வம் அடக்கப்பட்டு கண்ணனின் மன்னிப்பும் கிட்டுகிறது.

-காட்சி மாற்றம்-

கம்சனின் அரசவை

கம்ச: என்ன...? நந்தனுடைய மகன் கோவர்த்தனகிரியை தூக்கினானா?

மந்தி: ஆமாம் மகாராஜா...!

கம்ச: நந்தகோபனுக்கு பெண் குழந்தையல்லவா பிறந்தது? எப்படி மகன் வந்தான்? அவனையும் பூதனை கொன்றுவிட்டாள் என்றும் நீதானே சொன்னாய்!

மந்தி: ஆமாம் மகாராஜா..!

மா.மந்: இவன் நந்தகோபனின் இரண்டாவது மகனாக இருக்கலாம் மகாராஜா!

கம்ச: அவன் மலையைத் தூக்கியதை நீ உன் கண்களால் பார்த்தாயா?

மந்தி: ஆமாம் பிரபு!

கம்ச: அப்படியானால் அவன் நந்தனின் மகனல்ல. அவன் தேவகியின் எட்டாவது மகனாகத்தான் இருக்க வேண்டும். அவன் பூதனையைக் கொன்றிருக்கலாம். நான் பூதனையல்ல...கையால் தூக்குவதற்கு மலையுமல்ல...நான் மதுராபுரி மன்னன்! அந்த ஆண்டவனின் சவாலை ஏற்கிறேன். தேவகியின் எட்டாவது மகனால் என்னைக் கொல்லப் போவதாக அவன் சபதமிட்டான். நான் தேவகியின் எட்டாவது மகனையே கொன்றொழித்துவிடுகிறேன்.

மா.மந்: மகாராஜாவே நேரடியாக அங்கு செல்லப் போகிறீர்களா?

கம்ச: (பலமாகச் சிரித்தபடி) நானேன் அங்கு போகவேண்டும்? அவனே மதுராபுரிக்கு வருவான். அவனை இங்கு வரவழைப்பேன். அவன் வந்ததும் அவனை வாரி அணைப்பேன்... அப்போது என்ன நடக்கும் என்று புரியுமா மாமந்திரி..?

மாமந்: ஆம் மகாராஜா; ஆனால் அவர் இங்கு எப்படி வரமுடியும்?

கம்ச: வாசுதேவனின் நண்பர் அக்குதர் மூலமாக அழைப்பினை அனுப்பப் போகிறேன். தேவகியும் அக்குதரை தன் சகோதரனாகவே கருதுகிறாள். அக்குதரை எவரும் சந்தேகப்படமாட்டார்கள். அவன் கட்டாயம் வருவான். அக்குதரை அழைத்து வாரும்.

மாமந்: அப்படியே மகாராஜா!

-காட்சி மாற்றம்-

கம்சனின் அரசவை

மாமந்திரியுடன் அக்குதர் வருகிறார்.

கம்ச: வாரும் நண்பரே... எம்மையெல்லாம் மறந்துவிட்டீர் போலும்!

அக்கு: தங்களை மறக்க முடியுமா மகாராஜா! அரச பணியில் மூழ்கியிருக்கும் தங்களுக்கு தொல்லை தராதிருக்கவே எட்டத்திலிருந்துவிட்டேன்.

கம்ச: தேவகியையும் வாசுதேவனையும் நான் கொடுமைப்படுத்துவதாக எண்ணியிருப்பீர். அவ்வாறு நடந்து விட்டமைக்காக நானே வெட்கப்படுகிறேன்.

அக்கு: தேவகி தங்கள் சகோதரி. வாசுதேவன் உங்கள் நண்பர். அவர்களிடம் நீங்கள் மீண்டும் உறவு கொண்டாலே போதும். பழையவையெல்லாம் மறைந்து போய்



விடும்.

கம்ச: உண்மையாகவா..?

அக்கு: ஆமாம் மகாராஜா...!

கம்ச: இதற்கு நான் அவர்களுக்கு மகிழ்வூட்டும் வகையில் ஒரு வெகுமதியினை அளிக்க வேண்டுமல்லவா அக்குதர்!

அக்கு: அத்தகைய வெகுமதி என்னவென்று அறியலாமோ மகாராஜா?

கம்ச: தேவகியின் எட்டாவது மகனால் நான் கொலைசெய்யப்படுவேன் என்பது தானே தேவ எச்சரிக்கை! எனது தலைவிதியை மாற்ற முடியாது. எனது சகோதரியினதும் நண்பனதும் வாழ்க்கையினைப் பாழடித்துவிட்டு நான் என்ன சுகம் கண்டேன்? தேவகியின் எட்டாவது மகனை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு "மருமகனே என்னைக் கொன்று உன் கடமையினை முடித்துக்கொள்" என்று கூறப்போகிறேன். இதற்கு உன்னுடைய உதவி தேவைப்படுகிறது நண்பனே!

அக்கு: தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கிறேன் மகாராஜா!

நந்த: எனது நல்லெண்ணத்தை நந்தகோன் கிராமத்திலுள்ள எனது மருமகனிடம் கூறி அவனை இங்கு அழைத்து வாருங்கள்.

அக்கு: ஆனால் நந்தகோபன் இதற்கு இணங்காவிட்டால்...?

கம்ச: உனக்கு நந்தகோபன் மறுப்புக்கூற மாட்டான். அவர்கள் எல்லோரையும் இங்கு நடைபெறவிருக்கும் தனுர் யாகத்துக்கு அழைத்துவாரும். எனது சார்பிலே அழைப்பினை விடுத்து அவர்களை அழைத்துவாரும்.

அக்கு: தங்கள் சித்தம் மகாராஜா!

கம்ச: மாமந்திரி..! எனது மருமகனின் வரவேற்புக்கான ஆயத்தங்களைச் செய்யும் யானை... மற்றும் மல்யுத்த வீரர்கள் எல்லாம் ஏற்பாடு செய்யும். எனது மருமகன் எனது பாசத்தின் தன்மையை உணரட்டும்.

மாமந்: ஆகட்டும் மகாராஜா!

கம்சன் பலமாகச் சிரிக்கிறான்.

-காட்சி மாற்றம்-

நந்தகோன் கிராமம். பெண்கள் நீர் அள்ளுகின்றனர்.

ஒருத்தி: ஓ ராதாராணி எங்கே போகிறாய்?

மற்றவள்: கிருஷ்ணனின் புல்லாங்குழல் இசை கேட்டுப் போகிறாள்..!

ராதா: அவனுடைய இசையை நான் கேட்க வேண்டுமானால் அவனே என்னிடம் வந்து குழலூதுவானே!

ஒருத்தி: இப்போது அவன் உன்னிடம் வரப்போவதில்லை.

ராதா: என்னிடம் வராவிட்டால் அவன் வேறு எங்கே போவானாம்?

ஒருத்தி: கண்ணன் இவளுக்காக மட்டும் ஏன் குழலூதவேண்டும்?

மற்ற: நாங்கள் அவன் இசையைக் கேட்க மாட்டோமா? அவன் எனக்காகவே குழலிசைக்கிறான்.

அடுத்தவள்: உன்னிடம் என்ன இருக்கிறது? எல்லோரும் அவன் இசை கேட்டாலும் அவன் எனக்காக மட்டுமே ஊதுகிறான். நம்பாவிட்டால் அவனையே கேட்டுப் பாருங்களேன்!

வாருங்கள் அவனிடம் போவோம்.

-காட்சி மாற்றம்-

கண்ணன் ஒரு மரக்கிளையில் கண்களை மூடி அயர்ந்து தூங்குகிறான். கோபியர்களின் சிரிப்பொலிகேட்டு கண் விழிக்கிறான்.

கண்ண: எங்கே தண்ணீர்க் குடங்கள் இல்லாமலே வந்திருக்கிறீர்கள்? என்னிடம் ஏதாவது சொல்ல வந்தீர்களா அல்லது கேட்க வந்தீர்களா?

ஒருத்தி: கேட்பதற்குத்தான்!

கண்ண: சரி கேளுங்களேன்.

பெண்1: உனது குழலிசைக்கு அதிக உரிமை கொண்டவர் யார்?

பெண்2: ராதா அல்ல என்று நம்புகிறேன்!

பெண்3: அவள் நமது கிராமத்தவளும் அல்லவே!

பெண்1: நந்தகோன் கிராமத்து மூங்கிலாலே ஆனதுதானே உனது குழல்!

கண்ண: இந்தக் கிராமத்தின் எல்லைகளை நீங்கள் அறிவீர்களா? இந்த நந்தகோன் கிராமத்தைப் பரப்பினால் அண்டசராசரத்தின் அளவினையும் எட்டலாம். சுருக்கினால் என் தாய் யசோதாவின் மடியளவிலும் சுருக்கலாம். ஆனால் இந்த புல்லாங்குழல் உங்களுக்காகவே தான். நான் உங்களுக்காகவே குழலிசைப்பேன்.

-காட்சி மாற்றம்-

நந்தகோன் கிராமம்- கிருஷ்ணன் அருகில் ராதை இருக்கிறாள்.

கண்ண: ராதா! என்ன வாட்டமாக இருக்கிறாயே?

ராதா: என் உள்ளம் ஏதோ ஒரு காரணத்தால் கனத்துப் போயிருக்கிறது கண்ணா... இன்று எனக்காக மட்டுமே நீ குழலிசைக்க வேண்டும்!

கண்ண: எல்லோரும் என்னிசையினைக் கேட்கின்றனர். ஆனால் உனக்காகவே நான் இசைக்கிறேன்.

ராதா: இன்று உன்னிசை நாதத்தை வேறு எவரும் பங்கேற்க அனுமதிக்க மாட்டேன்.

கண்ணன் இசைக்க ராதா ஆனந்த பரவசமடைகிறாள். பலராமன் வருகிறான்.

பலரா: ராதா!

கண்ண: அண்ணா..!

பலரா: மாடுகளை மேய்க்க வேண்டாமா...?

கண்ண: ஏன் எனக்கு முன்பே சொல்லவில்லை அண்ணா! ராதா! நான் போய்வரட்டுமா?

பலராமனும் கண்ணனும் செல்ல ராதை தனித்து நிற்கிறாள்.

-காட்சி மாற்றம்-

அக்குதர் இரதத்தில் வருவதைக் கண்ணுற்ற பலராமன் கண்ணனிடம் செல்கிறான். அவன் தூங்குகிறான்.

பலரா: கண்ணா...கண்ணா நேரம் வந்து விட்டது. எழுந்திரு கண்ணா..!

நந்தகோபன் முன்னும் பின்னும் நடந்துகொண்டிருக்கிறார்.

நந்த: அரசர் என் மகனை ஏன் அழைக்க வேண்டும்?

அக்கு: அதனை கேட்க வேண்டாம் நந்தராஜ்! நம்மிருவருக்கும் காரணம் தெரியும்! கிருஷ்ணனின் தாயார் யார் என்பதை அரசர் அறிவார்.

நந்த: அரசரை நம்ப முடியாது. அக்குதர்ஜி.... இந்தக் குழந்தையைக் காப்பதற்கு எத்தனை தியாகங்கள் செய்திருக்கிறோம் என்பதை அறிவீர்கள். கண்ணனை அங்கு அனுப்புவதனால் இத்தனை தியாகமும் வீணாகிவிடுமல்லவா? அவர் விரும்பியபோது சாய்த்துக்கொண்டு போக கண்ணன் மாடு அல்லவே! நான் சம்மதிக்கவே மாட்டேன்.

அக்கு: நான் மேலதிகமாக எதையும் கூற விரும்பவில்லை. கம்சனின் படைகள் நந்தகோன் கிராமத்தை துவம்சம் செய்யவேண்டுமா? கிருஷ்ணனை சாதாரணமாக எண்ண வேண்டாம். அந்தப் பெரிய கோவர்த்தன கிரியை தன் ஒரு விரலினாலே தூக்கிய சக்திவாய்ந்த ஒருவனை யாரால் வெல்ல முடியும்?

கண்ணனும் பலராமனும் வருகின்றனர்.

கண்+பலரா: வணக்கம் மாமா...

அக்கு: வாழ்க நீடூழி!

நந்த: அக்குதர் மாமா உன்னை மதுராபுரி நகருக்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறார் கண்ணா!

கண்ண: மதுராபுரி அழகான நகரமாமே உண்மைதானா மாமா?

நந்த: உன் கேள்விக்கு அவரால் பதில்சொல்ல முடியாது. நேரில் சென்று பாரேன்!

கண்ண: அப்படியானால் அண்ணா! நாம் போகலாமா?

பலரா: ஆமாம் கட்டாயம் போகத்தான் வேண்டும்!

•••

யசோ: நான் உன்னைப் போகவிடப் போவதில்லை.

கண்ண: அம்மா..!

பழைய சம்பவங்களை யசோதா நினைவூட்டுகிறாள். ஆனால் கிருஷ்ணன் மதுரா செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறான்.

யசோ: இங்குள்ள சுதந்திரம் அவனுக்கு அங்கு கிடைக்குமா? இங்கு எந்த வீட்டுக்குள்ளும் அவன் நுழைகிறான். வெண்ணை திருடுகிறான். பானைகளை உடைக்கிறான். அவனை ஒருநாள் காணவில்லையானால், அவனுக்கு ஏதாவது உடம்புக்கு ஆகிவிட்டதோ என எல்லாரும் ஓடி வந்து என்னிடம் விசாரிக்கிறார்கள். இப்படி அங்கு நடக்குமா? என் கண்ணனை மதுராவில் யார் கவனிக்கப் போகிறார்கள்?

நந்த: உனது சினேகிதி தேவகி இருக்கிறாள். அவள் கண்ணனைப் பார்த்துக் கொள்வாள்.

யசோ: அந்த அப்பாவி சிறையிலல்லவா இருக்கிறாள்!

கண்ண: அம்மா! நான் மதுராவுக்குப் போக வேண்டும்!

யசோ: மதுராபுரியைக் காணவேண்டும் என்ற ஆர்வம் உன் அம்மாவையே மறக்கத் தூண்டுகிறதா கண்ணா?

கண்ண: மதுரா அதிக தூரத்தில் இல்லையே அம்மா! என்னை அழைத்தீர்களானால் ஓடோடி வந்துவிட மாட்டேனா?

யசோதா அழுகிறாள்.

கண்ண: அம்மா..!

-காட்சி மாற்றம்-

கிராமம்-மக்கள் உரையாடல்.

பெண்1: கம்ச மகாராஜா கண்ணனை அழைத்திருக்கிறாராமே! அவனும் அங்கு போக சம்மதித்து விட்டானே...!

பெண்2: இவ்வளவு இதயமற்றவனாக இருப்பான் என்று நான் கருதவேயில்லை.

பெண்3: பயணத்துக்கான ஆயத்தங்களில் அவன் மூழ்கிவிட்டான். வெண்ணை உண்ணவே அவன் வரவில்லையே!

பெண்1: அவனில்லாமல் நாம் எப்படி வாழப் போகிறோம்..?

பெண்2: ராதாவிடம் கேட்டுப்பார்க்கலாம்?

ராதா பூப்பறித்துக்கொண்டிருக்கிறாள்.

பெண்1: ஓ ராதா! உன்னை எங்கெல்லாமோ தேடுகிறோம். நீ இங்கே பூப்பறித்துக் கொண்டிருக்கிறாய்!

ராதா: என்ன கலவரமடைந்து காணப்படுகின்றீர்கள்? என்ன நடந்தது?

பெண்2: உனக்கு ஒன்றுமே தெரியாதா..?

ராதா: என்ன அது..?

பெண்2: கண்ணன் மதுராபுரி செல்கிறான். அவனைத் தடுத்து நிறுத்த வேண்டாமா? நீ சொன்னால் மட்டுமே கேட்பான்.

ராதா: நான் எப்படி தடுக்க முடியும்? நான் அவனுடைய பக்தை மட்டுமே! அவனுடைய கடாட்சம் எல்லோருக்கும் பொதுவானது. நீங்களும் அவனுடைய அன்பைப் பெறவில்லையா? அவன் ராதையிடம் மட்டும் கட்டுண்டவனல்ல. அவன் உலகுக்குரியவன். அவனுடைய பாசமும் தெய்வீகமும் நமது செல்வம். அவற்றை எங்கும் பரவவிடுவதனால் அவை மென்மேலும் பெருகும். அவன் பிரிந்திருந்தால் நம் அன்பும் பெருகும்.

பெண்: அவன் போவதை நீ தடுக்கப் போவதில்லை என்பதனை ஏன் நீ ஒப்புக் கொள்ளவில்லை?

ராதா: நீரையும் காற்றையும் பரவாமல் தடுக்க முடியுமா? பிரிவு துயர் தரத்தான் செய்யும். ஆனால் தடை செய்ய முடியாது. சந்திரன் ஒளியை எங்கும் பரப்புகிறான். ஒரு பாத்திர நீரில் அவனுடைய பிம்பத்தை விழச் செய்துவிட்டு நிலவினைப் பிடித்துவிட்டதாகக் கருத முடியுமா? அனைத்துலகுக்குமே பொதுவானதை நாம் நமக்கு மட்டுமே சொந்தமானது என்று உரிமை கொண்டாடலாகாது. பிரிவும் வாழ்க்கையில் சகஜம். கண்ணனின் பிரிவு அவனை நாம் பரிபூரணமாக அறிந்து கொள்ள உதவும்.

-காட்சி மாற்றம்-

கண்ணன் தூங்குகிறான். யசோதா அவனை பார்த்தவண்ணம் நிற்கும்போது நந்தனும் பலராமனும் வருகின்றனர்.

பலரா: அம்மா அவனை எழுப்புங்கள்.

யசோ: அவன் இன்னும் கொஞ்சம் தூங்கவிடமாட்டீர்களா? கண்ணா... கண்ணா..!

கண்ண: அம்மா....!

பலரா: இப்படி இருந்தால் அங்குபோய் என்ன செய்யப் போகிறாய்? எழுந்து குளித்துவிட்டு புறப்படு. அங்கு அக்குதர் மாமா பொறுமை இழந்து போய்விடுவார்.

யசோ: இன்று உன்னை நானே குளிப்பாட்டப் போகிறேன்.

பலரா: ஹ.....ஹ.....ஹ......ஹா...!

யசோ: ஏன் சிரிக்கிறாய்? தாய்க்கு மகன் எப்போதும் குழந்தைதான். நீ வா கண்ணா...!

-காட்சி மாற்றம்-

- யசோதா கண்ணனை அழைத்துச் செல்கிறாள்.
- அழுதுகொண்டே கண்ணனை அலங்கரிக்கிறாள்.
- கோபியர்களும் சூழ்ந்து காணப்படுகின்றனர்.
- இக்காட்சிகளை அக்குதர் காண்கிறார்.
- கிருஷ்ணனின் நண்பர்கள் அவனைவரும் திரண்டு வந்து அச்சோகக் காட்சியினைக் காண்கின்றனர்.
- யசோதா இறைவனைத் துதித்தவளாக கண்ணனின் நெற்றியில் திலகமிடுகிறாள்.
- யசோதாவும் நந்தகோபனும் கிருஷ்ணனுக்கு உணவு ஊட்டுகின்றனர்.
- கண்ணன் தாய் தந்தையரை வணங்கி விடைபெறுகிறான். ரோகினி அவனுக்கு முத்தமிடுகிறாள்.
- கண்ணன் பசுக்களிடம் சென்று அவற்றின் நெற்றியில் திலகமிடுகிறான்.

இன்று இடம்பெற்ற முக்கியமான காட்சிகளின் தொகுப்புடன்....

-காட்சி முடிகிறது-

-தொடர்ந்து வரும்-

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் போகின்றன.



அருள் ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு, கொழும்பு–11.
தொ.பேசி: 436331


# வாகனத்திலும் வாழலாம்





உலகிலேயே மிகப் பெரிய மோட்டார் சைக்கிள் இது. சதாரண பெரிய மோட்டார் சைக்கிளைவிட இது ஏழு மடங்கு பெரியது. இத்துடன் ஒரு அறையும், திறந்த வெளி கார்ப்போட்டமாக அமர்வும் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பொருட்களை வைத்துக்கொள்வதற்கேற்ற சிறிய பொதி அறையும் உண்டு.

அதி சக்தி வாய்ந்த காடிலாக் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. 80 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. மோட்டார் சைக்கிள் என்றபோதும் நான்கு அதிபார சக்கரங்களால் உருவாகின்றது. இதனைச் செலுத்தும் சாரதிக்கும் தனியான சிறு அறை அமைப்பு உண்டு. கலிபோர்னியா, நியூபோர்ட் பீச்சில் உள்ள வாடகை வண்டிக்காரரான கிரெக் கவானா என்பவர் இந்த வண்டியின் உரிமையாளர். 5,000,000 டொலருக்கு இதனைத் தனக்கு விலையாகத் தந்துவிடும்படி ஒருவர் கேட்டபோது, தர மறுத்துவிட்டார். இதனை தினசரி 3,000 டொலருக்கு வாடகைக்கு விடுகிறார்.

## புதிது-புதிதாக



### அதிக தூரம் நோக்கலாம்

'நேசனல் ஜெனரல்போக்கஸ் 2000' என்ற தொலை நோக்கி அதிக தூரத்துக்கப்பாலுள்ள காட்சிகளையும் மிகவும் அருகே கொண்டுவந்து தத்ரூபமாகக் காட்டக்கூடிய தன்மையைக் கொண்டது. 40 அடி தூரம் முதல் அதற்கு அப்பால் சாதாரண கண்ணுக்கெட்டாத தொலை தூரம் வரை மிகத் தெளிவான காட்சியினை இத்தொலை நோக்கி, மதுந்த கண்காணாமல் காவல்லது.

### பறவைக்கும்-வலிக்காமல் விரட்டும் சாதனம்

விமான போக்குவரத்தில் சில பறவைகள் பல இடையூறுகளை ஏற்படுத்தி விடுகின்றன. ஒரு விமானத்திலுள்ள இயந்திரங்கள் பறக்கும்போது, ஆவப்புறக் காற்றை வேகத்தில் உள்ளே இழுக்கும். அப்போது அதே வழியில் பறக்கும் பறவை காற்றில் உள்ளே இழுக்கப்படும் போது இயந்திரத்தில் அவை சிக்கிக் கொண்டால் விபத்து ஏற்படும்.



இங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டனிலுள்ள பெரிய சர்வதேச விமான நிலையத்தில் பறவைகளை துரத்தியடிக்கக்கூடிய சாதனத்தை நிறுவியுள்ளனர். பறவைகளுக்குச் சிறிது ஏற்படாத வகையில் இந்தச் சாதனம் பறவைகளை விமானத்தின் அருகில் வராமல் விரட்டுகிறது.



### மடித்துவிடலாம் வசதி

இந்த துவிச்சக்கர வண்டி அப்படியே மடித்து எடுத்துச் செல்லக்கூடியது. எங்கும் கொண்டு செல்லக் கூடியது. பெர்னார்ட் ... 30 இறாத்தல் ... சைக்கிள்களின் ... இவ்வுடையன. ... இந்த வண்டி ... வெகுவாக ... ஒன்று கூறுகிறது.

# ஆயத்தமாவது ஆளை அடிக்கவல்ல!



சமோ மல்யுத்த வீரர்களான இரு மாமிச மலைகளுக்கும் சண்டை போடுவது அலுத்துவிட்டது. அதனால் பேஸ்போல் விளையாட்டில் இறங்கிவிட்டார்கள். இருவரும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள். வஞ்சகம் இல்லாமல் வளர்ந்த உடம்புகள்.




இலக்கம் 88/14 ... தினமுரசு பதிப்பகத்தால் 29, வெல்லவ, ... உள்ள ... அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.